# திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு

காட்டும்

# அறிவியலும் ஆன்மிகமும்




நூலாசிரியர்கள்

திி.லெ. சுபாஸ் சந்திர போஸ், அனிதாகுமார்,

தமிழ்ச்செம்மல் மா.பாண்டுரங்கன்,

பெ.இராமலிங்கம், வ.ஜெயகிருஷ்ணன்.

# திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும்



*நூலாசிரியர்கள்*
*தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்,*
*அனிதா குமார், தமிழ்ச்செம்மல் மா.பாண்டுரங்கன்,*
*பெ.இராமலிங்கம், வ.ஜெய்கிருஷ்ணன்.*

*வெளியீடு:*
*தொ(ல்)லியல் ஆய்வு மையம்,*
*திருச்சிராப்பள்ளி-620 001.*
*2019*

## நூல் குறிப்புக்கள்

நூலின் பெயர் : திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும்

ஆசிரியர்கள் : தி.லெ. சுபாஸ் சந்திர போஸ், அனிதா குமார், மா.பாண்டுரங்கன்,பெ.இராமலிங்கம், வ.ஜெய்கிருஷ்ணன்.

உரிமை : தி.லெ. சுபாஸ் சந்திர போஸ்

மொழி : தமிழ்

பொருள் : தொ(ல்)லியல்-மொழி, அறிவியல், ஆன்மிகம்

பதிப்பு : முதல் பதிப்பு மாசி, 2019, இரண்டாம் பதிப்பு 2022

நூல் அளவு : 14.0 செ.மீ 21 செ.மீ.

பக்கங்கள் : 100

ISBN : 9-781-513-630-274

விலை : 150/=

அச்சிட்டோர் : தி பிரிண்டிங் ஹவுஸ், எண்: 6, ரேஸ் கோர்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி- 620 023.

வெளியீடு:

தொ(ல்)லியல் ஆய்வு மையம்,

சந்திரபோஸ் அறக்கட்டளை உட்பிரிவு

பதிவு எண்:4/94/2015

3/43.பி.புது ரெட்டித் தெரு, பீமநகர், திருச்சிராப்பள்ளி-620 001.

கைப்பேசி எண்: 9080650420.

மின்னஞ்சல்:archaeoaymbolist@gmail.com

முன் அட்டைப்படம் வடிவமைப்பு: தி.லெ. சுபாஸ் சந்திர போஸ்.

## இறை வணக்கம்


*தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்*

*தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்*

*தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்*

*தானே தடவரை தண்கடல் ஆமே-திருமந்திரம்- 10*

*பொருளுரை: இறைவன் ஒருவனே. அவனே விரிந்து அகன்ற மண்ணுமாகவும், உயர்ந்து பரந்த வானமாகவும் இருக்கின்றான். சுட்டெரிக்கும் அக்னியாகத் திகழும் இவனே சூரியனாகவும் சந்திரனாகவும் உள்ளான். மழையாய் பொழிந்து உலகின் வாட்டத்தைப் போக்கும் தாயாக இருந்து தண்ணருள் புரியும் இவனே, மாமலையாகவும் மாகடலாகவும் உள்ளான்.*



**முனைவர் ர.பூங்குன்றன்.**
தொல்லியல் உதவி இயக்குநர் (ஓய்வு) தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை, காட்பாடி, வேலூர்.

## அணிந்துரை

பெருந்தகை நண்பர் சுபாஸ் சந்திர போஸ் அவர்கள் எழுதிய திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும் என்ற நூலை வாசிக்கும் பேறு பெற்றேன்.

திருவெள்ளறை பெருங்கிணறு பற்றி அவர் செய்துள்ள ஆய்வு குறிப்பிடத்தக்கது, மிகவும் ஆழமானது. சுவத்திக் கிணறு என்று பொருத்தமற்றுவிட்ட இக்கிணறு சுவத்திகக் குறியீட்டுடன் பெற்றுள்ள தொடர்பு குறிப்பிடத்தக்கது.

படிகள் நேராக அமைத்தால் நீண்டு போய்விடும் என்பதால் வலது பக்கம் மடக்கி அமைத்தனரா என்ற கேள்வியும் எழுகின்றது.

பாரதி குயில்பாட்டின் இறுதியில் வேதாந்த பொருள் விழித்துரைப்பீர் எனப் பாடினார். பல ஆய்வாளர்கள் குயில்பாட்டில் புதைந்துள்ள வேதாந்தப் பொருள் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர்.

நண்பர் போஸ் அவர்கள் யாரும் அச்சப்பட்டு தயக்கம் காட்டும் குறியீட்டாய்வில் துணிச்சலாக ஈடுபட்டு வருபவர். உலகம் முழுவதும் உள்ள குறியீடுகளைப் பற்றியும், சிந்து சமவெளி முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள், எழுத்துக்கள் பற்றியும் ஆழமாக ஆய்வு செய்து வருகிறார். குறியீடுகள் பற்றிய அவர் முயற்சிகள் திருவினை ஆக்கும்.

சுவத்திக் பற்றிய பல்வேறு அகராதிகள், ஆய்வுகள் ஆகியவை பற்றிய முடிவுகளை எடுத்துக் காட்டி அவற்றின் குறை நிறைகளை ஆய்வு செய்து தமது முடிவுகளையும் காட்டியுள்ளார். குறியீடுகள் பல ஆயிரம் ஆண்டுகள் வழக்கத்தில் உள்ளன. அவற்றிற்கு காலந்தோறும், தேசங்கள் தோறும் பொருள் மாற்றம் பெற்று வருகின்றன. அதனால் எந்த ஒரு குறியீட்டிற்கும் நிரந்தர பொருள் கூறுவதில் சிக்கல்கள் உள்ளன. இந்தியா சுவத்திக சின்னத்தை தூக்கி பிடித்துக்கொண்டு நிற்கிறது. ஆனால் பிற சமயங்களும் இந்த சுவத்திகத்தைத் தங்கள் சின்னமாக வரித்துக் கொண்டுள்ளன.

சுவத்திகத்தில் உள்ள நான்கு மடங்கிய கோடுகள் உயிரின் நான்கு கதிகளைக் (பரகதி, தேவகதி, மனிதகதி, நரககதி) குறிப்பிடுவதாகக் கொள்வர். ஆனால் நண்பர் போஸ் அவர்கள் உபநிடதக் கருத்துக்களை மேற்கோள் காட்டி விளக்குகிறார்.

இட்லரோடு தொடர்புடைய சுவத்திகம் பலநாடுகளின் வெறுப்புக்குரிய குறியீடாகக் கருதப்பெற்றது. ஆனால் இட்லர் அந்தக் குறியீட்டைத் தொல் (இயற்கையான) பழங்கால ஓவியத்திலிருந்து எடுத்துக் கொண்டார் என்பது வரலாறு கண்ட உண்மை.

ஒரு குறியீடு மனித வாழ்க்கையில் போற்றுதலுக்குரிய குறியீடாகவும், வெறுப்பதற்குரிய சின்னமாகவும் கருதப்பட்டுள்ளது. அதனால் குறியீடுகள் நிரந்தர பொருளைப் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அசோகர் காலம் முதல் **திசன்** என்னும் சொல் சுவத்திக் குறியீட்டால் குறிக்கப்பெற்றது. நண்பர் போஸ் அவர்கள் உபநிடதத்தின் துணை கொண்டு சுவத்திக் குறியீட்டை விளக்க முனைகிறார். அவர் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

இந்நூலில் சுவத்திக கிணற்றின் அனைத்து வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்தும் வகுத்தும் பிறர் கோள் மறுத்தும் தன்கோள் நிறுவியும் ஆய்வு செய்துள்ளது போற்றுதலுக்குரியது. பெருங்கிணற்றின் வரலாற்றுச் சிறப்பு, அதனை உருவாக்கியர் பெருமை, மீண்டும் புதுப்பித்தவர் பெருமை ஆகியவற்றை ஆற்றலொழுக்காக எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மார்ப்பிடுகு பெருங்கிணறு என்ற பெயர் பற்றிய ஆய்வு குறிப்பிடத்தக்கது. நீராடுதல், மனிதனைப் புதுமையாக்கும், புதுப்பிறவியைத் தரும் என்ற நம்பிக்கை சிந்து வெளியிலிருந்து இன்றைய மகாமகக் குளம் வரை நிறுவப் பெற்றுள்ளது. அந்த வகையில் இந்தப் பெருங்கிணறு புண்ணிய நீராட்டுக்கென உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும்.

பெருங்கிணறு என்றச் சொல்லே இராசராசாவிற்குரியது என்பதை வலியுறுத்தும். இராசராசப் பெருஞ்தச்சன், பெருந்தட்டான், மகேந்திர பெருமருத்துவன் போன்ற பெயர்கள் இந்தக் கருத்தினை வலியுறுத்தும்.

நண்பர் போஸ் அவர்களும் அவரது சக ஆய்வாளர்களும் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுதலுக் குரியது. இன்னும் பல நூல்களை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். வாழ்த்துக்கள்.

அன்பன் -முனைவர் ர.பூங்குன்றன்.



வரலாற்று வித்தகர், வரலாற்றுப் பேரொளி, வரலாற்றுச் சிற்பி, களஞ்சியச் செம்மல், தமிழக வரலாற்று மேதை, பேராசிரியர்- **ம. இராசசேகர தங்கமணி**

## அணிந்துரை

தொன்மைக் குறியீட்டு வித்தகர், அறிவியல் ஆன்மிக விஞ்ஞானி திரு. தி.லெ. சுபாஸ் சந்திர போஸ் அவர்களை நான் பல்லாண்டுகளாக நன்கறிவேன்.

பல வரலாற்றுக் கருத்தரங்களில் இவரது கருத்தாழம் மிக்க ஆய்வுக் கட்டுரைகள் வரலாற்றைப் புரட்டிப் போடும் வகையில் அமைந்திருந்தமை கண்டு வியந்துள்ளேன்.

தமிழகத்தின் கண்ணுள்ள பல திருக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் எதனைக் குறிப்பிடுகின்றன என்பது பலகாலம் மர்மமாகவும், புரியாத புதிராகவும் இருந்தன.

இந்நிலையில் இக்குறியீடுகளை ஆய்ந்து வெளிநாடுகளில் காணப்படும் குறியீடுகளுடன் ஒப்பிட்டுணர்ந்து, இவை வெளிப்படுத்தும் செய்திகள் யாவை என்பதனை விளக்கிய பெருமை ஆய்வாளர் சுபாஸ் சந்திர போஸையே சாரும்.

இக்குறியீடுகள் உணர்த்தும் உண்மைகளை இவர் தமிழ், ஆங்கில நாளேடுகளின் வாயிலாக வெளியிட்டதனை வாசகர் பலர் நன்கறிவர்.

அதற்கோர் எடுத்துக்காட்டாக கங்கை கொண்ட சோழபுரம் சிவன் கோயிலில் காணப்படும் பிரம்மதரிசன குறியீட்டின் சிறப்பை நாளேடுகளில் தாங்கள் படித்தமை நினைவிருக்கலாம்.

இவர் பல நூல்களின் ஆசிரியர். இவரது ஆடு புலி விளையாட்டும் ஆத்மசோதி குறியீடும், உருவதிகாரம், திருக்கோயில், திருக்குறியீடுகள், தொ(ல்)லியல் அந்தரங்கம், The Kizhvalai Rock Art, Ancient Thamizh - The Faculty of Harappan Symbols and scripts ஆகிய நூல்கள் புதுமையான வியக்கத்தக்க செய்திகளைத் தாங்கி வெளிவந்ததைப் பலரும் நன்கறிவர்.

கடந்த 2004-ஆம் ஆண்டு நான் அமெரிக்காவில் இருந்தபோது சிகாகோ பல்கலைக் கழகத்தில் கலந்து கொண்டடோர் சிலர் திரு.போஸின் குறியீடுகள் ஆய்வின் சிறப்பைப்பற்றி என்னிடம் குறிப்பிட்டமை இன்னும் என் மனதில் பசுமையாக உள்ளது.

அனிதா குமார், மா.பாண்டுரங்கன்,பெ.இராமலிங்கம் வ.ஜெய்கிருஷ்ணன் ஆகியோருடன் இந்நூலாசிரியர் இணைந்து வெளியிடும் திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும் எனும் இந்நூலை நான் ஒருமுறைக்கு இருமுறை ஆழ்ந்து படித்துப் பார்த்தேன்.

நான் பலதடவை திருவெள்ளறை சுவத்திக கிணற்றையும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களையும் பார்த்துள்ளேன்.

இதன் அமைப்பும் கலை சிறப்பும் என்னை பெரிதும் கவர்ந்தது. ஆனால் இந்நூலைப் படித்த பிறகு தான் அதில் அறிவியல் முக்கியத்துவமும், ஆன்மிகச் சிறப்பும் பொதிந்து கிடப்பதை உணர்கிறேன்.

இந்நூல் திருவெள்ளறை, மார்ப்பிடுகு பெருங்கிணறு ஆகியவற்றின் பல்வேறு பெயர்களையும், ஸ்ரீ எனும் எழுத்தின் பல்வேறு சிறப்புக்கள் பற்றியும் விளக்கியிருப்பது பாராட்டுக்குரிய செய்தியாகும்.

வரலாற்றுப் பேராசிரியராகிய நான், ஹிட்லர் சுவத்திக சின்னத்தை தன் கொடியில் பொறித்திருந்தான் என்பதை அறிவேன். ஆனாலும் இச்சின்னம் தோன்றிய காலம் 11,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பது எனக்கு ஒரு புதிய செய்தியாகும்.

சுவத்திக சின்னத்தின் கருத்தும் பயன்பாடும், தாமரை மலர் ஆகிய தலைப்புக்களில் கூறப்பட்டுள்ள ஆய்வுக் கருத்துக்கள் இந்நூலின் பெருமையை உயர்த்திப் பிடிக்கின்றன.

மார்ப்பிடுகு என்பது தைத்திரீய உபநிடதம், வாழ்க்கைக் கல்வி சிஷாவல்லி குறிப்பிடும் ஒளிப்பொருள் சிந்தனையாகிய ஆறாவது அறிவாகிய மனைதை ஒரு நிலைப்படுத்தியதன் வெளிப்பாட்டைக் குறிப்பிடுவதாகக் கருதலாம் .

குறியீடுகள் என்பதற்கு குறிப்பாக அகத்தில் உள்ள காணமுடியாத ஆன்மாவை, புறத்துடன் தொடர்புடைய ஐந்தறிவுகளோடு மனம் எனும் ஆறாவது அறிவைக் கொண்டு அறியப்படும் வகையில் சூட்சுமமாக அறிவிக்கும் திறன் படைத்தவை எனப் பொருள்படும்.

**உடல் ஒரு கிண்ணம், மனமும் புத்தியும் அதில் நிறைந்துள்ள தண்ணீர், இந்தத் தண்ணீரில் சச்சிதானந்த சூரியனின் உருவம் விழுகிறது. இந்தப் பிரதிபிம்ப சூரியனை தியானம் செய்வதாலும், இறையருளாலும் உண்மையான அச்சூரியனின் தரிசனம் கிடைக்கிறது.** முதலான வைரவரிகள் நம் ஆன்மிக உணர்வை விரிவுபடுத்தப் பெருந்துணை புரிகின்றன.

இக்கிணற்றின் அனைத்து விபரங்களையும் அதாவது அமைப்பு, படிக்கட்டுக்கள், ஒன்று முதல் பத்துவரையிலான எண்கள், கற்பத்திகள், புடைப்புச் சிற்பங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றைப்பற்றி விளக்கமாகவும் அனைவரும் எளிதில் அறிந்துணரும் வகையிலும் சித்தரித்திருப்பது ஆசிரியர்களின் நுண்மான் நுழைபுலத்தையும், பரந்த அறிவாற்றலையும் வெளிப்படுத்துகின்றன. பதினாறு பகுதிகள், பத்துவிரல் கணக்கு, யார் அந்த மார்ப்பிடுகு-ஆகிய தலைப்புக்களில் கூறப்பட்டுள்ள ஆய்வுச் செய்திகள் இந்நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன.

**ஸ்ரீ கண்டார் காணா உலகத்தில் காதல் செய்து நில்லாதேய்..** என்னும் கல்வெட்டுப் பாடலுக்கு ஆன்மிக அடிப்படையில் பொருள் கூறியிருப்பதும், அதற்கு ஆதாரமாகப் பல உபநிடதக் கருத்துக்களையும், தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களையும், மகான்களின் கருத்துக்களையும் எடுத்துக் காட்டியிருப்பது இந்நூலின் பெருமையை கொடுமுடிக்கு உயர்த்தியுள்ளது. இந்நூலில் காட்டப்பட்டுள்ள எண்ணிறந்த நூல்களைப் பார்க்கும் வாசகர்கள் இந்நூலாசிரியர்களில் குறிப்பாக அறியிவியல் ஆன்மிக விஞ்ஞானி திரு.போஸின் கடும் உழைப்பையும், ஆய்வுத் திறமையும் பாராட்டத்தான் செய்வர்.

**இயன்மொழி வாழ்த்து எனும் இன்னார் இன்னது கொடுத்தார்; அவர் போல் நீயும் கொடுப்பாயாக-** எனக் கூறும் புறத்திணையின் பகுதியான புறத்துறையின் வரிகளை எடுத்துக் காட்டி, எந்த ஒரு நாடு தன் பண்பாட்டையும் வரலாற்றையும் மறந்து விடுகிறதோ அந்த நாடு தன்னையே மறந்து விடும்- என்பதைச் சுட்டிக் காட்டி, இந்த வரலாற்றுச் சின்னத்தை மேலும் விரிவாக ஆய்வு செய்து, இதனை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகவும், உலகப் பாரம்பரியச் சின்னமாகவும் அறிவிக்க தமிழாய்வு மையங்கள் முன்வரவேண்டுமென குவிந்த கரங்களுடன் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம் என நிறைவுப் பகுதியில் குறிப்பிடுவது முற்றிலும் நியாயமான கோரிக்கையே.

இவர்கள் இதுபோல இன்னும் பலநூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கவேண்டுமாய் வாழ்த்துகிறேன். இதுவரை இவர்களது நூல்களைப் படித்தறிந்த வாசகர்கள் இந்நூலுக்கும் ஆதரவு தரவேண்டும் எனவும் அன்புடன் வேண்டுகிநேன்.

அன்புடன் பேராசிரியர் - ம. இராசசேகர தங்கமணி.



**கி.ஸ்ரீதரன்,எம்.ஏ.,**

தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் (ஓய்வு),

தமிழ் நாடு தொல்லியல் துறை,

324. முதல் தெரு, நடேசநகர், விருகம்பாக்கம், சென்னை-92

## அணிந்துரை

தமிழகத்திலுள்ள திருக்கோயில்கள் பலவற்றில் குறிப்பாகத் திருக்கோபுர நுழைவாயில் நிலைகால் படிகள், திருச்சுற்றுக்கள், மண்டபங்களின் தரை, மண்டபக் கல்த்தூண்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் பல ஆராய்ச்சியாளர்களால் அவற்றின் சிறப்பு என்ன? என்ன நோக்கத்திற்காக அங்கே பொறிக்கப்பட்டுள்ளன என்பதைக் கவணிக்காமல் விட்ட நிலையில் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த தொன்மைக் குறியீட்டாய்வாளர் தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் அக்குறியீடுகளைப் பற்றிய புதிய ஆய்வினை துவக்கி வைத்த பெருமை அவருக்கு உண்டு.

திருச்சிராப்பள்ளி மாநகருக்கு அருகே உள்ள திருவெள்ளறைக் கோயிலின் தென்பகுதியல் காணப்படும் சுவஸ்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணறு என்று போற்றப்பட்ட கிணற்றின் தத்துவ-வரலாறுச் சிறப்பினை ஆய்வு செய்து திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும் எனும் இந் நூலை எழுதியுள்ளார்.

சுவஸ்திக வடிவம் மிகத் தொன்மைச் சிறப்புடையது. அவ்வடிவம் அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த பானை ஓடுகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்றவற்றில் முக்கிய இடம் பெற்று விளங்குவதைக் காணலாம். மேலும் இது எட்டு மங்கலச் சின்னங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு பல்லவ மன்னன் தந்திவர்மனின் (கி.பி. 796-847) ஆட்சிக் காலத்தில் ஆலம்பாக்கம் விசயநல்லூழான் தம்பி கம்பன் அரையனால் எடுக்கப்பட்டது. இதன் பெயர் மார்ப்பிடுகு பெருங்கிணறு என்பது கல்வெட்டில் காணப்படுகிறது.

இங்கு காணப்படும் மற்றொரு கல்வெட்டில் இளமை நிலையாதது - பின்னர் அறம் செய்து கொள்ளலாம் என்று இல்லாமல் உடனே செய்யவேண்டும் என்பதைக் கூறும் பாடல் கல்வெட்டு அரிய தத்துவத்தை உணர்த்துகிறது.

கி.பி.13-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் இக்கிணறு இடிந்து போக அதனை குடந்தை வாணிகன் உய்யநெறி காட்டினான் என்பவன் சீர்படுத்தினான் என்பது மற்றொரு கல்வெட்டினால் அறியமுடிகிறது. கிணற்றின் விளிம்பில் பொறிக்கப்பட்டுள்ள முதல் இரண்டு கல்வெட்டுக்களின் எழுத்து அமைதி (வடிவமைப்பு) மிகவும் அழகானது.

மேலும் இக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் வரலாற்றுச் சிறப்பும் - தத்துவச் சிறப்பும் உடையதாக விளங்குகின்றன. மேலும் இக்கிணற்றில் இறங்கிச் செல்லும் படிக் கட்டுக்களில் 1 முதல் 10 வரை பல்லவர் கால எண்கள் இடப்பட்டுள்ளது சிறப்பு.

மங்கல சின்னமான சுவஸ்திக வடிவ அமைப்புள்ள இக்கிணறு திருவெள்ளறையில் மட்டுமே காணப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கிணற்றினை வரலாற்றுச் சின்னமாக அறிவித்து தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை போற்றி பராமரித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் அமைப்பு, கல்வெட்டுக்கள், அடிப்படைத் தத்துவச் சிறப்பு ஆகியவற்றைப் பற்றி மிகவும் சிறப்பாக எழுதிய ஆசிரியர்கள் தி.லெ.சுபாஸ் சந்திர போஸ், அனிதா குமார், மா.பாண்டுரெங்கன், பெ.இராமலிங்கம், வ.ஜெய்கிருஷ்ணன்ஆகியோர் பாரட்டுக்குரியவர் ஆவார்கள்.

மேலும் பல திருக்கோயில்கள் மற்றும் கல்வெட்டுக்களில் காணப்படும் குறியீடுகளின் சிறப்பினைப் பற்றி ஆய்வினைத் தொடர எனது நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்

அன்புடன், கி.ஸ்ரீதரன்



முனைவர் **இல.தியாகராஜன்,**

அரசு கலைக் கல்லூரி முன்னாள் முதல்வர், அரியலூர்.

## அணிந்துரை

தொன்மைக் குறியீட்டாய்வறிஞர் சுபாஸ் சந்திர போஸ் ஐயா அவருடன் அனிதாகுமார், மா.பாண்டுரெங்கன், பெ.இராமலிங்கம்,வ.ஜெய்கிருஷ்ணன் ஆகியவோருடன் இணைந்து எழுதியுள்ள திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும் என்னும் நூலைப் படித்து வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

திருவெள்ளறையில் உள்ள ஸ்வஸ்திக கிணற்றைப் பார்க்கவும் களஆய்வு செய்து அங்குள்ள கல்வெட்டுக்களைப் படிக்கவும் ஆன வாய்ப்பு 1980 இல் எனக்கு கிட்டியது. அப்போது தொல்பொருள் ஆய்வுத்துறையில் கல்வெட்டுப் பயிற்சி பெரும் மாணவனாக இருந்தேன்.

திருச்சிராப்பள்ளி, பொன்நகரில் அத்துறை அலுவலகம் இருந்தது. அதில் கல்வெட்டியியல் நிறுவன ஆசிரியர் திரு.சு.இராஜகோபால் அவர்கள் தலைமையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சி பெறுவதை முன்னிட்டுத் தங்கியிருந்த போது எங்களை அக்கிணற்றைப் பார்க்க அழைத்துச் சென்றனர்.

அப்போது அக் கிணற்றிலிலுள்ள பல்லவ மன்னர் தந்திவர்மன் மற்றும் போசாள மன்னன் வீரராமநாதர் காலக் கல்வெட்டுக்களையும் அங்குள்ள தமிழ் எண் குறியீடுகளையும் சிற்பங்களைப் பற்றியும் கண்டும் படித்தும் அக்கிணறு பற்றிய மாமியார் மருமகள் கதைகளைக் கேட்டு மகிழ்ந்தோம்.

ஆனால் அக்கிணற்றின் ஸ்வஸ்திக வடிவம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொன்மையான நாகரிகங்களான கிரேக்கம், சுமேரியம், சிந்துசமவெளி மக்களால் இக்குறியீடு அறியப்பட்டு பயன்படுத்தப்பட்டதையும் அதற்கு ஆழமான அறிவியல் ஆன்மிக விளக்கங்கள்

இருப்பதையும் உலகத்திலேயே இந்த வடிவத்தில் அமைக்கப்பட்ட விஞ்ஞானக் கிணறு இது ஒன்றுதான் என்பதையும் இந்நூல் வாயிலாக அறியும் போது வியப்பின் உச்சியை அடைந்தேன்.

இக்கிணற்றில் பொறிக்கப்பட்டுள்ள 1 முதல் 10 வரையிலான பத்து தமிழ் எண்கள் தமிழகத்தில் ஒரே இடத்தில் வேறு எங்கும் காணக்கிடக்காதது என்பதும் இந்த எண்களுக்கு அறிவியல் ஆன்மிக விளக்கத்தை பரம்பொருளோடு ஒப்பிட்டு விளக்கி இருப்பதும் புதிய செய்திகள் ஆகும்.

இங்குள்ள கிணறு தந்திவர்மன் காலத்தில் இரண்டாம் நந்திவர்மனிடம் அமைச்சனாகப் பணியாற்றிய ஆலம்பாக்கம் விஜயநல்லூழான் என்பவரின் தம்பி கம்பன் அரையன் என்பவரால் நந்திவர்மனின் மகன் தந்திவர்மனின் (796- 846) நான்காம் ஆட்சியாண்டில் (கி.பி.800) கட்டத் தொடங்கி ஐந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.801) அப்பணி நிறைவு பெற்றதை இங்குள்ள கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது.

இதன்பின் 428 ஆண்டுகள் கழித்து வெள்ளப் பெருக்கினால் இக்கிணறு சிதைந்து, தூர்ந்து சிதைந்து போன நிலையில் அதனை போசள மன்னன் வீரராமநாதனின் (1254-1294) இருபத்தைந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.1279) புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. இப்பணியை குடந்தையைச் சேர்ந்த சோனை ஊரான் உய்ய நெறிக்காட்டினான் என்ற வாணிகர் செய்துள்ளார்.

ஆனால் இந்நூலில் முற்காலத்தில் வாணிகன் செய்த இக்கிணறை தந்திவர்மன் காலத்தில் கம்பன் அரையன் ஸ்வஸ்திக வடிவமைத்து கட்டியிருக்கக் கூடும் எனக் கூறப்பட்டுள்ளது. இது பொருந்தி வருவதாக இல்லை.

அதே போல தந்திவர்மன் காலத்தில் வாழ்ந்த மார்ப்பிடுகு என்றப் பெயரில் கட்டப்பட்டிருக்கலாம் என்னும் கருத்தையும் தெரிவிக்கிறது.

ஆனால் விடேல்விடுகு, பெரும்பிடுகு, மார்ப்பிடுகு என்னும் பட்டப்பெயர்களை பல்லவ மன்னவர்கள் வைத்திருந்தனர் என்பதைக் கல்வெட்டுகள் தெளிவாகக் கூறுகின்றன.

அரியலூர் அருகே உள்ள ஆலம்பாக்கம் தந்திவர்மமங்கலம் என்றழைக்கப்பட்டதையும் தந்திவர்மன் இங்குள்ள ஏரியை இம்மன்னன் பட்டப்பெயரான மார்ப்பிடுகு என்றப் பெயரில் அழைக்கப்பட்டதையும் காண்கிறோம்.

அதே போல இம்மன்னர்களின் கீழே அதிகாரிகளாக இருந்த கம்பன் அரையன் ஸ்வஸ்திக வடிவத்தில் அக்கிணற்றை தன் மன்னனின் பட்டப் பெயரான மார்ப்பிடுகு என்பதைச் சூட்டி மார்ப்பிடுகு பெருங்கிணறு என அழைத்தான் என்பதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது என்று கொள்வதே சரியான விளக்கம் எனக் கருதுகிறேன்.

இந்நூல் நம் பண்டைய தமிழரின் அறிவியல், வானியல், வடிவியல் கணித அறிவு, ஆன்மிக சிந்தனை ஆகியற்றின் ஒருங்கிணைங்க ஸ்தூல வடிவச் சான்றாக இருப்பதை மிக அழகாக விளக்குகிறது.

இத்துறையில் ஆழ்ந்த புலமையும் அனுபவமும் உடைய தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் மற்றும் அவரது சக ஆசிரியர்களது கடுமையான உழைப்பும் உபநிடதங்கள் போன்ற செய்திகளைக் வெளிக்கொணர்ந்து எடுத்துச் செல்லும் ஆற்றலும் இந்நூலை மிகச்சிறந்த ஆராய்ச்சி நூலாக மிளிரச் செய்துள்ளது.

இவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்புடன்

முனைவர் இல. தியாகராஜன்

## ஆசிரியர் உரை

தமிழ் நாட்டில் மொழி, கணிதம், தத்துவம், வரலாறு போன்ற பல்வேறு துறைகளின் சிறப்புக்களைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் தொல்லியல் சான்றுகள் எண்ணிக்கையில் அடங்காதவை. அச்சான்றுகளில் ஒன்றே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்ச நல்லூர் தாலுகா, திருவெள்ளறையில் சுவத்திக வடிவத்தில், கட்டப்பட்டுள்ள மார்ப்பிடுகு பெருங்கிணறு. இக்கிணறு தமிழகத்தின் பாரம்பரிய மிக்க சின்னங்களில் ஒன்றாகும்.

இப்பாரம்பரிய மிக்க நினைவுச் சின்னம், தமிழக சிற்பக் கலைஞர்களின் அதியுன்னதமான படைப்புக்களில் ஒன்றாகும். இதிலுள்ள மிகச் சிறந்த சிற்பக் கலைத்திறனுடன் வடிவமைக்கப் பட்டுள்ள அழகிய புடைப்புச் சிற்பங்கள் கலையழகு மிக்கவை.

மேலும் சிற்ப சாஸ்திர விதிமுறைப்படியும், முற்றிலும் கருங்கற்களாலும் கட்டப்பட்டுள்ள இக்கிணற்றின் பிரமாண்டமான காட்சி காண்போரை வியப்படையச் செய்யும் என்றாலது மிகையாகாது. இக் கிணற்றின் கட்டமைப்பு, அதில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள், கல்வெட்டுக்கள், குறியீடுகள் ஆகிய வற்றுடன் குறிப்பாக ஒன்று முதல் பத்து வரையிலான எண்களின் வாயிலாக குறிப்பால் உணர்த்தப்படும் அறிவியல், ஆன்மிகத் தத்துவங்கள் நிறைந்துள்ளன.

அவற்றை யாம் ஆராய்ந்தறிந்த போது எமக்குள்ளே **தன்னுணர்வு** உதயமாயிற்று. **முன்னுண்டேலுண்டு மிக்கது, உலகமறிய வைம்மின்னெய்** எனும் பொன்னெழுத்துப் பொறிப்புக்களே அத்தன்னுணர்வு உதயமாவதற்கும், இந்நூல் உருவாகியதற்கும் மூல காரண காரியமாகும். அக்காரணக்காரியங்களில், கி. ஸ்ரீதரன், தமிழகத் தொல்லியல் துறை இணை கண்காணிப்பாளர் (ஓய்வு), சிற்பக் கலாநிதி ஸ்தபதி வே. இராமன், தமிழகத் தொல்லியல் துறை (ஓய்வு), ஆகிய இருவரின் வழி காட்டுதலால் உருவாக்கப்பட்டதென்பது இந்நூலின் சிறப்பு அம்சமாகும்.

இப்பாரம்பரிய நினைவுச் சின்னத்தைப் பாதுகாத்து வரும், தமிழக அரசுக்கும், தொல்லியல் துறையினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உலக மக்கள் அனைவருக்கும் அவர்களது தெய்வீகத் தன்மையை சுட்டிக்காட்டி, அத்தெய்வீகத் தன்மையை அவர்களாகவே எவ்வாறு அறிவது, அங்ஙனம் அறிந்தவற்றை அனுபவரீதியில் எவ்வாறு அறிந்துணர்வது என்பதை போதித்தும் தவ வாழ்க்கையைக் கடைபிடித்து வாழ்ந்து காட்டியும் வருபவரான அடியோனின் ஞான குருவின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

தொன்மைக் குறியீடுகள் மற்றும் கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுப் பணியை எனது ஆழ்மனதிலே வித்திட்டவரும், ஆய்வுப் பணியில் சின்னஞ்சிறு பாலகனாகிய எனது இருகரங்களையும் பற்றி வழிநடத்திக் கொண்டிருக்கும், எனது ஆசான் முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களுக்கு எனது குரு வணக்கங்கள்.

எமது மகள் திருமதி அனிதா குமார், வரலாற்றுத் துறை ஆய்வளர்களும் அடியோனின் உடன் பிறவா சகோதரர்கள் தமிழ்ச்செம்மல் மா. பாண்டுரங்கன், பெ.இராமலிங்கம், வ.ஜெய்கிருஷ்ணன், ஆகியயோரின் துணையுடன் இந்நூலைப் படைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தகவல் மற்றும் களஆய்வுக்கு உதவிய தொல்லியல் ஆர்வளர்களான வெ.வெங்கடேசன், வ.வெங்கடேசன் ஆகிய இருவருக்கும், ஆய்வுக்கு உதவிய பல்வேறு நூல்களின் ஆசிரியர் பெருமக்களுக்கும், அவர்களில் குறிப்பாக சென்னை, மைலாப்பூர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் அச்சிட்டு வெளியிடும் உபநிடதங்களுக்கு தமிழில் விளக்கமளிக்கும் சுவாமி ஆசுதோஷானந்தர் அவர்களுக்கும், திருவெள்ளறை என்ற நூலாசிரியர் ஐயா திரு. வெ.வேதாசலம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்நூலின் அச்சுப் பிரதியைத் திருத்தி, செம்மைப்படுத்திய முனைவர் பி. தமிழகன், திருச்சி, ஈ.வே.ரா கல்லூரி, தமிழ்த் துறை பேராசிரியர், திரு. சங்கர நாராயணன், தமிழ்ச்செம்மல் மா. பாண்டுரங்கன், ஆகியோருக்கும் இந்நூலை அச்சிட்ட திருச்சி பிரிட்டிங் ஹவுஸ் நிறுவனத்துக்கும், வெளியிடும் சந்திர போஸ் அறக் கட்டளையின் உட்பிரிவான தொ(ல்)லியல் ஆய்வு மையத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்பன், தி.லெ. சுபாஸ் சந்திர போஸ்.

# இந்நூலின் மையக்கரு

உலகில் மானிடப் பிறவி எடுத்த வாழ்ந்து வரும் நாம் அனைவரும் பிறந்த நாள் முதல் இறக்கும் தருணம் வரை சுகபோகங்களைத் தரும் இன்ப அனுபவங்களை தேடியவாறே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த சுகபோகங்களை அடைய இருவகையில் தேடுகிறோம் அதாவது முயற்சிக்கிறோம்.

அவ்விரு தேடுதல்களில் (தேடல்களில்) முதலாவது **புறத்தேடல்**, இரண்டாவது **அகத்தேடல்.** புறத்தேடல் பெரும் பாலும் **உடல் சுகத்தையும்**, அகத் தேடல் முற்றிலும் **ஆன்மா சுகத்தையும்** அளிப்பவை.

புறத்தேடல்களின் வாயிலாகப் பெறுவது உடலைச் சார்ந்த **சிற்றின்ப அனுபவம்**. அகத்தேடல்களின் வாயிலாகப் பெறுவது ஆன்மாவை சார்ந்தப் **பேரின்ப அனுபவம்**, அதன் வாயிலாகப் பெறுவது ஆன்ம ஞானம் (ஆன்மாவைப் பற்றிய அறிவு) என்பது மாண்புடையார் எனப் பொருள்படும் ஆன்றோர்கள் வாக்கு.

புறத்தேடல் வாயிலாக ஏற்படுவது வெளிப்படையான பொருள் எனும் புறப்பொருள் மீது உண்டாகும் **புறப்பற்று.** அகத் தேடல் வாயிலாக ஏற்படுவது அகவொழுக்கமாகிய பொருள் எனும் அகப் பொருள் மீது உண்டாகும் **அகப்பற்று.**

புறப்பற்றின் விளைவு **ஆசை(கள்)**, அகப்பற்றின் விளைவு **நிறைவு. ஆசைகள்** எப்போதும் முழுமை அடைவதில்லை. முழுமை அடையாததன் விளைவு **அமைதியின்மை.** அதனால் ஏற்படுவது பெருந்துன்பமும், மறு பிறப்பும். **நிறைவு** என்பது முழுமை அடைந்த நிலை. முழுமை அடைவதன் விளைவு **பேரமைதி.** அதனால் ஏற்படுவது பந்தப் பாசங்களிருந்து நீங்கித் துய்க்கும் பேரின்பம் என்பது ஞானிகள் கண்டறிந்த **பேருண்மையும்,** அவர்கள் அறிவித்த **வீடுபேறு எனும் பரமுக்தி நிலையுமாகும்.**

நிறைவு + அமைதி + பேரின்பம்= **பிறவாநெறி**. அதாவது முழுமையடைந்த நிறைவால் விளையும் பிறவாநெறி எனும் மறு பிறப்பற்ற நிலை. இதையே உலகப்பற்று எனும் உமிநீங்கிய மீண்டும் விளையாத அரிசியின் நிலைக்கு ஒப்பான **தொலியல் நிலை** என்பர்.

மறுபிறப்பு, பிறவாநெறி ஆகிய இரண்டில் மனிதர்கள் விரும்புவது எது? இந்த கேள்விக்கு அனைவரும் கூறும் பதில் நிச்சயமாகத் **தொலியல் நிலை**யாகவே இருக்கும்.

இப்பதில் முழு நம்பிக்கையோடு கூடிய வைராக்கியத்தின் வெளிப்பாடாகவும், அனைவரது ஒருமித்த குரல்களின் பேரொலியாகவும் இருக்கும். எனவே ஒவ்வொரு மனிதரும் தத்தம் தோல் சுருங்கி, உடல் தளர்ந்து, மூப்படைந்து, இப்பூலோக வாழ்க்கையை நிறைவு செய்வதற்கு முன்னர், **ஏல்** எனும் பரமனை நோக்கி, இருகரங்ளையும் ஏந்தி, கண்ணீர் கசிந்துருக, பிறவாநெறி அருளை வேண்டி இறைவனிடம் யாசிக்க வேண்டும் என முன்னோர்கள் முழங்கியுள்ளனர்.

அதுவே மிகச் சிறந்த செயல் என்பதை **முன்னுண்டேலுண்டு மிக்கது** எனவும், அதனை **உலகமறிய வைம்மின்னெய்** என நம் கடமையை **ஶ்ரீ கண்டார்** எனத்துவங்கும் கல்வெட்டுப் பாடல் ஒன்று சுட்டிக் காட்டுகிறது. அக்கல்வெட்டு திருவெள்ளறையில் சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பரமாத்துமா எனும் பரம்பொருள் கணக்கற்ற தலைகளும், கண்களும், கால்களும் உடையவராக பூமியிலும், ஆகாயத்திலும், எங்கும் பரந்தும், விரிந்தும் நிறைந்துள்ளார்.

அப்பரம்பொருளின் பெருமைகள் **பத்து விரல்களால் எண்ணிக் கணக்கிடும்** கணித நூல் நியதியில் அடங்காது. எனினும் அப்பரம்பொருளைப் பற்றிய அறுதி உண்மைகளை ஆராய்ந்தறிவதும், அறிந்தவற்றை சொல் அலங்காரங்களோ, வார்த்தை ஜாலங்களோ ஏதுமின்றி எளிய நடையில் அனைவருக்கும் அறிவிக்கும் மிகச்சிறியதொரு முயற்சியே **திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும்** எனும் இந்நூலின் மையக் கருவாகும்.

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01 | திருவெள்ளறை | 19 |
| 02. | சுவத்திக | 25 |
| 03. | சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணறு | 36 |
| 04. | சுவத்திக வடிவ கிணற்றின் பெயர்கள் | 40 |
| 05. | குறியீடுகள் | 48 |
| 06. | ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் | 54 |
| 07. | கல்பத்திகளும் புடைப்புச் சிற்பங்கள் | 74 |
| 08. | கல்வெட்டுச் சாசனங்கள் | 81 |
| 09. | யார் அந்த மார்ப்பிடுகு? | 90 |
| 10. | நிறைவுரை | 92 |
|  | துணை நூல்களும் குறிப்புக்களும் | 96 |

÷

## திருவெள்ளறை

*திருச்சிராப்பள்ளி மாநகரத்தின் வடக்கு திசையில் அமைந்துள்ள துறையூரை நோக்கிச் செல்லும் மாநில நெடுஞ் சாலையில், 20 கி.மீ. தொலைவிலும், அங்கிருந்து இடது புறத்தில் 2 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது திருவெள்ளறை எனும் மகாகிராமம்.*

*இம்மகாகிராமத்தில் காணக்கிடக்கும் வரலாற்றுச் சுவடுகளே இதன் பழமையைப் பறைசாற்றும் வரலாற்றுச் சான்றுகளாகும்.*

***ஆதி திருவெள்ளறை, அடுத்தது திருப்பஞ்சீலி, சோதி திருவானைக்கா, கிளி சொல்லிக் காட்டியது திருவரங்கம்**- என நான்கு திருத்தலங்களை வரிசைப்படுத்திக் காட்டும் சொல்வழக்கு திருவெள்ளறையின் பழமைக்கு மற்றுமொரு சான்றாகும்.*

*தற்போதைய திருவெள்ளறை, மண்ணச்சநல்லூரை தலைமையிடமாகவும், காலவாய்ப்பட்டி மற்றும் சாலப்பட்டி ஆகிய இரண்டு ஊர்களைத் தன்னகத்தே கொண்ட ஊராட்சியில் மையமாகத் திகழ்கிறது. கிழக்கே அய்யம்பாளையம், தெற்கே தீரம்பாளையம் மற்றும் பூனாம்பாளையம், மேற்கே காட்டுக்குளம், வடக்கே சிறுபத்தூர் ஆகிய ஊர்களைத் திருவெள்ளறையின் நான்கு எல்லைகளாகக் குறிப்பிடலாம்.*

### பெயர்க் காரணம்

*திருவெள்ளறை எனும் இவ்வூரின் பெயரானது ஒரு காரணப் பெயராகும். இவ்வூரிலும் இதனைச் சுற்றியுள்ள பகுதி முழுவதிலும் **வெள்ளை** நிறமுடைய பாறைகளும் மற்றும் சிறுமலைகளும்/ குன்றுகளும் அதிக அளவில் நிறைந்துள்ளன. தமிழ் மொழியின் சங்க காலத்து நூல்களில் ஒன்றான புறநானூற்றில், **அறையும் பொறையும் மணந்தலைய**[1] என்பதில் அறை என்பதற்கு சிறுகுன்று அல்லது சிறுபாறை என்று பொருள்.*

வெள்ளை நிறமுடைய சிறிய பாறைகள் நிறைந்துள்ள காரணத்தால் இவ்வூர் (வெள்ளை + அறை) **வெள்ளறை** எனவும் **திரு** என்ற புனிதமான சொல்லை முன்னிருத்தி **திருவெள்ளறை** என்றப் பெயர் பெற்றுள்ளது.

மேலும், இவ்வூருக்கு **ஸ்வேதகிரி** [2] என்ற மற்றொரு பெயரும் இருந்துள்ளது. ஸ்வேதகிரி-என்பது ஒரு வட மொழிச் சொல். அச்சொல்லை ஸ்வேத(ம்) + கிரி எனப் பிரித்தால், **ஸ்வேத(ம்)** என்பதற்கு **வெண்மை** (அ) வெள்ளை, பாதரசம், **வெள்ளி**, வியர்வை, நீர்வஞ்சி, மாலிங்கம், வஞ்சிக் கொடி எனவும், **கிரி** என்பதற்கு **மலை அல்லது பாறை**, பன்றி, பிணையாளி, இலக்கணம் எனவும் பொருள் அறியலாம்.

ஸ்வேதகிரி என்பதும் வெள்ளறை என்பதும் ஒரே பொருள்படும் பெயர்ச் சொற்கள் என்றாலும் **வெள்ளறை** என்பதே தூய்மையானத் தமிழ் சொல்லாகும்.

மேற்கண்ட **அறையும் பொறையும் மணந்தலைய** என்ற பாடல் வரியே அதற்கான தக்கதொருச் சான்றாகும்.

### திருத்தலங்கள்

திருவெள்ளறையின் மையப்பகுதியில் செந்தாமரைக் கண்ணாழ்வார் (புண்டரீகாட்சப் பெருமாள்), தாயார் பங்கயச் செல்வியார் ஆகிய இருவரும் எழுந்தருளியுள்ள வைணவத் திருத்தலம் ஒன்றுள்ளது.

சூரியன் தென்திசை மற்றும் வடதிசையில் சஞ்சரிக்கும் தட்சணாயனம், உத்தராயனம் ஆகிய இரு காலங்களில் மாறி மாறி இறைவனைத் தரிசிக்கும் படியாக அமைக்கப்பட்டுள்ள கிழக்கு நோக்கியுள்ள கற்படிகளும், மேலே உள்ள கர்ப்பகிரகமும் இத் திருத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

நூற்றி எட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்றான இத்திருத்தலத்தை வைணவ ஆச்சாரியர்களான பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் போற்றிப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

உய்யக்கொண்டாரும், எங்களாழ்வாரும் அவதரித்ததும் இத்திருத்தலம் அமைந்துள்ள பகுதியாகும். ஸ்ரீ இராமநுஜர் இங்கு தங்கியிருந்த காரணத்தால் இத்திருத்தலத்தின் பெருமை மேலும் உயர்த்திக் கூறப்படுகிறது.

மேலும், பல காவல் தெய்வங்களின் ஆலயங்களும் திருவெள்ளறையைச் சுற்றியுள்ள பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறைந்துள்ளன.

**குடைவரைக் கோயில்களும், குறியீடுகளும்**

திருவெள்ளறையிலுள்ள வைணவ திருதலத்தின் மூன்றாவது திருச்சுற்றின் தென்திசையில் தெய்வத் திருமேனிகள் ஏதுமில்லாத குடைவரைக் கோயில் ஒன்றுள்ளது.

இவ்வூருக்குக் கிழக்கே வடஜம்புநாதர் கோயில் என்றழைக்கப்படும் மற்றொரு குடைவரைக் கோயிலும் உள்ளது. இங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் சாசனங்கள் வாயிலாக இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் திருவானைக்கா பெருமானடிகள் என்று அறியமுடிகிறது.


இக்குடைவரைக் கோயிலின் மதில் சுவரில் காணப்படும் சப்தமாதர்களின் புடைப்புச் சிற்பம் அரியதொரு சிற்பமாகும்.


கீழ்த்திசை நோக்கியுள்ள அன்னையின் கர்ப்பக்கிரகத்தின் நிலைக்கால் படியில் திருக்குறியீடு ஒன்று காணப்படுகிறது.

இக்குடைவரை கோயில் அமைந்துள்ள பாறையில் மேலும் சில குறியீடுகள் மிகவும் பொரிந்து போன நிலையில் காணப்படுகின்றன.

**குடைவரைக் கோயிலின்** அருகில் சிதிலமடைந்த நிலையில் காணப்படும் (திரு முருகப் பெருமானின்) ஆலயத்தின் சுவரில் சிந்து சமவெளி முத்திரை எண்: எம்-**1356**-ல் சுவத்திக வடிவத்துடன் காணப்படும் குறியீடு ஒன்று **திரயம்** எனும் எழுத்துப் பொறிப்புடன் காணலாம். இக்குறியீடு **சுவத் பள்ளத்தாக்கில்** ஒரு பாறை ஓவியமாகவும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் இராச்சாண்டார் திருமலையில் ஒரு குறியீடாகவும் உள்ளது. இக்குறியீடு தமிழகத்து மகளீர் தத்தம் குடியிருப்பு வீடுகளின் வாசலில் போடும் கோலங்களில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.


எம்-1356எ


சுவத்


இராச்சண்டார் திருமலை


திருவெள்ளறை



கோலம்

இதே போன்ற குறியீடுகளை திருச்சி மலைக்கோட்டை கீழ் குடவரைக் கோயிலில் காணலாம். கரூர் மாவட்டம், இராச்சாண்டார் திருமலையின் முன்புற படிக்கட்டு ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்த இதே போன்ற மற்றறொரு குறியீடு திருப்பணியின் போது சலவைக் கற்களால் மூடி மறைக்கப் பட்டுள்ளது மிகவும் வருந்தத்தக்க தொரு செய்தியாகும்.



வடஜம்புநாதர் குடைவரைக்கோயிலுக்கு மேற்குத் திசையில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களில் ஒன்றான கல்வட்டம் ஒன்று காணப்படுகிறது.

மேடை போன்ற அமைப்பில் நடுகற்களும், அதனருகில் தனது கழுத்தில் கத்தியைச் செருகி தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் நவகண்டம் (பெண்) சிற்பம் ஒன்று சிதில மடைந்த நிலையிலுள்ளது. அதனை ஆண் சிற்பம் என சிலர் கருதுகின்றனர். அதன் பின்புறம் அருள்மிகு ஐயனார் சிற்பங்களும் காணக்-கிடக்கின்றன.



மேற்கண்டவற்றிற்கு தென்புறம் உள்ள உயர்ந்ததொரு பாறையின் அடியில் ஒரு சுனையும் அதன் அருகில் முருகப் பெருமானின் கோயில் ஒன்றும் உள்ளது.

மேலும் இவ்விடத்தில் சிறிய அளவிலான திருக்கோயில் ஒன்று இருந்ததற்கான சுவடுகள் தென்படுகின்றன. இப்பாறையின் தென்புறச் சரிவில் உள்ள சிறியதொரு குன்றில் கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த **சீ குகன்** எனும் எழுத்துப் பொறிப்பும், எண் 13 - ஐக் குறிக்கும் தமிழ் எழுத்துப் பொறிப்பும் காணக்கிடக்கின்றன.

இப்பாறைக்கு எதிரே உள்ள தாமரைக்குளம் எனும் நீர்த் தேக்கத்தின் தென்புறக் கரையில் தற்போது புதைந்துக் கிடக்கும் சிதிலமடைந்த மகா விட்டுணுவின் சிற்பத்தின் மார்பு பகுதி வலது புற (காம்பின்) ஸ்தன வட்டத்திற்கு மேலே அன்னை இலக்குமியைக் குறிக்கும் முக்கோண வடிவிலான அழகிய ஸ்ரீவத்சம் குறியீட்டைக் காணலாம்.

## அளவைகள்

பழங்காலத்தில் தமிழகம் முழுவதும் எண்ணல், நிறுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய அளவைகள் ஊருக்கு ஊர் மாறுப்பட்டதாகவும் இருந்துள்ளன.

ஆகவே, அந்தந்த அளவைகளோடு அவ்வூரின் பெயரையும் இணைத்துக் குறிப்பிடுவது ஒரு மரபாகவும் இருந்துள்ளது. திருவெள்ளறை அளவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மற்ற பகுதிகளில் இதன் அளவைகள் பயன்பாட்டில் இருந்ததற்கான சான்றுகளை கல்வெட்டுச் சாசனங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

அதற்குச் சான்றாக முதலாம் பராந்தக சோழன் காலத்தில் கொல்லி மலையிலுள்ள அறப்பளீச்வரர் கோயிலுக்கு, **திருவெள்ளறை கணத்தால்...**[3] அரிசி அளந்து கொடுத்தனர் என்பதையும், முதலாம் குலோத்துங்கன் காலத்தில், **திருவெள்ளறை கடகோலால்...**[4] செப்புத்தளி செய்து அளந்து கொடுக்கப்பட்டது என்பதையும் இரண்டு கல்வெட்டுச் செய்திகளின் வாயிலாக அறியமுடிகிறது.

## நீர் நிலைகள்

திருத்தலங்கள், குடைவரைக் கோயில்கள், அளவைகள் போன்ற சி றப்புடைய சரித்திர சான்றுகள் நிறைந்த திருவெள்ளறை பகுதியில், முதலாம் ஆதித்தச் சோழனின் ஆட்சிக் காலத்தில் திருவெள்ளறை வாய்க்கால் ஒன்று இருந்துள்ளது என்பதைச் செந்தலையிலுள்ள கல்வெட்டுச் சாஸனத்தில் **திருநாராயண வதிக்குக் கிழக்கு, ஆர்க்காட்டு வாய்காலுக்குத் தெற்கு, திருவெள்ளரை வாய்க்காலுக்கு வடக்கு...**[5] என்ற செய்திக் குறிப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

இருப்பினும் திருவெள்ளறை ஒரு நீர்வளம் நிறைந்த பகுதியாக இருந்திருக்க வாய்ப்பில்லை எனக் கருதலாம். வானம் பார்த்த பூமியாக, மழை நீரையே முற்றிலுமாக நம்பி திருவெள்ளறையிலும் அதனைச் சுற்றி உள்ள பகுதியில் வாழ்ந்த மக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான பாசனநீர் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பழங்காலத்திலேயே இங்கு மழைநீர் சேமிப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு இப்பகுதியில் பரந்த நிலப்பரப்பில் மேல்நோக்கி அகலமாகவும் ஆழமாகவும் அமைக்கப்பட்டுள்ள குளங்களும், கீழ்நோக்கி ஆழமாகத் தோண்டப்பட்ட கிணறுகளும் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.

மா, குச, சக்ர, புஷ்கல, வராஹ, மணிகர்ணிகா, பத்ம என ஏழு புண்ணிய தீர்த்தங்களாகக் கருதப்படும் குளங்களும், திவ்ய, கந்த, க்ஷீர ஆகிய மூன்று புஷ்கரணிகள் இங்குள்ளன.[6] திருவெள்ளறையின் கீழ்த்திசையில், அதாவது திருச்சிராப்பள்ளி-துறையூர் நெடுஞ் சாலைக்குக் கீழ்ப்புறத்தில் குசலன் குளமும், தென்திசையில் சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில் சிங்கர் குளமும், வடதிசையில் உடையார் குளமும் உள்ளன.

உடையார் குளத்திற்குத் தென்கிழக்கே சுவத்திக வடிவத்தில் சிறியதொரு கிணறும் உள்ளது. இக் கிணறு பிற்காலத்தில் கட்டப்பட்டதாயினும் இதன் பெரும்பான்மையான பகுதிகள் சேதமடைந்து சிதிலமடைந்துள்ளன.

இக் கிணற்றினைப் புதுப்பித்து நம்முன்னோர் செய்த **தர்ம காரியத்தைக் காக்க யாரேனும் முன் வர மாட்டார்களா?** என ஏங்கி நிற்கும் அந்தப் பழங்கால நினைவுச் சின்னத்தின் ஏக்கத்தையும் உணரமுடிவதை இங்கே குறிப்பிடுவது மிகவும்அவசியமாகும்.

**மார்ப்பிடுகு பெருங்கிணறு**

திருவெள்ளறை, செந்தாமரைக் கண்ணாழ்வாரது கோயிலின் தென்புற வாசலுக்கு அருகில் மார்ப்பிடுகு பெருங்கிணறு என்ற பெயரில் ஒரு கிணறுள்ளது. இக்கிணறு மிகப்புனிதமான சின்னமாகக் கருதப்படும் சுவத்திக வடிவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது இதனுடைய தனிச் சிறப்பாகும்.

தமிழத்தில் சுவத்திக வடிவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இது போன்ற புராதானச் சின்னம், நம் பாரத நாட்டில் மட்டுமின்றி உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இந்நாள்வரைக் கண்டறியப்பட வில்லை என்பது இங்கே பதிவு செய்யப்படுகிறது.

மேலும் அறிவியல், ஆன்மிகத் தத்துவங்களைக் கூறும் இதனை உலகப் புராதானச் சின்னங்களின் பட்டியலில் இடம் பெறச் செய்யவேண்டும் எனவும், இதனைப் பராமரித்துப் பாதுகாக்க உலகப் புராதானச் சின்னங்களின் பாதுகாப்பு மையம் முன்வர வேண்டுமெனவும் இந் நூலின் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதற்குத் தேவையான எம்மால் ஆராய்ந்தறியப்பட்ட ஆதாரச் சான்றுகள் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# ௨

## சுவத்திக

*எட்டுவித மங்கலகரமான சின்னங்களில் ஒன்றான சுவத்திக சின்னம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுவதால், இது உலகமக்கள் அனைவரும் புனிதமான சின்னமாக ஏற்றுக் கொண்ட சின்னம் எனக் கருதலாம். இச்சின்னம் தோன்றிய காலம் **11,000** ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவும், தோன்றிய இடம் இந்திய துணைக் கண்டம் எனவும் கருதப்படுகிறது.* ( http://timesofindia.indiatimes.com/city/kolkata/Swastika-is-pre-Aryan-dates-back-11000-years/articleshow/53090079.cms?utm_source=facebook.com&utm_medium=referral & utm_campaign=TOI)

*மொஹஞ்சா-தாரோ, ஹரப்பா ஆகிய பகுதியில் மேற்கொண்ட அகழாய்வுகளில் **5500-3500** ஆண்டுகளுக்கு முற்பட்ட சுவத்திக சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன.*[7] *அதனடிப்படையில் இச் சின்னம் பொ.ஆ. மு. **3500**-ஐ சார்ந்த தாகவோ அல்லது அதற்கும் முற்பட்டக் காலத்தை சார்ந்ததாகவோ இருக்கக் கூடும் எனக் கருதலாம்.*

### இருவகையான வடிவங்கள்

*எட்டு திசைகளை நோக்கும் கோடுகள் ஒருங்கிணைந்த வடிவமாகக் காட்சி தரும் **சுவத்திக சின்னம்** இருவகைப்படும். முதல் வகையில், மையத்திலிருந்து வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கு திசைகள் நோக்கியபடி வரையப்பட்ட கோடுகள் **வலது புறமாகத் திரும்பி,** நான்கு ஜோதிகளின் திசைகளான முறையே வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகியவற்றை சென்றடைந்து, நான்கு கரங்களுடைய வடிவமாகக் கருதப்படுகிறது. இத்தகைய வடிவம் ஆண் தத்துவத்தையும், முதன்மை தெய்வமான விநாயகப் பெருமானையும், **வியாபித்தல்** தத்துவத்தையும் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. மேலும் இது அன்னை ஸ்ரீ சரஸ்வதியைக் குறிக்கும் வடிவம் எனவும் கூறப்படுகிறது.*

இரண்டாம் வகையில், மையத்திலிருந்து வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கு திசைகள் நோக்கியபடி வரையப்பட்ட கோடுகள் **இடது புறமாகத் திரும்பி,** நான்கு ஜோதிகளின் திசைகளான முறையே வடமேற்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு ஆகியவற்றை சென்றடைந்து, நான்கு கரங்களுடைய வடிவமாகக் காணப்படுகிறது.

இத்தகைய வடிவம் பெண் தத்துவத்தையும், வடதிசை நோக்கும் பெண் தெய்வமாகிய காளியையும், **ஒடுங்குதல்** எனும் தத்துவத்தையும் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது.

மேற்கூறிய இருவகையான சுவத்திக சின்னங்களைப் பற்றிய குறிப்பு, இங்கிலாந்து நாட்டில் இந்தியாவின் பழமையான குறிப்புக்களின் பதிவேடுகள் பாதுகாப்பு அலுவலகத்தில்[8] பாதுகாக்கப்படுவதாகவும் அறியப்படுகிறது.

மேலும் இச் சின்னத்தின் மையத்திலிருந்து வெளிப்படும் நான்கு கோடுகள்; கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு புவியின் திசை களுக்கும், வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கு ஜோதியின் திசைகளுக்கும் என எட்டுத் திசைகளுடனும் நெருங்கிய தொடர்புடையது என்பதும் தெரியவருகிறது.

அறிவியல் ரீதியில் பூமியின் சுழற்சியால் ஏற்படும் ஒவ்வொரு நாட்களின் நான்கு காலங்களாகிய சூரிய உதயம், நடுப்பகல், சூரிய அத்தமனம், நடு இரவு[9] ஆகியவற்றை சுவத்திக சின்னத்தின் நான்கு கரங்களுடன் ஒப்பிட்டுக் கூறப்படுவதுண்டு.

பிரபஞ்சத்தில் ஏராளமான பரிதிக் குடும்பங்களும் அவற்றின் கிரகங்களும் ஒரு மையத்திலிருந்து வெளிப்பட்டு சுழலுவதை சுவத்திகச் சின்னம் குறிப்பிடுவதாகவும், ஆன்மிக ரீதியில், வலது, இடது புறமாகத் திரும்பியுள்ள சுவத்திகச் சின்னங்களை முறையே ஆக்கம், ஒடுக்கம் எனும் பிரபஞ்ச நிகழ்வுகளுடன் ஒப்பிடப்படுவதுண்டு.

இவ்விரு வகைகள் உலகின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக பழங்கால பாறை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளதையும், முதுமக்கள் தாழிகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றில் பொறிக்கப்-பட்டுள்ளதையும், போர்வைகள் போன்ற ஆடைகளில் நெய்யப்பட்டுள்ளதையும் ஆய்வறிஞர்களது அகழாய்வுக் குறிப்புக்களின் வாயிலாக அறியமுடிகிறது.

**சுவத்திக என்ற பெயரின் பொருள்**

மேற்கண்ட அறிவியல், ஆன்மிக ரீதியில் சுவத்திக சின்னத்தின் சிறப்புக்களை அறிந்ததும், சுவத்திக எனும் பெயரின் உட்பொருள் அறிய வேண்டும் என்ற ஆர்வம் அனைவருக்கும் ஏற்படுவது இயல்பு. அந்த ஆர்வத்தால் ஆங்கில அகராதிகள்[10] மூலம் சுவத்திக என்ற பெயருக்கு முழுமையான பொருள் அறிய முயற்சிப்பவர்கள் பெறுவது பெரும் ஏமாற்றமேயாகும். கண்களைத் தூய்மைபடுத்தி, கூர்ந்து நோக்கினாலும் கூட, சுவத்திக என்பதற்கான முழுமையான பொருள் அவர்களால் அறிய இயலாதென்பது மிகைபடுத்திக் கூறுதலன்று.

அதற்குச் சான்றாக, ஆங்கில அகராதிகளில் சுவத்தி என்ற சொல்லை, சுவ + (அ) த்தி என இரண்டாகப் பிரித்துப் பொருள் கூறப்பட்டுள்ளது. **சுவ** என்பதற்கு நல்லது அல்லது மங்கலம் எனவும், **(அ)த்தி** என்பதற்கு உண்டாகட்டும் அல்லது நிலைத்திருக்கட்டும் என இரண்டுச் சொற்களுக்கு மட்டும் பொருள் கொடுக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

அதாவது சுவத்தி என்பதற்கு நல்லது உண்டாகட்டும் அல்லது மங்கலம் நிலைத் திருக்கட்டும் என பொருள் கூறப்பட்டிருக்கும். சுவத்தி கோ மங்கல திரவிய[11] என்பதன் மூலம் மேற்கூறிய ஆங்கில அகராதிகள் கூறும் பொருள் ஏற்புடையதாகக் கருதலாம். சுவத்தி என்பதற்கு வடமொழியில் அருள், மற்றும் க்ஷேமம்[12] எனவும் உடல் ரீதியாக சுவத்தா[13] என்றச் சொல்லுக்கு ஆரோக்கியமான உடல் எனவும் பொருளாகும்.

ஆனால், ஆங்கில அகராதியில் சுவத்திக (சுவ + (அ)த்தி + க) என்பதில் இறுதியாக உள்ள **க**-என்பதற்குப் பொருள் கூறப்படாததால், சுவத்திக என்பதற்குப் பொருள் முழுமையாகப் பொருள் கூறப்படவில்லை எனலாம். **க**-என்பதன் உட்பொருள் அறிவிக்கப் படாதது **அறியாமையா அல்லது அவர்கள் அறிந்திருந்தும் மற்றவர்கள் அறிந்துவிடக்கூடாது என்பதற்காக மறைக்கப்-பட்டுள்ளதா** என்ற கேள்வி எழுவது இயற்கையே!

எனவே அக்கேள்விகான விடையை அறிய வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு விடையறிவதன் வாயிலாக சந்தேகம் எனும் களை முளையிலேயே கிள்ளி எறியப்படும் என்பதால் தேடல் சிந்தனையுடன் **மறையில் ஈறு (உபநிடதங்கள்) போன்ற வேறு ஏதாவது பழமையான நூல்களில் கொடுக்கப்பட்டுள்ளதா** என அதனைத் தேடி, **க** என்பதற்கு மட்டுமின்றி **க்க** என்பதற்கும் பொருள் அறிவோமாக. அறிவானது மற்றவர்க்குப் பகிர்ந்தளித்தால் மட்டுமே அது அறிவாகும், இல்லையேல் அது அறிவாகாது என்பதற்கிணங்க நாம் அறிந்ததை அனைவரும் அறியச் செய்வதன் மூலமாக அந்த அறிவை முழுமை அடையவும் செய்வோமாக.

***க = க்க = பிரம்மம்***

*எக்காலத்திலும் அழியாமல் என்றென்றும் நிலைத்திருக்க கூடியவைகள் உபநிடதங்களாகும். அவை யாரோலோ எவராலோ எழுதப்பட்டவை அல்ல. ரிஷிகளாகிய ஞானிகள் பலகாலம் தேடிய தேடலினால் அறியப்பட்டவை அவை உலகப் பொதுமறைகள் என அங்கீகாரம் பெறும் காலம் வெகு தொலைவில் இல்லை. ஆகவே, அவை தோன்றிய இந்த புண்ணிய பூமியின் உரிமையை இழக்காமல் காப்பது நம் பாரத நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். நம் முன்னோர்களாகிய ரிஷிகளால் அறியப்பட்டவற்றில் ஒன்றே சாந்தோக்கிய உபநிடதம். அதில்* ***க*** *என்பதற்கு மட்டுமின்றி* ***க்க*** *என்பதற்கானப் பொருளும் அதற்கான விளக்கமும் கூறப்பட்டுள்ளது.*

*அதுவானது; பிராணன் பிரம்மம்,* ***க****-பிரம்மம்,* ***க்க****- பிரம்மம் (என்று உபதேசித்தன). பிராணன் பிரம்மம் என்பதை உணர்ந்து கொண்டேன்.* ***க, க்க*** *என்ற இவற்றை உணரவில்லை, என்றான் அவன் (உபகோஸன்).அதற்கு எது (விஷயசுகம்)* ***க****-வைக் குறிப்பிடுமோ அதுவே* ***க்க*** *(இதயத்திலுள்ள ஆகாசம்); எது* ***க்க-*** *வைக் குறிப்பிடுமோ அதுவே* ***க****, என்றும் இங்ஙனம் பிரம்மம், பிராணன் ஆகிய இரண்டைப் பற்றியும் அவை (அக்னிகள்) அவனுக்கு உபதேசித்தன.*

***பிரம்மம், க்க- பிரம்மம்: க*** *எனும் எழுத்து -சுகத்தையும்,* ***க்க*** *எனும் எழுத்து-ஆகாசத்தையும் குறிக்கும். சுகம் ஆதியும் அந்தமும் உடையது; ஆகாசம் அசேதனம். அப்படியிருக்க இவை எப்படி பிரம்மமாகும் என்பது சீடனுடைய சந்தேகம். இதற்கு அக்னிகள் கூறிய பதில் என்னவென்றால், இங்கு உபதேசிக்கப்படும் சுகம் விஷய சுகமன்று, இருதயக் குகையில் விளங்கும் ஆன்ம சுகம். அதுவே அழியாத பிரம்மம் (பரம்).*

*இரண்டாவதாக உபதேசிக்கப்பட்ட ஆகாசமும் அசேதனமான ஆகாசமன்று, ஆனந்த மயமான சிதாகாசம் (அறிவெளி எனும் ஞானவெளி). ஆகையால்* ***க*** *என்பது* ***க்க்;*** ***க்க*** *என்பது* ***க*** *என உபதேசிக்கப்பட்டது-என சந்தோக்கியோ உபநிடதத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.*[14]

*சந்தோக்கியோ உபநிடத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து அதில் கூறப்பட்டுள்ள* ***க*** *மற்றும்* ***க்க*** *என்பதற்கானப் பொருள் கூறி அதற்கான விளக்கத்தை அளித்த சுவாமி ஆசுதோஷானந்தர் அவர்களுக்கும், இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.*

***க, க்க*** *பற்றி முற்றிலுமாக அறிய ஆர்வமுடையோர் சாந்தோக்கிய உபநிடத்சாரம் அத்தியாயம் 4-கைப் படித்து தங்களது ஆர்வத்தை பூர்த்தியடையச் செய்லாம்.*

மேலும், க-என்பதற்குப் பிரம்மம் எனப் பொருள் என்பதை மயமதம்[15] என்ற சிற்பசாஸ்திர நூலின் வாயிலாகவும் அறிய முடிகிறது. மேற்கூறிய உபநிடதம், மயமதம் ஆகிய நூல்களின் வாயிலாக சுவத்திக அல்லது சுவத்திக்க எனக் குறிப்பிட்டாலும் அதனது உட்பொருள் ஒன்று தான் என்பதை அறிகிறோம். மேற்கண்டவற்றின் வாயிலாக, **சுவத்திக என்பதற்குப் பிரம்மத்தின் அருளால் எட்டுத் திசைகளிலும் பாதுகாக்கப்பட்டு மங்கலம் உண்டாகட்டும் அல்லது நிலைத்திருக்கட்டும்** எனப் பொருள்படும்.

**சுவத்திகா**

**க, க்க** ஆகிய இரண்டின் உட்பொருள் அறிந்ததோடு நின்று விடாமல் சுவத்திகா என்பதைப்பற்றியும் அறிவது மிகவும் அவசியம். **சுவத்திக** என்பதை **சுவத்திகா** என உச்சரிப்பதோடு மட்டுமில்லாமல் எழுதுவதும் பழக்கத்தில் வந்துள்ளது. அவ்வாறு சுவத்திகா என உச்சரிப்பதும் எழுதுவதும் சரியா அல்லது தவறா என்பதை சாந்தோக்கிய உபநிடத்தின் சுலோகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பின் வாயிலாக அறிவோமாக.

*He said, 'I understand that Prana is Brahman; but I do not understand **Ka** and **Kha**'. They said, 'What is Ka, even that is Kha; and what is Kha, even that is Ka.' Then the fires instructed him about Prana (Brahman) and the Akasa within the heart related to it'.*[16]

ஆங்கிலத்தில் க என்பதை எழுத ***Ka*** என்ற இரண்டு எழுத்துக்களையும், க்க என்பதற்கு ***Kha*** என்ற மூன்று எழுத்துக்களையும் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு இரண்டு, மூன்று ஆகிய எழுத்துக்கள் பயன்படுத்தப்படுவதால் அதனை உச்சரிக்கும் போது சுவத்திகா எனவும், சுவத்திக்கா எனவும் தவறாக உச்சரிக்கப்பட்டு சுவத்திகா மற்றும் சுவத்திக்கா என்ற எழுத்தமைப்பும் பெற்றுள்ளது.

எனவே அவ்வாறு உச்சரிப்பதும் எழுதுவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்பதும், **சுவத்திக, சுவத்திக்க** என உச்சரிப்பதும் எழுதுவதுமே சரியானது மட்டுமின்றி முறையானது எனவும் அறிவோமாக.

நம்நாட்டின் பொக்கிஷங்களாகிய உபநிடதங்கள் போன்ற புனிதமான நூல்கள் ஆங்கிலம் போன்ற மாற்று மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, அந்நூல்களைப் படித்தறியும் நமது இன்றைய அவல நிலையைக் கண்டு மனம் வருந்துவதோடு மட்டுமின்றி முறையாக உச்சரிக்கப்பட வேண்டிய சொற்கள் ஒலி அளவுகள் மாறுபடுவதால், மேலும் நம்மை பெரும் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன என்பதை சிந்தித்து செயல்புரியத்தக்கது.

சுவத்திக என்றழைக்கப்படும் புனிதமான இச்சின்னத்தை மங்கலகரமான காரியங்கள் அனைத்திலும் பயன்படுத்தப் படுவதும், **ஸ்ரீ** மற்றும் **சுவத்தி ஸ்ரீ** என்ற சொற் சுடர்கள் பழங்கால கல்வெட்டுச் சாஸனங்களில் துவக்கத்திலேயே பொறிக்கப்பட்டு மங்கலகரமாகவே துவங்கப்படுவதும் நமது பழங்கால மரபாகவும் இருந்துள்ளது அறியத்தக்கதாகும்.

### சுவத்திஸ்ரீ

பழமையான கல்வெட்டுக்களின் ஆரம்பத்தில் **ஸ்ரீ** மற்றும் **சுவத்தி ஸ்ரீ** என்ற சொற்றொடர் காணப்படுவதால் அதனைப்பற்றி அறிவது அவசியமாகும். ஸ்ரீ என்ற சொற்றொடர் திருமகளாகிய ஆதிபராசக்தி அன்னையைக் குறிப்பிடுவதாகும்.

அந்த ஆதிசக்தியே படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய மூன்றையும் செயலாற்றி வருவதால் ஸ்ரீ என்ற சொல், பிரம்மாயினி (படைத்தல்), இலக்குமி (காத்தல்), உருத்திராயினி (மறைத்தல்) ஆகிய மூவருக்கும் பொதுவானதாகும். மேலும் ஸ்ரீ என்ற சொல் பூமகள் எனும் பூமித்தாயையும் சுட்டிக்காட்டுவதாகவும் கருதலாம்.

அதனடிப்படையில், **க**- என்பதற்குப் பதிலாக **ஸ்ரீ**-யை பயன்படுத்தி ஆதிசக்தியை முன்னிறுத்திக் காட்டப்படும் பழங்கால மரபும் சைவ சமயத்தின் அங்கமான சாக்தத்தில் காணமுடிகிறது. மேற்கண்டதன் வாயிலாக, சுவத்தி ஸ்ரீ என்பதற்கு **அன்னையின் அருளால் எண்திசைகளிலும் பாதுகாக்கப்பட்டு மங்கலம் உண்டாகட்டும் அல்லது நிலைத் திருக்கட்டும்** எனப் பொருள்படுவதை அறியலாம்.



சுவத்திஸ்ரீ என்பதற்குப் பதிலாக ஸ்ரீ என்றச் சொல்லை முன்னிறுத்திப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களும் உண்டு. அவற்றில், திருவெள்ளறை, சுவத்திக வடிவக் கிணற்றில், தென் திசையில் பொறிக்கப்பட்டுள்ள **ஸ்ரீ கண்டார்** எனத் துவங்கும் பாடல் சிறந்ததொரு கல்வெட்டுச் சான்றாகும்.

மேலும், ஸ்ரீ என்பது புனிதமான சொல்லாகப் பல கல்வெட்டுக்களிலும் பயன்படுத்தப்-பட்டுள்ளது. அதற்குச் சான்றாக, திருவெள்ளறை பெருமாள் கோயிலின் திருச்சுற்றில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தின் வடபுறத்தில் தென்திசை நோக்கி அமைந்துள்ள குடைவரைக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில், **பெரிய ஸ்ரீ கோயில்** எனவும் இங்கு எழுந்தருளியுள்ள இறைவனைப் **பெரிய ஸ்ரீ கோயில் பெருமானடிகள்**[17] எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டலாம்.

*எழுதாக்கிளவி[18] எனும் வடமொழியில் ஸ்ரீ என்பதற்கு விஷம் எனப் பொருள் கூறப்படுகிறது. எனினும் அப்பொருள் கல்வெட்டுக்களில் காணப்படும் சுவத்திஸ்ரீ மற்றும் ஸ்ரீ என்ற சொற்றொடர்களுக்குப் பொருத்தமற்றதாகும்.*

*ஸ்ரீ என்ற எழுத்துப் பொறிப்பிற்குப் பதிலாகப் பெண்குறி போன்ற குறியீடு ஒன்று கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த மதுராவில்[19] கண்டறியப்பட்ட கல்வெட்டு சாசனத்தில் காணப்படுகிறது. இச்சின்னத்தை எட்டு மங்கலசின்னங்களில் ஒன்றான* ***ஸ்ரீவத்சம்*** *[20] எனக் குறிப்பிடப்படுவதுண்டு.*

***ஸ்ரீ*** *என்பது முற்றிலும் முழுமையான வடமொழி எழுத்தமைப்புடைய சொல் அல்ல. அச்சொல் வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளின் எழுத்துக்களின் ஒரு தொகுப்பு.*

*அதாவது*  *- என்ற வட மொழி எழுத்தும் ,* ***ரீ*** *என்ற தமிழ் (தென்) மொழி எழுத்தும் இணைந்ததாகும். அதற்கு உதாரணமாக கி.பி. 600- 700 யைச் சார்ந்த,*  *- ஸ்ரீ எனும் பழங்கால கல்வெட்டு எழுத்துக் களை உற்று நோக்கினால் இது நன்கு புலப்படும்.* ***ஸ்ரீ*** *என்பதற்கு நேரிணையாக* ***சிரீ*** *என்ற இரு தமிழ் எழுத்துக்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன. அதற்குக் காரணம்*  ***,***  ***, ஸ*** *ஆகிய மூன்று எழுத்துக்களுக்கும் இணையானது* ***ச*** *என்ற ஒரே தமிழ் எழுத்தாகும். மேலும் பிற்காலத்தில்* ***திரு*** *என்பதே* ***ஸ்ரீ*** *என மருவியும் உளது. திரு- என்பதற்குத் திருமகள், செல்வம், நல்வினை, அழகு, கண்டாரால் விரும்பப்படும் தன்மை என வெற்றி-தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.*

***சுவத்தி ஸ்ரீ பூ மருவிய திரு மாதும்*** *எனத்துவங்கும் கி.பி. 12-ம் நூற்றாண்டின் கல்வெட்டு எழுத்துப் பொறிப்புக்களைக் கொண்ட திருப்பிடவூர் (திருப்பட்டூர்) ஐயனார் கோயில் கல்வெட்டு ஒன்று அதற்கான தக்கதொரு சான்றாகும். ஸ்ரீ என்பது போலவே* ***ஸ்வத்தி ஸ்ரீ*** *என்பதில்,* ***ஸ்+வ, ஸ்+தி, ஸ்ரீ*** *என வடமொழி மற்றும் தமிழ்மொழி ஆகிய இருமொழிகளின் எழுத்துக்கள் இணைந் துள்ளன. அதில்* ***வ , தி*** *ஆகிய இரு தமிழ் எழுத்துக்கள் ஒரே வரியில் அமையாமல் கீழே இணைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு இணைக்கப்படும் பழங்கால மரபினை மார் பிடுகு பெருங்கிணற்றில் ஸ்வஸ்தி ஸ்ரீ எனத் துவங்கும் கி.பி.8-ம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டில் மிகத் தெளிவாகக் காணலாம்.*


*மேற்கண்ட ஸ்வஸ்திஸ்ரீ = சுவத்திசீ என்பதற்கு ஆதாராச் சான்றுகளுக்கு சிகரமாக 5500 ஆண்டுகளுக்கும் முற்பட்டதான சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை எண் எம்-482ஏ-யில் உள்ள குறியீடுகளையும் எழுத்துக்களையும் ஆராய்ந்தறிவோமாக.*



M-482 A

வலமிருந்து இடமாக இரண்டு குறியீடுகள், நான்கு தொல் தமிழ் எழுத்துக்கள் கொண்ட முத்திரையை சுவ + அத்தி + சீ + பொ+(ரு+ள் ) எனப் படிக்கப்படுகிறது. **சுவ** என்பதற்கு தோற்றத்தைக் குறிக்கும் வடிவமும், **அத்தி** என்பதற்கு (பெண்) பால் மரமும், மருத்துவ குணமுடையதுமான **அத்தி மரம்** என குறிப்பிடப்பட்டுள்ளன. **சீ** என்ற பழந்தமிழ் எழுத்து ஒரு சீப்பின் வடிவமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்ந்து பொ+ரு+ள் ஆகிய மூன்று பழந்தமிழ் எழுத்துக்களின் தொகுப்பான **பொருள்** என்றத் தமிழ்ச் சொல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொருள் என்ற சொல்லுக்கு-சொற்பொருள், செய்தி, உண்மை, கருத்து, செய்கை, தத்துவம், **மெய்மை**, நன்கு மதிக்கப்படுவது, அறிவு, கொள்கை, அறம், பயன், வீடுபேறு, **கடவுள்**, பலபண்டம், பொன், மகன், தந்திரம், முலை, உவமேயம், அருந்தாபத்தி, அகமும் புறமுமாகிய திணைப் பொருள்கள், அர்த்த சாத்திரம், **தலைமை** என இருபத்தி நான்கு சொற்களை மெய்யப்பன் தமிழ் அகராதி சுட்டிக் காட்டுகிறது. அவற்றில் மெய்மை, கடவுள், தலைமை ஆகிய மூன்று சொற்களைத் தேர்ந்தெடுத்து சுவத்திசீ என்பது **மெய்மை, கடவுள், தலைமை** என்ற சொற்களைச் சுட்டிக்காட்டுவதாகக் கருதலாம்.



கி.மு. 3500-1500 -ஐ சார்ந்ததாகக் கருதப்படும் சிந்து சமவெளி முத்திரை எண் எம்-482ஏ-யில் **சுவ** என்பதைக் குறிக்கும் குறியீடு 36 கட்டங்கள் கொண்ட **உக்ரபீத்தா** எனும் வரைப்படத்தின் வாயிலாக சுவத்திக சின்னம் வெளிப்படுவதால் வரைப்படக் கணிதமும் இச் சின்னமும் 5500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இந்திய துணைக்கண்டத்தில் உருவாகியுள்ளது உறுதியாகிறது.

**சுவத்திக சின்னத்தின் கருத்தும் அதன் பயன்பாடும்**

சர். பெர்ட்ரண்ட் என்ற ஆய்வு அறிஞர் பல்லாண்டு கால ஆய்வின் வெளிப்பாடாக, சுவத்திக என்ற சொல்லும் சின்னமும் ஆரியர்களின் காலத்திற்கு முற்பட்டது [21] எனக் குறிப்பிடுகிறார். பேராசிரியர் மாக்ஸ் முல்லர் சுவஸ்திக சின்னம் இந்தியாவில் தோன்றியது எனவும், கி.மு. 4-7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் வடமொழி இலக்கணத்தின் தந்தை எனப் கூறப்படும் பாணினி முனிவரின் சூத்திரங்களின் இலக்கணத்தில் சுவத்திக சின்னம் ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யூத மக்களை எகிப்திலிருந்து இஸ்ரேல் நாட்டிற்கு வழிகாட்டி அழைத்துச் சென்ற ஆப்ரகாமின் வம்சாவழியினர் சுவத்திக சின்னத்தை தம்மோடு எடுத்துவந்தனர் என்பதையும், மொகலாய பேரரசராகிய பாபர் ஆக்ராவில் சுவத்திக வடிவில் தோட்டம் ஒன்றை அமைத்தார் என்பதையும், போர்க் களங்களில் அமைக்கப்படும் பாசறைகளும் பாதுகாப்பாக சுவத்திக வடிவத்திலேயே அமைக்கப்பட்டன என்பதையும் ஆய்வாளர்களின் ஆய்வுக் குறிப்புக்கள் வாயிலாக அறியலாம்.[22] மேலும் சுவத்திக சின்னத்தை மாயச்சக்கரம் எனக் குறிப்பிடுவதுமுண்டு.

குடியிருப்பு வீடுகளின் நுழைவாயில் நிலைக்கால்களில் சுவத்திக சின்னத்தை வரைந்தும் அதனை வழிபடுவதும் பழங்கால மரபாகும்.[23] அதற்குச் சான்றாக வருடாந்திர வியாபாரக் கணக்கேடுகளின் முதல் பக்கத்தில் சுவத்திக சின்னத்தை மஞ்சள் சாந்தால் வரைந்து, நடுவே குங்குமத் திலகமிட்டு முதல் கணக்கைத் துவங்கும் மரபு இன்றளவும் வணிகப் பெருமக்களால் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருவதையும் சுட்டிக் காட்டலாம். குழந்தை பிறந்து ஆறாவது நாளன்று சுவத்திக சின்னம் கொண்ட துணியில் தொட்டில் கட்டி முதன்முதலில் குழந்தையைப் படுக்க வைப்பது குஜராத் போன்ற வடமாநிலங்களில் இன்றும் கடைபிடித்து வரப்படும் ஒரு சடங்காகும்.[24]

முற்காலத்தில் இறந்தவர்களை மண்ணில் புதைக்கப் பயன்படுத்தப்பட்ட முதுமக்கள் தாழிகளில் சுவத்திக சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளதை தமிழகத்தின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் சுற்றறிக்கைகள் வாயிலாக அறியமுடிகிறது. பழங்காலம் முதல் தற்காலம் வரை பெரும்பாலான நிகழ்வுகள் மற்றும் சடங்குகள் அனைத்திலும் முக்கிய அங்கம் வகிக்கும் சுவத்திக சின்னம் மங்கலகரமானதாகவே கருதப்பட்டு வருகிறது. நல்லாசியும், நற்பலன்களையும், நீண்ட ஆயுளையும், அதிட்டத்தையும் தரக்கூடிய பல்வேறு சிறப்புகளுடைய இச்சின்னத்தை தாமரை மலருடன் ஒப்பிடப் படுவதுண்டு. எனவே, தாமரை மலரின் சிறப்புக்களையும் காண்போமாக.

***தாமரை மலர்***

*உலகமக்கள் அனைவரும் தாமரை மலரை ஒரு புனிதமான மலராக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதற்கு மிகப்பழமையான சான்றாக, **மூ**[25] எனும் மூத்த குடிமக்கள் விட்டுச்சென்ற குறியீடுகளில் தாமரை மலரின் குறியீடும் ஒன்று என இங்கே பதிவு செய்தல் அவசியம்.*

*அம்மூத்த குடிமக்கள் 15000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசியா மற்றும் அமெரிக்கா ஆகிய இருகண்டங்களுக்கு இடைப்பட்ட ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் எனவும், அந்நிலப்பகுதி யானது தற்போதுள்ள பசிபிக் மகா சமுத்திரத்தில் இருந்துள்ளதாகக் கருதப்படுகிறது. அந்நிலப்பகுதி கடலால் கொள்ளப்பட்டது எனவும் தற்போது பசிபிக் சமுத்திரத்தில் காணப்படும் சிறு சிறு தீவுகள் அதனது எச்சங்களே என சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பூ வகைகளில் ஒன்றான தாமரை மலர், **மூ** எனும் மக்களைக் குறிப்பிடுவதாகவும், இதுவே பூமியில் முதன்முதலில் தோன்றிய மலர் என்பதால் அதனை பூமித் தாயின் சின்னமாகவே அம்மூத்த குடிமக்கள் கருதினார்கள் எனவும் ஜேம்ஸ் சர்ச்வார்டு குறிப்பிடுகிறார்.*

*தாமரை மலரானது ஆகாயம், காற்று, நீர் மற்றும் பூமி ஆகிய நான்கிலும் செழித்து வளரக்கூடியது, எனினும் இதன் இலைகளில் தண்ணீரானது ஒட்டாது. தாமரை மலரின் இப்புனிதமான தன்மையை, ஆன்மிகத்தில் உலகப்பற்று அற்று வாழ வேண்டும் என்பதற்கான மிகச் சிறந்ததொரு சான்று எனச் சுட்டிக் காட்டப்படுவதுண்டு.*

*அழகாகப் பல இதழ்களாக விரியக்கூடிய அற்புதமான இம்மலரை யோக நிலையில் குண்டலினி சக்திக்கு ஒப்பிட்டு, ஒவ்வொரு ஆதார மய்யங்களை இம்மலரின் இதழ்களின் எண்ணிக்கையால் குறிப்பிடுவது இம்மலரின் தனிச் சிறப்பாகும். **ஸ்ரீ** எனும் சரஸ்வதியை, தட்டு போன்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னையே எனக் குறிப்பிடுவதும், படைப்புக் கடவுளான பிரம்மாவைத் தாமரை மலரில் அமர்ந்திருப்பதாகக் குறிப்பிடுவதும் இம்மலரின் சிறப்புக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாகும்.*

*இந்த உடம்பினுள் தாமரை போன்ற மாளிகை உள்ளது. அதனுள்ளே அகவெளியுள்ளது. அதில் இருப்பதைத் தேட வேண்டும்...(புற)வெளி எவ்வளவு பெரியதோ இதயத்தின் உள்ளே உள்வெளியும் அவ்வளவு பெரியது. இந்த உள்வெளியில் தான் ஆன்மா உள்ளது [26] - எனச் சாந்தோக்ய உபநிடதம், தாமரை மலரின் மகத்துவத்தை மேலும் மேன்மைப்படுத்திக் கூறுகிறது.*

## தவறும் அதன் விளைவும்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே புனிதமான சின்னமாகக் கருதப்பட்ட சுவத்திக சின்னத்தைப் பல நாட்டினரும் பயன்படுத்தியுள்ளனர். அவர்களில் குறிப்பாக இட்லர் எனும் ஜெர்மானிய நாட்டின் சர்வாதிகாரி, உலகத்தையே தனது ஆட்சிக்குள் கொண்டு வர வேண்டும் என்ற பேராசையுடன் இச்சின்னத்தை தனது நாட்டின் கொடியில் தீய கருத்தை விளம்பும் வகையில் இடம் பெறச்செய்தார்.

உலக மக்களின் அழிவுக்குக் காரணமான இவரது செயல்கள் உலகமக்கள் அனைவரது இதயங்களில் ஆறாத வடுவாக இன்றளவும் உள்ளது. இட்லரது தவறான செயல் புனிதமான சுவத்திக சின்னத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தியது மட்டுமின்றி இச்சின்னத்தை யாரும் உபயோகப்படுத்தக் கூடாது எனத் தற்போதைய ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இங்கிலாந்து அரசு தடை உத்தரவு பிறப்பிப்பதற்கும் மூல காரணமாயிற்று.

புனிதமான சின்னங்களைத் தவறான முறையில் யாரும் பயன்படுத்தக் கூடாதென உலகளவில் அனைத்து நாடுகளிலும் சட்டங்கள் இயற்றப்பட்டு, அச்சட்டத்தை முற்றிலுமாக செயல் படுத்துவதால் மட்டுமே, நம் இதயத்திலுள்ள அந்த ஆறாத வடுவை மறையச் செய்ய முடியுமென இங்கே பதிவு செய்யப்படுகிறது.

## ஆய்வாளர்கள் மற்றும் ஆய்வு மையங்களின் கடமை

ஆய்வாளர்கள் பல்வேறு நாடுகளில், பல்வேறு பகுதிகளில் பிறந்தவர்களாகவும், பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களாகவும், பல்வேறு இனம் மற்றும் மதத்தைச் சார்ந்தவர்களாகவும் பிறந்து, பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்நாளில் தனி ஒரு மனிதனாக அனைத்துலக மக்களின் கலாச்சாரம், பண்பாடு, வரலாறு போன்ற அனைத்துத் துறைகளையும் முழுமையாக அறிந்து, புரிந்து, தெரிந்து கொள்வதென்பது இயலாத ஒன்றாகும்.

புனிதமான சுவத்திக சின்னத்தின் அரியபல குறிப்புக்களும், பல்வேறு வடிவங்களும் உலக முழுவதும் அங்கும், இங்குமென சிதறிக் கிடக்கின்றன. அவற்றை எல்லாம் ஒன்று திரட்டி உலகமக்கள் அனைவரும் அறியச் செய்வது ஒவ்வொரு ஆய்வாளர்கள் மற்றும் ஆய்வு மையங்களின் கடமைகளில் ஒன்று என்பது எமது கருத்தாகும்.

உ

# சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணறு

திருவெள்ளறையின் மையத்தில் அமைந்துள்ள செந்தாமரைக் கண்ணாழ்வாரது கோயிலின் தென்புற வாசலுக்கு அருகில் சுவத்திக வடிவத்தில் கட்டப்பட்ட மார்ப்பிடுகு பெருங்கிணற்றினைப் பற்றி சற்று விரிவாகக் காண்போமாக.

பொதுவாக, கிணறுகள் அளவில் சிறிதாகவும் வட்ட வடிவத்திலும் அமைக்கப்படுவதும் உண்டு. அளவில் பெரிய கிணறுகளைச் சதுரம் அல்லது செவ்வக வடிவில் அமைக்கப்படுவதுமுண்டு.

அவ்விரு வடிவத்திற்கும் வேறுபட்டு சுவத்திக வடிவம் கொண்ட மார்பிடுகு பெருங்கிணறு **1148** அங்குலம் x **1156** அங்குலம் என சதுர அளவில் மிகக்குறைந்த வித்தியாசமுடைதாய், சராசரி **1152** அங்குலம் (**96** அடி) பக்க அளவு கொண்ட சதுர வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகக் கருதலாம்.

இக்கிணறு **9,216** சதுரஅடி (**856.633**ச.மீ) கொண்ட நிலப்பரப்பில், முற்றிலுமாக, பல்லாயிரம் டன் எடை கொண்ட கருங்கற்களால் கட்டமைக்கப் பட்டுள்ளது. இக்கிணற்றைச் சுற்றிலும் அழகிய கட்டடக் கலையுடன் **பாதுகாப்பு மதில் சுவர்கள்** கட்டப்பட்டுள்ளன.

இப்போது இம்மதில் சுவரைச் சுற்றிலுமுள்ள தரைப்பகுதி மண்ணால் நிரம்பப் பெற்று, உயர்ந்துள்ள காரணத்தால், ஒருகாலத்தில் பாதுபாப்புக்குத் தக்கதொரு அரணாகயிருந்த இந்த மதில் சுவர்கள், இப்போது பாதுகாப்புக்குத் தகுதியற்றதாக இருக்கின்றன.

இம்மதில் சுவர்களைச் சுற்றிலும் குறைந்தது மூன்று அடி உயரமுள்ள கற்சுவர்களிலும், தரைப்பகுதியிலும் குறியீடுகள், பழங்கால அளவுகோல்கள் மற்றும் கல்வெட்டுக்கள் போன்ற பழங்கால சரித்திரச் சான்றுகள் மறைந்திருக்கவும் வாய்ப்புண்டு.

இதனை தொல்லியல் துறை முன்வந்து அகழ்ந்து ஆராயவேண்டும் என வேண்டப்படுகிறது.


இம்மதில் சுவர்களின் மேல் பகுதியில் **மூன்று கல்வெட்டுச் சாசனங்கள்** பொறிக்கப்பட்டுள்ளன. **ஸ்வஸ்தி ஸ்ரீ** எனத் துவங்கும், முதல் கல்வெட்டில், இக்கிணறு கட்டப்பட்ட காலத்தில் இப்பகுதியை அரசாண்ட மன்னன் மெய்க்கீர்த்தி, பெயர், மற்றும் அவனது ஆட்சியின் காலம், இக்கிணற்றைக் கட்டுவித்தவன், கிணற்றின் பெயர் போன்ற செய்திகளும் இரண்டு தோ ├ குறியீடுகளுடன் **இது இரட்சிப்பார் இவ்வூர் மூவாஇரத்தேழு நூற்று வரும்** எனவும் கூறப்பட்டுள்ளன.

**ஸ்ரீ கண்டார்** எனத்துவங்கும் இரண்டாவது கல்வெட்டு, முற்றிலுமாகப் பாடல் வடிவத்திலுள்ளது. மேற்கண்ட இரண்டு கல்வெட்டுக்களும் சமகாலத்தைச் சார்ந்தவையாகும். இவற்றில் மிகவும் அரிதாகக் காணப்படும் புள்ளி வைத்த எழுத்துக் களில் அழகிய தீச்சுடரின் வடிவம் காண்போரது மனதைக் கவரும் என்றாலது மிகையாகாது.

மூன்றாவது கல்வெட்டு, வாணிகன் செய்த இக்கிணறு வெள்ளப் பெருக்கால் சீர்குலைந்ததால் மற்றொரு வாணிகன் இக்கிணற்றின் மதில் சுவர்களையும் நான்கு வாசல்களையும் சீரமைத்தச் செய்தியைச் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு காலத்தால் பிற்பட்டதாகும்.

நான்கு திசைகளிலியிருந்து இக்கிணற்றின் அடிப்பகுதி வரை இறங்கி திரும்பவும் மேலே ஏறி வருவதற்கு வசதியாகக் **கற்படிகள்** பொருத்தப்பட்டுள்ளன. கிணற்றினுள்ளே இறங்க வசதியாகப் படிக்கட்டின் முகப்பின் இருபுறத்திலும் களிற்றின் வடிவத்தில் (களிற்றுப்படி) கைப்பிடிச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. களிற்றுப்படிகளின் வெளிப்புறங்களில் **புடைப்புச் சிற்பங்கள்** காணப்படுகின்றன.

அப்புடைப்புச் சிற்பங்கள், வடக்கு மற்றும் மேற்கு திசைகளில் **துவாரபாலகர்களின்** உருவங்களாகவும், கிழக்கு மற்றும் தெற்கு திசைகளில் அமர்ந்த நிலையில் **சிங்கத்தின்** உருவங்களாவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திசைகளிலும் (? +18 + 32 ) ஐம்பதுக்கும் மேற்பட்ட கற்படிகள் காணப்படுகின்றன.



இக் கிணற்றின் கீழே அதாவது கடைசி கற்படியில் அரைவட்ட வடிவமுடைய பலகைக்கற்கள் பதிக்கப் பட்டுள்ளன. வட திசையிலுள்ள பலகைக் கல்லில் படுக்கை வசத்தில் **தோ** எனும் கோட்டுருவம் போன்ற குறியீடு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்கிணற்றின் அடியிலிருந்து மேலே நோக்கினால் போது கிணற்றின் பிரமாண்ட மான அமைப்பைக் காணலாம்.

அதனது மேல் பகுதி சதுரமாகவும், **ஒரு புள்ளியிலிருந்து அகண்டு விரிவடையும் கூம்பின் வடிவமுடைய ஒரு அக்னிகுண்டம் போலவும், ஒரு கற்பக விருச்சம்** போலவும் காட்சி தருவதைக் காணலாம்.


மேலே ஏறி வருவதற்கான படிக்கட்டு வாயிலின் அகலம் 51-53 அங்குலமாக (சிமெண்ட் பூச்சு நீங்கலாக) அளவில் வேறுபடுகிறது.

இந்த வாயிலின் இருபுறங்கள் திருக்கோபுரம் மற்றும் விமானங்களில் காணப்படும் நிலைக்களம் எனும் அதிட்டானத்தின் அமைப்புப் போன்றும், திருச்சுழி போன்ற அமைப்புடனும், மிகுந்த சிற்பக் கலைநுட்பத்துடனும் காட்சியளிக்கின்றன.

ஒவ்வொரு நுழைவாயில்களுக்கும் மேலே ஒன்றுக்கு மேல் ஒன்றாகவும், அளவில் பெரிதாகவும், மூன்று கற்பத்திகள் பொருத்தப்பட்டுள்ளன.

புவியின் திசைகளான கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளை நோக்கும் அக் கற்பத்திகள் அழகான புடைப்புச் சிற்பங்களுடன் கம்பீரமாகக் காட்சிதருகின்றன.

முதலாவது கற்பத்தியின் உயரத்தில் கிணற்றின் உட்புறத்தைச் சுற்றிலும் சுமார் 42 அங்குலம் (3.5 அடி) அகலமுடைய கல்தளம் ஒன்று பலகைக் கற்கள் மேவப்பட்டு நான்கு இடைவெளிகள் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.



அப்படிக்கட்டுகளின் சுவர்கள் சரிந்து விடாமல் தடுப்பதற்காக இடைவெளியிட்டு **கற்பத்திகள்** பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு திசையிலும் ஐந்து என மொத்தம் இருபது கற்பத்திக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

வடதிசையில் ஏறுமுகமாக உள்ள படிக்கட்டுக்களில் முதல் படிக்கட்டு முதல் பத்தாவது படிக் கட்டுவரை 1,2,3,4,5, 6,7,8,9,10 எனப் பழங்கால **பத்து எண் களின் (இலக்கங்கள்) வரி வடிவங்கள்** பொறிக்கப் பட்டுள்ளன.

அவற்றில் எண் ஒன்றைக் குறிக்கும், தமிழ் மொழி எழுத்தான **க** - வின் வடிவம் கூட்டல் (+) குறியாக இல்லாமல், வகுத்தல் (÷) குறி போல இருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. மற்ற மூன்று திசைகளில் உள்ள படிகளில் ஒரு சில எண்கள் மட்டுமே காணப்படுகின்றன. கிழக்குத் திசையிலுள்ளப் படிக்கட்டு வாயிலின் வலது புறத்துப் பக்கச் சுவரிலும் அப்பழமையான எண்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட அமைப்புக்களுடைய கிணற்றின் கீழே இறங்கி மீண்டும் மேலே ஏறி வரும்போது **ஏதோ ஒன்று நம்மை தடுத்தாட்கொள்வது போன்ற உணர்வு** சிலருக்கு ஏற்படலாம்.

**முக்கிய குறிப்பு:** நம் பாரத நாட்டில் மட்டுமின்றி உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் மிகப் பழைமையான ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் ஒரே இடத்தில் இந்நாள் வரை கண்டறிப்படவில்லை என்றச் செய்தி அறியத்தக்கது.

நான்கு புறமும் பாதுகாப்புக்காகக் கம்பி வேலி பொருத்தப்பட்டுள்ள இந்தப் பழமையான நினைவுச்சின்னம் தமிழக தொல்லியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதையும், மார்ப்பிடுகு பெருங்கிணறு எனும் சுவத்திக வடிவமுடைய இக்கிணறு பல்லவ மன்னனான தந்திவர்மனின் நான்காவது ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்டு ஐந்தாவது ஆட்சி ஆண்டில் கம்பன் அரையன் என்பவரால் கட்டி முடிக்கப் பட்டது என்ற வரலாற்றுச் செய்தியை இங்கு நிறுவப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையின் வாயிலாக அறியலாம். இக்கிணற்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள், படைப்புச் சிற்பங்கள், குறியீடுகள் அனைத்தும் இக்கிணற்றின் வடிவமைப்பில் மறைத்துக் காட்டப்பட்டுள்ள அறிவியல் செய்திகள், ஆன்மிக தத்துவங்கள் போன்ற மேலும் பல விபரங்களை அறியவேண்டும் என்ற ஆர்வம் குறிப்பாக ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் ஏற்படுவது இயல்பு. அந்த ஆர்வத்தின் தாக்கத்தை தணிப்பது ஒவ்வொரு ஆய்வாளர்களது கடமையாகும்.



ஏனெனில், **நாம் என்ன செய்கிறோம் என்பதற்கு மட்டும் நாம் பொறுப்பாளிகள் அல்ல. எதையெல்லாம் செய்யாமல் விட்டுச் செல்கிறோமோ அதற்கும் நாமே பொறுப்பாளிகள்!**

மேற்கண்ட இக்கிணற்றைப்பற்றிய அரிய பல செய்திகளை ஆர்வத்துடன் கூறிய முன்னாள் தொல்லியல் துறை காவலாளி பெரியண்ணன் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆன்மா சாந்தி அடைய அருள வேண்டுமெனவும் இறைவனை வணங்குவோமாக.

## சுவத்திக வடிவ கிணற்றின் பெயர்கள்

சுவத்திக வடிவத்தில் கட்டப்பட்டுள்ள கிணற்றுக்குச் சக்கர தீர்த்தம், நாலுமுனைக்கேணி, சுவத்திக கிணறு, அரையன் குளம், மாமியார் மருமகள் கிணறு, பிரம்ம குளம், தென்னூர் பெருங் கிணறு, மார்ப்பிடுகு பெருங்கிணறு ஆகியப் பெயர்களுண்டு. **நெருப்பின்றி புகையாது** என்ற சொல்லுக்கிணங்க மாறுபட்ட பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் ஏதோ ஒரு காரணம் நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அப்பெயர் சொற்களைப் பற்றி சற்று விரிவாகக் காண்போமாக.

### சக்கரதீர்த்தம்

வட்டவடிவத்தைச் சக்கரம் எனவும் சதுர வடிவத்தை மண்டலம் எனவும் குறிப்பிடுவதுண்டு. ஆகையால் சதுர வடிவத்தைச் சக்கரம் எனக் குறிப்பிடுவது தவறு என எண்ணத் தோன்றுவது மனித இயல்பு. இயற்கையின் வடிவமான வட்ட வடித்தைப் பூமியாகவும் (மண்ணாகவும்), சதுரத்தைப் பிரபஞ்சமாகவும் (விண்ணாகவும்) ஒப்பிட்டு, மேலும் வட்டத்தைச் சதுரமாகவும், சதுரத்தை வட்டமாகவும் மாற்றப்பட வேண்டும் என்பது அறிவியல் ரீதியில் குறிப்பால் உணர்த்தப்படும் ஆன்மிக தத்துவங்களில் ஒன்றாகும்.

அதாவது, மண்ணென்றும் விண்ணென்றும் ஏதுமில்லை, நாம் வாழுகின்ற மண்ணே அந்த விண், அது போலவே அந்த விண்ணே இந்த மண் என்பதே அந்த ஆன்மிக தத்துவமாகும். அதற்குச் சான்றாகப் பேராசான் திருவள்ளுவரின் பாடல் ஒன்று இங்கே நினைவு கூறத்தக்கது.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்**[27] - என மண்ணுலகிலேயே விண்ணுலக இன்பத்தைக் கண்டு காட்டியவர் திருவள்ளுவர் என்றால் அது மிகையாகாது. எனவே அறிவியல் மற்றும் ஆன்மிக கண்ணோட்டத்தில் சதுரவடிவத்தைச் சக்கரம் எனக் குறிப்பிடுவதிலும் பொருளுண்டு என்பதனை அறிவோமாக. (குறிப்பு: இந்த ஆன்மிக தத்துவத்தைப் பற்றி விரிவாகப் பிற்பகுதியில் ஆராய்ந்தறிவோமாக.)


*தீர்த்தம் என்பதற்கு நீர், தூய்மை, ஆராதனை நீர், புண்ணிய நீர்த்துறை, திருமஞ்சன நீர், திருவிழா, தீ , பிறப்பு , சிராத்தம், பெண்குறி எனப் பொருளாகும். எனவே அச்சொல் திருத்தலங்களைச் சார்ந்த கிணறு, சுனை, சிறிய நீர்த்தேக்கம் போன்றவற்றிலுள்ள நீர் தூய்மையானதால் அதன் புனிதத் தன்மையை உணர்த்தும் பொருட்டு அதனைத் தீர்த்தம் என்பர். அதன் வாயிலாக சக்கரத் தீர்த்தம் என்ற பெயர்க் காரணத்தை அறியலாம். அதற்குச் சான்றாக ருக்வேத சுலோகம் **சதுர்பி சகம் நவதிம் க நமாபி** [28] எனக் குறிப்பிடுகிறது.*

## நாலுமுனைக்கேணி

*பிரம்மாவைப் பிரபஞ்சத்தில் சுவத்திக வடிவமாகவும், புராணமும் வேதங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது எனவும், ஆக்கல் தத்துவமுடைய சுவத்திக சின்னம் எவ்வாறு நான்கு 90 பாகைகள் (டிகிரிகள்) கோணமுடைய வடிவத்திலிருந்து, அதாவது ஒரு சதுரத்திலிருந்து உருவானதோ அவ்வாறே வேதத்தின் அம்சங்களை நான்கு வடிவமாக பிரம்மா வெளிப்படுத்தினார்* [29] *என மச்சய புராணம் கூறுவதை அப்பெயர்ச் சொல்லுக்கான காரணமாகச் சுட்டிக் காட்டலாம்.*

## சுவத்திக கிணறு

*இறைவன் எனும் பிரம்மத்திடம் உயிராகிய ஆன்மா ஒடுங்குவதற்கானப் பயிற்சியே யோகம். அதற்கான ஆசனங்களே யோகாசனங்களாகும். அவை முறையே **சுவத்திகம்**, கோமுகம், பத்மம், வீரம், ஸிஹ்மம், பத்ரம், முக்தம், மயூரம் ஆகிய எட்டு வகைகள் என சாண்டில்ய உபநிடதம் (சுலோகம்-1) கூறுகிறது.*


எச்-165



*சுவத்திகம் முதன்மையான யோகாசனம் என்பதால் இக்கிணறு சுவத்திக வடிவத்தில் கட்டமைக்கப்பட்டு சுவத்திக கிணறு என்ற பெயர் பெற்றுள்ளதன் காரணமாகக் கருதலாம். ஆன்மாவின் நிழல் எனக் கூறப்படும் பத்து பிராணங்களைப் பத்து கோடுகளாகக் கொண்டு உருவாகும் பதினாறு கட்டங்கள் கொண்ட மகாபிதா வரைப்படத்திலிருந்து வெளிப்படுவது சுவத்திக வடிவம் என்பது குறிப்பிடத்தக்கது. பதினாறு கட்டங்கள் பற்றி பிற்பகுதியில் விரிவாகப் பேசப்பட உள்ளது. அதற்குப் பொ.ஆ. மு -500-1500-ஐ சார்ந்த தாகக் கருதப்படும் சிந்து சமவெளி நாகரீக சின்னங்களில் ஒன்றான எச்.165-ல் ஞானத்தைக் குறிக்கும் ├ (தோ) - குறியீடு நான்கு வடிவங்களாக சுழலுவதை காணலாம். அதற்கு உதாரணமாக தமிழத்தின் அங்கமான திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள திருநெடுங்களம் சிவாலயத்தின் கல்தூணில் பொறிக்கப்பட்டுள்ள சுவத்திக சின்னத்தின் கோட்டுருவம் தகுந்ததொரு சான்றாகும்.*

### அரைய(ன்)குளம்

திருவெள்ளறை மகாகிராமத்துக்குத் தெற்கே அமைந்துள்ள பாச்சூர் என்ற ஊரின் குடியிருப்புப் பகுதியில், சிதிலமடைந்த நிலையில், கருங்கற்களால் கட்டடப்பட்ட ஐயனார் கோயில் ஒன்றுள்ளது. அக்கோயிலின் கட்டுமான அதிட்டானப் பகுதிகள் இங்கும் அங்குமாகச் சிதறிக் கிடக்கின்றன. அவ்வாறு சிதறிக் கிடப்பதால் அதில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் சாசனத்தை முழுமையாகப் படித்தறிய இயலவில்லை. எனினும் அந்தக் கல்வெட்டுச் சாசனத்தில் சிலச் சொற்கள் காணப்படுகின்றன.

அவை, வடபாற் கெல்லை **திருவெள்ளறை**, பறையன் குழி, **அரைய(ன்) குளம்** , கரிகண்டன், பெரிய புதுக்கடையினறும், நம்முடைய சிவிதமான ஆமூர் நாட்டில், தெளீஷ்வரமுடைய நாயனார், நாயங்காசாரியன், **உடைப்பும்**, **அடைத்து** போன்றவை யாகும். **திருவெள்ளறை, அரைய(ன்) குளம், உடைப்பும், அடைத்து** போன்ற சொற்கள் அநேகமாக சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணற்றை சுட்டிக் காட்டுவதாகக் கருதலாம். அரையன் என்பதற்கு பழைமையான பட்டம், அரசன் எனத் தமிழ் அகாராதி பொருள் கூறுகிறது. மார்ப்பிடுகு பெருங்கிணற்றை எடுப்பித்தவன் ஆலம்பாக்கத்து விசய நல்லூழானின் தம்பி **கம்பன் அரையன்** என்பதால் அளவில் பெரியதான இக்கிணற்றினைக் குளம் எனக் கருதப்பட்டு அரையன் குளம் என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பதற்கு காரணமாகக் கருதலாம்.

### மாமியார் மருமகள் கிணறு

மாமியார் மருமகள் கிணறு என்றழைக்கப்படும் காரணத்தை அறிய முற்படும் போது, மாமியார் மருமகள் ஆகிய இருவரும் ஒரே சமயத்தில் இக்கிணற்றில் எதிர் எதிரே குளித்தாலும் ஒருவரை ஒருவர் பார்க்க இயலாது, எனவே இக்கிணற்றுக்கு **மாமியார் மருமகள் கிணறு** என்ற பெயர் என திருவெள்ளறை மக்களால் விளக்கமளிக்கப்படுகிறது. இக்கிணற்றிலுள்ள ஐந்து கல்பத்திகளின் அமைப்பும் அவ்வாறு மறைக்கப்படுவதற்குக் காரணமாக இருக்கக்கூடும் எனக் கருதத் தோன்றுகிறது. உண்மையில் இதில் மாமியார் மருமகள் என்ற இருவருடைய நெருங்கிய உறவை வேற்றுமைப்படுத்தி காட்ட முற்படுவதை உணரலாம். சற்று ஆழ்ந்து சிந்தித்தால் மட்டுமே அதன் உண்மையான காரணம் வெளிப்படும். பிறப்பு- இறப்பு, இன்பம்-துன்பம், நல்லது - கெட்டது, உயர்ந்தவன்- தாழ்ந்தவன், உண்மை- பொய் என **இரட்டை**களாக வேற்றுமைப்படுத்தி பார்ப்பதும், துன்பமும் கவலையும் நிறைந்த **உணர்வு**களுடன் கட்டுண்டு கிடப்பது உயிராகிய ஆத்மா மட்டுமே

ஆனால் பரமாத்தமா அவ்வாறில்லை. ஏனெனில் பரமாத்மா ஏகமானவர், நிரந்தரமான ஆனந்தவடிவினர். அதாவது **பிறப்பு, இறப்பு** என்ற இரட்டைகள் நிறைந்த மற்ற வாழ்க்கைச் சுழலில் சிக்குண்டுள்ள பஞ்சபூதங்களின் கூட்டுக் கலவையாகிய மனித உடலுக்கு மட்டுமே அன்றி, அது உடலின் இதயக்குகையில் குடி கொண்டிருக்கும் ஏகமான பரமாத்மாவுக்கில்லை.

மேலே கூறப்பட்ட இரட்டைகள், உணர்வுகள், பிறப்பது, இறப்பது போன்றவை எல்லாமே **ஒரு மாயை.** மாமியாரையும் மருமகளையும் இருவராக வேற்றுமைப் படுத்தி காண்பதும் ஒரு மாயை. அன்னையின் வடிவமாகிய அவ்விருவரையும் ஒற்றுமைப்படுத்தியே காணவேண்டும் என்பதற்காகவே **மாமியார் மருமகள் கிணறு** என்று பெயரிடப் பட்டுள்ளதன் காரணத்தை ஆன்மிக சிந்தனையுடன் அறியலாம்.

### பிரம்ம குளம்

சிற்ப சாஸ்திர நூலான மயமதத்தில், அறுபத்திநான்கு கட்டங்கள் கொண்ட வரைபடமான மாண்டுக்க வரைபடத்தின்[30] நடுவே சுவத்திகவின் வடிவம் வெளிப்படுவதையும் காணலாம்.

அதனுள்ளே நாற்பத்தைந்து தேவாதி தேவர்கள் எங்கெங்கே இடம் பெறுகின்றனர் என்பதையும், நடுவே உள்ள நான்கு கட்டங்கள் **க** எனும் பிரம்மத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற விதி முறையையும் அறியலாம். சுவத்திக வடிவுடைய மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் வடமேற்கு திசையிலுள்ள (வாயு மூலையில்) களிற்றுப்படிகளின் வலது புறமுள்ள களிற்றின் (சிற்பத்தின்) நெற்றியில், ஒரு செவ்வகத்தின் நடுவே கூட்டல் சின்னம் கொண்ட குறியீடு ஒன்று தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அக்குறியீட்டிலுள்ள செவ்வக வடிவம், ஒரு கூட்டல் குறியினால் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படுவதைக் காணலாம். **க-** எனும் பிரம்மத்தின் சின்னம் இக்குளத்தில் பொறிக்கப்பட்டுள்ளதால், இது பிரம்மகுளம் என்ற பெயர் பெற்றிருக்க வாய்ப்புண்டு.

### தென்னூர் பெருங்கிணறு

இக்கிணற்றிலுள்ள ஒரு கல்வெட்டு சாசனம், திருவெள்ளறை மஹா கிராமத்து தெற்குத்தலை வாசலில் **வாணிகன் செய்த பெருங்கிணறு** நாலு வாசலு (ம்) மதில்களும் குலைந்து வெள்ளமும் புக்குதிகையில் எனக் குறிப்பிடுகிறது. **வாணிகம் செய்த** என்றில்லாமல் **வாணிகன் செய்த** எனும் சொற்களின் அடிப் படையில், சுவத்திக வடிவ மார்பிடுகு பெருங்கிணறு முதலில்

(தென்னூர்) **பெருங்கிணறு** என்ற பெயரில் வாணிகன் ஒருவனால் முதலில் கட்டப்பட்டு, பின்னர் கம்பன் அரையன் என்பவரால் சுவத்திக வடிவத்தில் மாற்றியமைக்கப்பட்டு **மார்ப்பிடுகு பெருங்கிணறு** என்ற பெயர் பெற்றுள்ளது எனத் தெரிய வருகிறது.

### தென்னூர் பெருங்கிணறு

இக்கிணற்றிலுள்ள ஒரு கல்வெட்டு சாசனம், திருவெள்ளறை மஹா கிராமத்து **தெற்குத்தலை** வாசலில் **வாணிகன் செய்த பெருங்கிணறு** நாலு வாசலு (ம்) மதில்களும் குலைந்து வெள்ளமும் புக்குதிகையில் எனக் குறிப்பிடுகிறது. **வாணிகம் செய்த** என்றில்லாமல் **வாணிகன் செய்த** எனும் சொற்களின் அடிப் படையில், சுவத்திக வடிவ மார்பிடுகு பெருங்கிணறு முதலில் **(தென்னூர்) பெருங்கிணறு** என்ற பெயரில் வாணிகன் ஒருவனால் முதலில் கட்டப்பட்டு, பின்னர் கம்பன் அரையன் என்பவரால் சுவத்திக வடிவத்தில் மாற்றியமைக்கப்பட்டு **மார்ப்பிடுகு பெருங்கிணறு** என்ற பெயர் பெற்றுள்ளது எனத் தெரிய வருகிறது.

இதுவே, இக்கிணறு வாணிகன் ஒருவனால் **தென்னூர் பெருங்கிணறு** என்ற பெயரில் கட்டப்பட்டதற்கான சான்றாகக் கருதலாம். **தென்னூர் பெருங்கிணறு இதன் பியர் (பெயர்) மார்ப்பிடுகு பெருங்கிணறென்பது** எனக் கூறும் மற்றுமொரு கல்வெட்டுச் சாசனம், இக் கிணற்றிற்கு முதலில் **தென்னூர் பெருங்கிணறு** என்ற பெயர் இருந்துள்ளதை உறுதி செய்கிறது.

தென்னூர் என்ற சொல் தென்திசையிலுள்ள குடியிருப்புப் பகுதியைக் குறிப்பதாகும். **பெருங்கிணறு** எனும் பொதுவானச் சொல் கிணற்றின் பெரிதான அமைப்பை மட்டும் குறிப்பிடுகிறது என குறைவாகக் கருதாலாகாது.

ஏனெனில், மொழி இலக்கணத்திற்கு இது ஒருச் சிறந்தச் சான்றாகும். (எந்தவொரு) மொழிக்கும் இலக்கணம் முக்கியம். இலக்கணத்தில், சந்தி அல்லது இரண்டு எழுத்துக்களின் சேர்க்கை என்பது ஓர் அடிப்படைப்பகுதி.

உதாரணமாக மகேசுவரன் என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். அதில் மகா என்ற சொல்லும், ஈசுவரன் என்ற சொல்லும் இணைந்துள்ளன. இதில் மகா முற்பகுதி அல்லது கீழ்பகுதி, ஈசுவரன் பிற்பகுதி அல்லது மேற்பகுதி [31].

அதுபோலவே பெருங்கிணறு என்பது இலக்கண ரீதியில் **பெரும்** முற்பகுதி **கிணறு** பிற்பகுதி. இரண்டும் இணைந்து பெருங்கிணறு எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது தமிழ் மொழி இலக்கணத்திற்கு சிறந்ததொருச் சான்றாகக் கருதலாம்.

### மார்ப்பிடுகு பெருங்கிணறு

நம் முன்னோர்களின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் சிறந்ததொரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்துள்ளது. மனம் எந்தவிதமான சஞ்சலனமற்று தெளிவாக இருக்க வேண்டும் என்பதே அவர்களது முக்கிய நோக்கமாகும். அவ்வாறு மனம் சஞ்சலமற்று இருக்க, முதலில் மனதை ஒரு வட்டத்திற்குள் கொண்டு வரவேண்டும்.

அவ்வாறு கொண்டு வர முயற்சிப்பதே மனப்பயிற்சியின் முதற்படி. அவ்வாறு ஒரு வட்டத்திற்குள் கொண்டு வரப்பட்ட மனம் ஒரு புள்ளியில் குவிக்கப்படவில்லை என்றாலும், தொடர்ந்த பயிற்சியின் மூலம் முதலில் மனம் ஒரு வட்டத்திற்குள் சுழலுமாறு செய்ய முடியும்.

அவ்வாறு தொடர்ந்து செய்யும் மனப்பயிற்சியின் மூலம் வட்டம் படிப்படியாகச் சிறிதாக்கப்படும், அதனால் ஒருங்கிணைக்கப்பட்டு, பிந்து எனும் ஒரு புள்ளியில் குவிந்து மனம் ஒருமைப்படுத்த முடியும். அந்த, **மன ஒருமைப்பாட்டின் மூலமாக எதையும் சாதிக்க முடியும். மலையைக்கூட அணு அணுவாக உடைத்தெறிய முடியும்**[32] என வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதைச் சுட்டிக் காட்டலாம்.

அதனால் **நம்முன்னோர்கள் தியானம், செபம் போன்ற மனம் சம்பந்தமான செயல்களை எல்லாம் எளிதில் திறம்பட செய்ய முடிந்தது. மனக்கட்டுப்பாட்டால் மன அழுத்தம் அற்றவர்களாக ஆரோக்கியமான உடலுடன் சீரும் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர்.** தாம் அறிந்தவை யாவும் தம்மோடு அழிந்து விடாதபடி, உலக மக்கள் அனைவரும் அறியும் படியாகவும் விட்டுச் சென்றவர்கள் நம் முன்னோர்களாகிய ஞானிகளே ஆவர். பழமையான நூல்களின் வாயிலாக நாம் அறிவதும் அஃதே ஆகும்.

ஒரு மொழிக்கு முக்கியமான இலக்கணத்தில் சந்தி எனும் இரண்டு எழுத்துக்களின் சேர்க்கையை அடிப்படையாகக் கொண்டு ஐந்து முக்கிய சிந்தனைப் பயிற்சிகளை தைத்திரீய உபநிடத்தில் விளக்கப்பட்டுள்ளது. **பிரபஞ்சம், ஒளிப்பொருள், கல்வி, உயிர்களின் உற்பத்தி, உடம்பு**[33] ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திப்பதே அந்த ஐந்து முக்கிய பயிற்சிகளாகும்.

அந்த ஐந்தில் இரண்டாவதாக இடம் பெறுவது ஒளிப்பொருள் சிந்தனை. இச்சிந்தனை சற்றுக் கடினமானதாயினும், உயர்நிலை சிந்தனை ஆகும். ஆதலால் ஒளிப்பொருள் சிந்தனையைப் பற்றி முதலில் காண்போம்.

அக்கினி முற்பகுதி, சூரியன் பிற்பகுதி. இரண்டும் இணைவதால் தண்ணீர் உண்டாகிறது. இரண்டையும் ஒருங்கிணைப்பது மின்னல். [34] இயற்கைக்கு நிகரற்ற ஆற்றல்கள் ஏராளம் உண்டு. ஆற்றல் மிகுந்த இயற்கையின் அற்புதமான அழகை ரசிப்பதற்கு **ஒளி** எனும் வெளிச்சம் தேவை. அத்தகைய ஒளிக்கு மின்னல் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும்.

அகலப் பரந்த மின்னல் நிறைந்ததொரு ஒளியைத் (வெளிச்சத்தைத்) தரக்கூடியது. எனவே மின்னல் அதிகமான வெளிச்சத்தைத் தரக்கூடிய சூரியன் மற்றும் அக்கினியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

மார்ப்பிடுகு என்பதில், மார் என்ற சொற்சுடர் அகண்ட அல்லது அகலமானது எனவும், தெலுங்கு மொழியில் பிடுகு என்ற சொல்லுக்கு **இடி** எனவும் பொருளாகும். பொதுவாக பேரிடி அல்லது பெரிய இடி எனப் **பேரொலியைக்** குறிப்பிடுவது சொல் வழக்கு. ஆனால் அகண்ட இடி என்றோ, அகலமான இடி என்றோ குறிப்பிடுவதில்லை.

அதே நேரத்தில் அகண்ட மின்னல் அல்லது அகலப்பரந்த மின்னல் (ஒளி) எனக் குறிப்பிடுவதுண்டு. மார்ப்பிடுகு என்பதிலுள்ள **மார்** என்றச் சொல்லுக்கு அகலப்பரந்த மின்னல் (பேரொளி) எனவும், **பிடுகு** என்றச் சொல்லுக்கு பெரிய இடி (பேரொலி ) எனவும் தனித்தனியே பொருள் அறிந்து , மார்ப்பிடுகு என்பது ஒளி, ஒலி ஆகிய இரண்டும் இணைந்தது என பொருள்படுத்தும் ஒரு அற்புதமானச் சொல் எனவும் கருதலாம்.

**மாரி** என்பதற்கு மேகம், நீர் எனப்பொருள். **நாட்டில் மழை பெய்ததா என்பதை மழை மாரி பெய்ததா? எனக்கேட்பது பழமையான சொல் மரபு.** எனவே மாரி என்பதும் பன்மை ஈரான மார் என்பதும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொல்லாகவே இருக்கக்கூடும். மின்னலும் (ஒளியும்), இடியும் (ஒலியும்), தண்ணீரின் மூலாதாரமாகிய மழையின் அறிகுறி.

அவற்றில் நாம் முதலில் காண்பது மின்னல் (ஒளி), அது நான்காவது அறிவாகும். அதனை அடுத்து கேட்பது இடி ( ஒலி) அது ஐந்தாவது அறிவாகும். அதாவது மின்னல் (மார்) முற்பகுதி, இடி (பிடுகு) பிற்பகுதி. அதாவது நான்காவது அறிவிற்கு அடுத்த ஐந்தாவது அறிவு.

எனவே **மார்ப்பிடுகு** என்பது தைத்திரீய உபநிஷதம், வாழ்க்கைக்கல்வி (சிக்ஷா வல்லி) குறிப்பிடும் ஒளிப்பொருள் சிந்தனையாகிய ஆறாவது அறிவாகிய மனதை ஒருநிலைப் படுத்தியதன் வெளிப்பாட்டைக் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

முற்கால சோழ மன்னர்கள் சிலருக்குப் பெரும்பிடுகு என்ற சிறப்பான புனைப் பெயர்கள் இருந்துள்ளது. பெரும் என்பதற்கு பெரிய எனப் பொருள்படும். இதில் பெரிய என்பது அகண்டு பரந்த மின்னலின் வெளிப்பாடாகும். எனவே மார்ப்பிடுகு என்பதும் பெரும்பிடுகு என்பதும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மிகுந்த சிறப்புடைய சொற்சுடர்களாகவும் இருக்கலாம்.

சுவத்திக வடிவ கிணற்றின் பல்வேறு பெயர்களைப் பற்றியும் பெயர்களுக்குள்ளே மறைந்துள்ள ஆன்மிக தத்துவங்களையும் அறிந்ததை அடுத்து இக்கிணற்றில் காணப்படும் குறியீடுகளைப் பற்றியும் காண்போமாக.



கடந்த 1991-இல் தமிழக தொல்லியல் துறையில் பதிவு அதிகாரியாக பணியாற்றிய கி.ஸ்ரீதரன் ஐயா அவர்கள் ஆசிரியர் பெருமக்களுக்கு மார்ப்பிடுகு பெருங்கிணற்றில் கோடைக்கால கல்வெட்டுக்களை படிக்கப் பயிற்சியளிக்கும் காட்சி.

உ

## குறியீடுகள்

குறியீடுகள் என்பதற்கு குறிப்பாக அகத்தில் உள்ள காண முடியாத பரமாத்மாவின் அங்கமான ஆன்மாவை, புறத்துடன் தொடர்புடைய ஐந்தறிவுகளோடு மனம் எனும் ஆறாவது அறிவைக் கொண்டு புத்தி எனும் ஏழாவது அறிவிடனும் அறியப்படும் வகையில் சூட்சுமமாக அதாவது அறிவு நுட்பமாக அறிவிக்கும் திறன் படைத்தவை எனப் பொருள்படும். அந்த ஐந்தறிவுகள் - பஞ்சபூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐந்து திசைகள் ஆகியவற்றுடன் கூடிய நெருங்கிய தொடர்பை கீழ்கண்ட அட்டவனையின் வாயிலாக அறியலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் அறிவு | - வாயு | - தோல்- ஸ்பரிசம் | - வடமேற்கு |
| 2 ஆம் அறிவு | - நீர் | - நாக்கு- ருசி | - வடகிழக்கு |
| 3 ஆம் அறிவு | - பூமி | - மூக்கு- நுகர்தல் | - தென் மேற்கு |
| 4 ஆம் அறிவு | - நெருப்பு | - கண் - பார்த்தல் | - தென்கிழக்கு |
| 5 ஆம் அறிவு | - ஆகாயம் | - காது - கேட்டல் | - மையம் |
| 6 ஆம் அறிவு | - மனம் | - எண்ணம் | - மையப்புள்ளி |
| 7 ஆம் அறிவு | - புத்தி | - அறிவு | - நுண்ணியப்புள்ளி |

மேற்கண்ட முதலாவது அறிவான வாயுவைக் குறிக்கும் **குறியீடு** ஒன்று வடமேற்கு மூலையிலுள்ள வலதுபுற களிற்றுப் படியில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்குறியீடு காண்பதற்கு சமபக்க சதுரஅளவில் இல்லாமல் சற்றே வேறுபட்ட அளவில் அதாவது செவ்வக வடிவத்தில் (3.9063 அங்குலம் x 4.0961 அங்குலம்) உள்ளது. அதன் நடுவே ஒரு செங்குத்துக் கோடும் ஒரு படுக்கைக் கோடும் இணைந்த கூட்டல் குறியீடு ஒன்றுள்ளது. அக்குறியீடு அச்செவ்வகத்தை நான்கு பாகங்களாகப் பிரித்துக் காட்டுகிறது.




செவ்வக வடிவத்தை நான்கு பாகமாகப் பிரித்துக் காட்டும் நடுவே உள்ள கூட்டல் குறியீட்டிலுள்ள வடக்கு-தெற்கு திசைகளைக் குறிக்கும் செங்குத்துக் கோடு - நிலையான, காரண, பிரகாசம் (சிவன்) எனும் விமலனை குறிக்கும். கிழக்கு-மேற்கு திசைகளைக் குறிக்கும் சற்று நீளமான படுக்கைக் கோடு-சலனத்திற்கு உட்படும், காரிய, (சக்தி) விமரிசையை குறிக்கும்.

அதாவது செவ்வக வடிவத்திலுள்ள கூட்டல் குறியீடு பிரபஞ்சத்தில் சதா இயங்கி கொண்டிருக்கும்[35] காரணகாரிய, பிரகாச விமரிசன வடிவமான சிவசக்தியின் ஐக்கிய உரூபமாகும். இதுபோன்ற குறியீட்டை மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் அடியில் இருப்பதை கண்டதாக (இறைவனடிச் சேர்ந்தவரும் இக்கிணற்றின் முன்னாள் பாதுகாவலருமான) தெய்வத்திரு பெரியண்ணன் கூறியச் செய்தி குறிப்பிடத்தக்கது.


இதே போன்ற குறியீடுகள் தஞ்சை மாவட்டம் சந்திரபுரி என்றழைக்கப்பட்ட **செந்தலையில் உள்ள ஸ்ரீ சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் முன் மண்டபத்திலுள்ள கல்தூண் ஒன்றிலும்,** திருச்சிராப்பள்ளி, திருவரங்கம் ஸ்ரீ அரங்கநாதர் ஆலயத்தின் ஆயிரம் கால் மண்டபத்திலுள்ள களிற்றுப்படி ஒன்றிலும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை குடைவரைக் கோயிலுக்கு இடது புறமுள்ள முன் மண்டபத்தின் களிற்றுப்படி ஒன்றிலும் காணலாம்.

இவற்றைத் தவிர மேலும் பல திருத்தலங்களின் தரைகளில் பதிக்கப்பட்ட பலகைக்கற்களின் மேற்புறத்திலும் காணலாம். திருத்தலங்களில் காணப்படும் இக்குறியீடுகள் எதனைக் குறிப்பிடுகின்றன என்பதை ஆராய்ந்தறிவது அவசியமாகும். செவ்வக வடிவமும், அதனை நான்கு பாகமாக பிரித்துக் காட்டும் கூட்டல் குறியீடு ஒருங்கிணைந்த வடிவமும் வியோமம் எனும் வானத்தைக் குறிக்கும்.

வானம் எனும் விண்ணுலகின் அதிபதி பரமன். பரமனுக்கு விண்ணவன் என்றப் பெயருமுண்டு. **பரமன்** என்ற பெயர்ச் சொல் இக்கிணற்றிலுள்ள பாடல் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. சிற்ப சாஸ்திர நூலான மயமதத்தில், ஒன்று முதல் ஆயிரத்து இருபத்திநான்கு கட்டங்கள் கொண்ட முப்பத்திரண்டு வகையான வரைபடங்களைப் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் $(8 \times 8 = 64)$ அறுபத்திநான்கு கட்டங்கள் கொண்ட வரை படத்தை மாண்டூக்க வரைபடம் என அடையாளப்படுத்துகிறது. அதன் நடுவே சுவத்திக-வின் வடிவம் அமைவதைக் காணலாம்.



மேலும் அதனுள்ளே நாற்பத்தைந்து (45) தேவாதி தேவர்கள் எங்கெங்கே இடம் பெறுகின்றனர் என்பதும் நடுவே உள்ள நான்கு கட்டங்கள் க- எனும் பரமனுக்கு/ பிரம்மத்திற்கு ஒதுக்கப்படவேண்டும்[36] போன்ற விதிமுறையையும் கூறப்பட்டுள்ளதை முன்பே அறிந்தோம்.





தமிழகத்தில் நிகழ்ந்த சுனாமியின் போது மாமல்ல புரத்திற்கு அருகே உள்ள வங்கக் கடல் பகுதி உள்வாங்கப்பட்டது. அதனால் வெளிப்பட்ட நிலப்பகுதியை அகழ்வாய்வு செய்த போது ஒரு ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தின் அடித்தள அமைப்பு நான்கு கட்டங்களாக அமைக்கப்பட்டுள்ளதை இந்தியத் தொல்லியல் துறையைச் சார்ந்த ஆய்வறிஞர்கள் கண்டறிந்ததுள்ளது மயமதம் கூறும் விதிமுறைக்குத் தக்கதொருச் சான்றாகச் சுட்டிக் காட்டலாம்.

இம்மார்பிடுகு பெருங்கிணற்றைச் சுற்றியுள்ள வடபுற மதில் சுவரில் பிரம்மதரிசன திருக்குறியீடு ஒன்றும் தென்கிழக்கு மூலையின் வலது புறத்திலுள்ள களிற்றுப் படியில் தொரட்டி போன்றதொரு சிறிய குறியீடும், அதனருகே வட திசையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட முக்கோண வடிவம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு குறியீடுகளும் டிசம்பர் முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலம் வானவீதியில் காட்சித் தரும் ஓரையான் எனும் காலப்புருடன் உடுக்கணத்தின் வலது காலுக்கு கீழே அதாவது தென்கிழக்கு திசையில் உதிக்கும் பெருநாய் அல்லது வேட்டைக்கார நாய் எனும் உடுக்கணத்தை குறிப்பிடுவதாகக் கருதலாம். இந்த உடுக்கணத்திலுள்ள மூன்று நட்சத்திரங்கள் ஒரு முக்கோண வடிவமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த பெருநாய் உடுக்கணத்திலுள்ள கத்திரி எனும் நட்சத்திரம், பூமியிலிருந்து 8.7 ஒளியாண்டுத் தொலைவில் உள்ளது எனவும், மற்ற நட்சத்திரங்களை விட மிகவும் பிரகாசமான இந்நட்சத்திரம் சூரியனை விட 26 மடங்கு அதிகமான ஒளிர்வு உடையது எனவும் வானவியல் நூல்கள் பகர்கின்றன.

அதாவது **எல்** எனும் சூரியனை விட பலமடங்கு அதிகமான ஒளிர்வுடையதால் இந்நட்சத்திரமே **ஏல்** என கூறப்பட்டுள்ளதா என்பது மேலும் ஆய்வுக்குரியது.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் இரண்டாம் வாரம் வானத்தின் உச்சியில் எழும் அந்நட்சத்திரம் வேளாண்மைக்கு சீவதாரமாகிய வருடாந்திர மழையையும் அதனால் உண்டாகும் வெள்ளப் பெருக்கையும் குறிக்கும் நற்சகுணமாக பண்டைய எகிப்தியர் கருதினர் என்பதும் அறியத்தக்கது.



மேற்கண்ட குறியீடுகளுக்கு மேலும் சிறப்பூட்டும் வகையில் கிழக்குத்திசை வெளி மதில்சுவர் தென்திசை நோக்கி திரும்பும் முனையில், இமயமலையின் ஓர் அங்கமான ஓம் பர்வதத்தில் காணப்படும் பனிப்படலத்தின் வடிவமான **ஓம் குறியீடு** ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் **எண் 8** - ஐ இயற்கை கணித முறையில் குறிக்கும் **தமிழ் எழுத்தான அ** - இணைந்தும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஓம் குறியீட்டின் பெரும் பகுதியைக் கொண்ட விந்தை எண் எனப்படும் எண் **9**-ன் வடிவமே, இயற்கை கணித தமிழ் எழுத்து என்பது குறிப்பிடத்தக்கது. அரிதாகக் காணக் கூடிய இந்த எண்-9, வடதிசை படிக்கட்டுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது இக்கிணற்றின் சிறப்புகளில் ஒன்றாகும்.

ஓம் எனும் தீர்க்க பிரணவ மந்திரமாகிய ஓங்காரத்தின் மொழிகள் (அ, உ, ம், அமைதிநிலை, ஆன்மா) உடல், மனம், மௌனம், அருள், ஆன்மா ஆகிய ஐந்து. அதில் **ம்** என்பதே மௌன மொழி. அம்மொழியின் சிறப்பைக் கூறும் **எட்டும், இரண்டும் அறியாதவனே!** எனும் பழைமையான பாடல் ஒன்றுண்டு. 8 என்பது அ, 2 என்பது உ எனும் இரண்டு எழுத்துக்களாகும். **அ, உ அறியா அறிவில் இடைமகனே!** எனக்கூறும் இடைக் காடனாரின் தனிப்பாடலையும் (யா.வி. சூ.37), அதன் பொருளையும் காண்போமாக.

*வெறிகமழ் தண்சிலம்பின் வீங்கி உகளும்*

*மறிமுலை உண்ணாமை வேண்டிப் - பறிமுன்கை*

*அ,உ அறியா அறிவில் **இடை**மகனே !*

*நொ அலையல் நின்னாட்டை நீ*

*பொருள்: நறுமணம் கமழும் தெய்வத்தின் திரு அருள் வேண்டி காவிரிப் புதுவெள்ளம் போன்ற தேடல் எனும் பொங்கும் மனமுடையோர்க்கு வரமளிக்கும் உமையம்மையை வணங்கி, **அ**கரமாகிய இறைவனே **உ**கரமாகிய சிவசக்தி என்பதை அறியாமல் உள்ளவர்க்கு அறிவிப்பதே இடையில் பிறந்த **ம**காரம் என்னும் சிவமாகும்.*

*அது இடக்கை மேளத்தின் மென்மையான ஒலி போன்றது. இறைநிலையின் முன்னுள்ள அமைதி நிலைக்கு முன்னிலை வகிப்பது அதுவே என்பதை நீ அறிவாயாக. ஓம் என்பதன் அ, உ, ம் ஆகிய மூன்றில், **அ**-என உச்சரிக்கும் போது திறந்த வாயிலிருந்து காற்று **வெளி**ப்படுகிறது. **உ**- என உச்சரிக்கும் வெளிக்காற்று **உள்**ளே இழுக்கப்படுகிறது.*


*ஆனால் **ம்**- என என உச்சரிக்கும் போது உள் காற்று வெளிப்படுவதும், வெளிக்காற்று உட்புகுவதும் இல்லாத **இடை**நிலை. அதாவது உள்வெளியற்ற (உள்- வெளி என்றில்லாத) இடைநிலை. வெளிப் பாட்டிற்கும் ஒடுக்கத்திற்கும் இடைப்பட்ட காரண நிலை எனக் கூறப்பதே **ம்** என்பதால் அதனை **ஊமை எழுத்து** என்பர்.*

*இந்த ஊமை எழுத்து, ம் - எனும் மூன்றாம் நிலையில், அ,உ ஆகிய இரண்டையும் **அளவிடுதல், கிரகித்தல்** ஆகிய இரண்டு தன்மைகள் உடையதாக மாண்டூக்கிய[23] உபநிடதம் கூறுகிறது. ஓம் எனும் ஓங்கார மந்திரத்தை மிகுந்த ஈடுபாட்டுடன், தியானிப்பதனால் அறுதி உண்மைகள் அனைத்தும் அனுபவ உண்மையாகும் என்பர். இதையே, **ஓமெழுத்தில் அன்பு மிக ஊறி ஓவியத்தில் அந்தம் அருள்வாயே!**- எனும் அருணகிரிநாதரின் காமியத்தழுந்தி என்று தொடங்கும் திருப்புகழ் (பாடல் 212) சுட்டிக் காட்டுகிறது.*

*இக்கிணற்றின் வடதிசையிலுள்ள கற்படிகளின் இறுதியிலுள்ள அரை வட்ட வடிவமுடைய கற்பலகை ஒன்றில் படுக்கை வசமாக **தோ** குறியீடு ஒன்று பொறிக்கப் பட்டுள்ளதை முற்பகுதியில் கண்டோம். அதில் ஒரு செங்குத்துக் கோடும், ஒரு படுக்கைவசக் கோடும் உள்ளன. இதே குறியீடு சுவத்திக கிணற்றின் மேற்கு திசையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு சாஸனத்தின் இறுதியில் இரண்டு இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

இக்குறியீட்டின் உட்பொருளையும் அறிவது அவசியமாகும். பழங்காலத்தில் தீ மூட்டுவதற்கு கீழே படுக்கை வசமாக ஒரு கட்டையும், மேலே செங்குத்து வசமாக ஒரு கட்டையும் என இரண்டு அரணிக் கட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. செங்குத்துக் கட்டையை கடையும் போது ஏற்படும் உராய்வால் கீழ் அரணிக்கட்டையில் வெப்பம் உண்டாகி தீப் பொறி வெளிப்படுவதைக் கண்டறிந்த நம் முன்னோர்கள் அத்தீப் பொறியால் தீ மூட்டியுள்ளனர்.

அவ்வாறு தீ மூட்டுவதை பரமாத்மாவை காண்பதற்கான மார்க்கம் என்பதையும் அனுபவத்தில் அறிந்துணர்ந்து அதனை பிரம்மோபநிடதத்தில் 18 வது சுலோகமாகவும் பதிவு செய்துள்ளனர். அதுவானது,



ஆத்மானமரணிம் க்ருத்வா

ப்ரணவஞ்சோத்தராணிம் / த்த்யான

நிர்மதனாப்ப்யாஸாத் -தேவம் பச்யேந்

பொருள்: ஆத்மாவைக் கீழ் அரணிகட்டையாகவும், தீர்க்க பிரணவ மந்திரம் எனும் ஓங்காரத்தை மேல் அரணிக் கட்டையாகவும் தியானத்தில் நிலைபெறச் செய்து கடைதலை பழக்கம் செய்து மறைந்திருந்த அக்னியை வெளிக்காண்பது போல பரமாத்மாவைக் காணவேண்டும்.


ஓம் என்பதை ஓம் என்றோ, ஓம் எனும் மந்திரம் என்றோ, ஓம் எனும் பிரணவ மந்திரம் என்றோ குறிப்பிடுவதைத் தவிர்த்துத் **தீர்க்க பிரணவ மந்திரம்** என்றே குறிப்பிட வேண்டும் என்பது அறியத்தக்கது. ஏனெனில்; **ஓம்** - ஆமென்னும் உடன்பாட்டை உணர்த்தும் ஓர் இடைச்சொல், தன்மை, பன்மை விகுதி, **பிரணவம். தீர்க்க(ம்)**- அறிவு தெளிவும் கவர்ச்சியுமுள்ள தோற்றம், பெருமிதத் தோற்றம். **பிரணவ மந்திரம்**- ஓங்கார மந்திரம் எனப் பொருளாகும்.



இமயமலையிலுள்ள ஓம் பர்வதத்தில் (மலையில்) ஓம் வடிவத்தில் காணப்படும் பனிப்படலம்.



## ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள்



முற்பகுதியில் சுவத்திக வடிவ கிணற்றின் வடதிசையில் ஏறுமுகமாக உள்ள படிக்கட்டுக் களில் ஒன்று முதல் பத்து வரையிலான எண்களின் வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளதை முற்பகுதியில் அறிந்தோம். இப்பகுதியில் அவற்றைப்பற்றி சற்று விரிவாக காண்போமாக.

உலக அளவில் முதன் முதலில் எண்களை உருவாக்கிய நாடும், அந்த எண்களுக்கு இயற்கையான வரிவடிவங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு இயற்கணிதம் என அறிவித்ததும் நம் பண்டைய இந்திய துணை கண்டமாகும்.

தற்காலத்தில் உலக அளவில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வரும் எண்கள் முதன் முதலில் இந்தியாவில் தான் உருவானது என்பதை அறிந்த காரணத்தால் தற்போதைய பாட நூல்களில் **இந்து - அரபிக் எண்கள்** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அம் மாற்றத்திற்கு வித்திட்ட அறிஞர்களில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த மருத்துவர் இராபர்ட் லயரா என்பவரும் ஒருவர். அவருக்குத் துணை புரிந்தவர் இந்நூலாசிரியர் தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் என்பது குறிப்பிட்டத்தக்கது.

பழங்கால எண்களைப்பற்றிய **கல்லெழுத்துக்கலை**-யின் நூலாசிரியர் தமிழகத் தொல்லியல் துறை மேலான் இயக்குணர் நடன. காசிநாதன் அவர்கள் **எண்கள்** என்ற தலைப்பில் பல செய்திகளைப் பதிவு செய்துள்ளார். செப்புப் பட்டயங்கள் மற்றும் கல்வெட்டுக்களின் வாயிலாக எண்களின் வளர்ச்சியையும் அதனது காலத்தையும் அவர் பதிவு செய்துள்ளதை மேலும் பல ஆதாரங்களுடன் ஒப்பிட்டுள்ளார்.

01. பூலாங்குறிச்சி கல்வெட்டில் நூற்றுத் தொண்ணுற்றிரண்டு என்ற இலக்கம் எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. அடுத்ததாக பல்லவர் கால வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில் இலக்கம் எண்களால் எழுதப்படாமல் எழுத்துக்களாகவே எழுதப்பட்டுள்ளன.

03. கி.பி. 4-ஆம் நூற்றாண்டு அளவில் செப்புப் பட்டயங்களில் எண்களைக் காண முடிகிறது.

04. பல்லவ அரசி சாருதேவி வெளியிட்ட செப்புப் பட்டயத்தில் முதன் முதலாக 2,3,4 ஆகிய எண்களைப் பார்க்க முடிகிறது. இந்த எண்கள் சாதவாகன மன்னர்களின் நாசிக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் எண்களையும், நாகார்ஜுன கொண்டாவில் உள்ள இக்மல்வாகு மன்னன் சிவீர புருஷதத்தாவின் கல்வெட்டுக்களில் காணப்படும் எண்களையும் போன்று காணப்படுகின்றன. இதனால் ஆந்திரப் பகுதியிலிருந்து வந்த பல்லவர்கள் தான் முதன்முதலில் இந்த எண்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்று கருதவும் வாய்ப்புள்ளது.

05. கி.பி.5-ஆம் நுற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மன்னன் சிம்மவர்மனின் பிக்கீரச் செப்பேட்டில் எண்களைக் காண முடிகிறது. இதில் 1,2,4 ஆகிய எண்கள் எழுதப்பட்டுள்ளன. சாருதேவியின் செப்புப் பட்டயத்தில் காணப்பெற்ற எண்-2, சிம்மவர்மனின் செப்பேட்டில் உள்ள எண்-2 போலவே உள்ளது. எண் 4-ன் வரிவடிவத்தில் சிறிய மாற்றம் மட்டுமே நிகழ்ந்துள்ளது.

06. பாண்டிய மன்னன் ஐடிவலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனின் செப்பேட்டில் 1 முதல் 7 வரை எண்கள் எழுதப்பட்டுள்ளன. இவை கி.பி.770 -ஐ சார்ந்ததால் இந்த எண்கள் ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன.

07. கி.பி.10-ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த பார்த்திவேந்திர வர்மனின் உத்தரமேரூர்க் கல்வெட்டில் தான் 2 முதல் 10 வரையிலான எண்களைக் காண முடிகிறது. அத்துடன் நூறு, ஆயிரம் ஆகியவற்றுக்கான குறியீடுகளையும் காண முடிகிறது.[37]

*மேற் கண்ட விபரங்களை அறிந்த பின்னர், ஒன்று முதல் பத்து வரையிலான எண்களின் வடிவங்களை ஒரே இடத்தில் காண இயலாதா- என ஆர்வாளர்களுக்குத் தாக்கம் ஏற்படுவது இயல்பு.*

***சுவத்திக கிணற்றின் வடதிசையிலுள்ள படிக் கட்டுக்களில் காணப்படும் ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் மட்டுமே*** *அத்தாக்கத்தைத் தணிக்கின்றன. அத்தோடு மட்டுமின்றி அகத்தேடல் உணர்வுடையோர்க்கு ஆன்மிக தத்துவங்களைப் காணொளி காட்சியாகத் திரையிட்டுக் காட்டுகின்றன.*

*காண்பவர் கண்களுக்குகேற்ப காட்சிகளும், காட்சிகளுக்கேற்ப அதனது பொருளும் மாறுபடும். ஆனால் உண்மை எப்போதும் மாறாமல் என்றென்றும் நிலைத்து நிற்கும்.*

*எனவே சுவத்திக கிணற்றின் கற்படிகளில் காணப்படும் 1 முதல் 10 வரையிலான எண்களின் உட்பொருள் என்னவாக இருக்கக் கூடுமென்பதை தேடல் சிந்தனையுடன் ஆராய்ந்தறிவோமாக.*

***பிரபஞ்சங்களின் அமைப்பு***

*இன்று போல் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களோ தொலை நோக்கு கருவிகளோ இல்லாத ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, காட்டிலும் மலைகளிலும் வாழ்ந்த ரிஷிகளாகிய ஞானிகள் பிரபஞ்சத்தைப் பற்றிய அரிய பல விபரங்களைக் கண்டறிந்துள்ளனர்.*

*பௌதீக அடிப்படையில் உருவாகும் நமது பரிதி குடும்பம் போன்ற அனைத்தும் ஒரு சிறு மேகக் கூட்டமே. இது போன்ற எண்ணிக்கையில் அடங்காத மேகக் கூட்டங்கள் ஆகாய மண்டலத்தில் ஏதோ ஒரு மூலையில் சதா உருவாகி சிதைந்து கொண்டிருக்கின்றன.*

*இத்தகைய மேகக் கூட்டங்கள் போன்று எண்ணிக்கையில் அடங்காத உலகங்கள் ஆகாயமண்டலத்தில் ஏராளமாக உள்ளன.*

*அவ்வுலகங்கள் ஒவ்வொன்றும் தாதுக்களின் படிமங்களால் ஒன்றின் மேல் ஒன்றாகச் சூழப்பட்டு முற்றிலுமாக இருண்டுள்ளது. அதனுள்ளே ஒரு ஒளியும் உள்ளது.*

*அத்தாதுக்களாகிய படிமங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேல் ஒன்றாகப்* ***பத்து மடங்குகள்*** *அதிகரித்து ஒன்றுதிரண்ட மாபெரும் அணுக்களின் இறுக்கமான சேர்க்கையாக எல்லா பிரபஞ்சமும் காட்சியளிக்கின்றன.*[38]

அதாவது, இருண்ட வெளிச்சுற்றைக் கொண்ட பிரபஞ்சத்தை நோக்கி மேற்கொள்ளும் பயணத்தில் முதலில் பயணிப்பது **பூமி**, இதனுடைய படிமம் பத்துமடங்காகும். பூமியை அடுத்துள்ளது **நீர்.** இதனுடைய படிமம் பூமியைப் போல் பத்து மடங்காகும். அடுத்தது **நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம்** என ஒவ்வொன்றும் பத்து மடங்காக அதிகரிக்கப் பட்டு சூழப்பட்டுள்ளன. [39]

பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அகங்காரம் ஆக மொத்தம் **எட்டு** என்பதைக் குறித்துக் கொள்வோமாக.

> நாம் அனைவரும் மேற்கொள்வது பிரகாசமான ஒளியை நோக்கி, இருண்டதொரு பாதையில், நீண்டதொரு பயணம் என்பது அடியேனின் கருத்து.

## பழங்கால நீட்டல் அளவீடு

சிற்பக் கலையில் பயன்படுத்தப்படும் நீட்டல் அளவீடு[40] முறையில் பரமாணு என்பது நம் புறக் கண்களால் காண முடியாதது மாமுனிவர்களாகிய ரிஷிகளின் ஞானக் கண்களுக்கு மட்டுமே புலப்படும் அப்பரமாணுவிலிருந்தே பழங்கால நீட்டல் அளவீடு தொடங்குகிறது.

| | |
|---|---|
| 8 பரமாணு | = ஒரு தேர்த்துகள் |
| 8 தேர்த்துகள் | = ஒரு மயிர் நுனி அகலம் |
| 8 நுனி மயிர் அகலம் | = ஓர் ஈர் |
| 8 ஈர் | = ஒரு பேன் |
| 8 பேன் | = ஒரு நெல் அல்லது யவை |
| 8 நெல் | = ஒரு விரல் அல்லது அங்குலி |
| 12 விரல் | = ஒரு ஜான் அல்லது விட்ராசி |
| 2 ஜான் (அ)24 விரல் | = ஒரு முழம் |
| 4 முழம் (அ) 8 ஜான் | = ஒரு தண்டா |

குறிப்பு: பரமாணு முதல் ஒரு விரல் அல்லது அங்குலி வரை அளவுகள் **எட்டு எட்டாக** அதிகரிப்பது கவனிக்கத் தக்கது. 24 விரல் அளவுள்ள முழம் ஒரு பொதுவான அளவு. அம்முழம் என்ற அளவே சுவத்திக கிணற்றை வடிவமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட நீட்டல் அளவு கோலாக இருக்கலாம். (ஒரு விரல் எனும் அங்குலியின் அளவு 0.75 அங்குலம் அல்லது 1.905 செ.மீ. அளவுக்கு இணையாகும்).

### எட்டுத் திசைகளும் அதன் காவலர்களும்

பொதுவாகத் திசைகள் எட்டு. அவற்றை எண் திசைகள் (அட்டதிக்குகள்) எனக் குறிப்பிடப்படுவதுண்டு. அவற்றை பூவியின் திசைகள், ஜோதியின் திசைகள் என இருவகைப்படுத்துவர். ஒவ்வொரு வகைக்கும் நான்கு திசைகள். அதாவது புவியின் திசைகள் நான்கு, சோதியின் திசைகள் நான்கு[41] என அதர்வன வேதம் குறிப்பிடுகிறது. அந்த **எட்டு** திசைக் காவலர்களை **அட்டதிக்குப் பாலகர்** எனப் பல்வேறு நூல்கள் குறிப்பிடுகின்றன.

அத்திசைக் காவலர்களின் மகிமையையும் அவர்கள் யார் என்பதையும் அறிவோமாக. அந்த புருஷனை, பிரம்மா ஆதியில் பரமாத்மா எனக் கண்டு வெளிப்படுத்தினாரோ, நான்கு திக்குகளிலும் திசைகளிலும் எங்கும் நிறைந்துள்ளவரை இந்திரன் நன்றாகக் கண்டறிந்தாரோ, அவரை இவ்வாறாக அறிபவனே இங்கேயே இப்பிறவியிலேயே முக்தனாக ஆகிறான். மோட்சத்திற்கு வேறு வழி இல்லை.[42]

ஆதியில் நான்முகன் எவரைத் தனக்குக் காரணமாகியவர் என்றும், நீரே எனக்கு முன் இருப்பவர் என்றும், நீரே இதை முன்செய்யவும் என்ற வாக்கியங்களால் கூறினாரோ; வாம தேவரிடமிருந்து பரம புருஷ ஞானத்தைச் சிறப்பாகப் பெற்ற இந்திரனை எவர் முதற் காரணமாகக் கூறினாரோ; அவ்வாறே கிழக்கு முதலிய திக்குத் திசைகளும் யாரைக் கூறினவோ அவரே, இங்கே திக்கு என்ற சொல்லால் திக்குகளின் பதிகளாகிய புருஷர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.[43]

மேலே கூறப்பட்ட அப்பரமபுருஷர்கள் எந்தெந்த பெயர்களில் எட்டு திக்குகளில் தேவர்களாகவும், காவலர்களாகவும்[44] இருக்கின்றனர் என்பதையும், அத்திசைகளிலுள்ள களிறு எனும் யானையின் பெயர்களையும் அட்டவணைப்படுத்தி காண்போம்.

| **திசைகள்** | **தேவர்கள்** | **காவலர்கள்** | **யானைகள்** |
|---|---|---|---|
| கிழக்கு | இந்திரன் | அமராவதி | ஐராவதம் |
| தென்கிழக்கு | அக்னி | தேஜோவதி | புண்டரீகம் |
| தெற்கு | யமன் | சமயாமணி | வாமனம் |
| தென்மேற்கு | நிருதி | கிருஷ்ணஞ்ஜனா | குமுதம் |
| மேற்கு | வருணன் | ஷ்ரதாவதி | அஞ்சனம் |
| வடமேற்கு | வாயு | காந்தவதி | புட்பதந்தம் |
| வடக்கு | குபேரன் | விபாவரி | சார்வபௌமம் |
| வடகிழக்கு | ஈசானன் | யேசோவதி | சுப்பிரதீகம் |

முன்கண்ட எட்டுத் திசைகள் மட்டுமின்றி பத்து திசைகளிலும், கலந்தும், பரந்தும் எல்லைகளைக் கடந்தும் நிற்கும் இறைவனை திருமூலர் பாடிப் பரவச மடைந்துள்ளார். அதுவானது;

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்

மேவு பிரான்விரிநீர் உலக ஏழையும்

தாவு பிரான்தன்மை தான்அறிவார் இல்லை

பாவு பிரான்அருள் பாடலும் ஆமே - திருமந்திரம் ***32***

**பொருள்:** தேவர்களுக்கெல்லாம் முதல்வனான, சிவப் பரம் பொருளாகிய நம் இறைவன் திசைகள் பத்திலும் திகழ்பவன். விரிந்த கடல் சூழ்ந்த ஏழு உலகங்களையும் கடந்து நிற்பவன். இப்படிப்பட்ட அளப்பரிய ஆற்றல் பெற்ற நம் தலைவனை உணர்ந்தறியக் கூடியவர் எவரும் இல்லை. எங்கும் கலந்தும், பரந்தும் விரிந்தும் எல்லைகளைக் கடந்தும் நிற்கும் இறைவன் அருளைப் பாடி பரவுவோமாக.

### பத்து திசைகள்

புவியின் திசைகளான கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கும், ஜோதியின் திசைகளான வடகிழக்கு, தென் கிழக்கு, தென் மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கும், மேல் திசை (ஆகாயம்), கீழ்தசை (பூமி) ஆகிய இரண்டும் ஆக மொத்தம் பத்தும் பத்து திசைகளாகும். அவற்றில் முதலில் புவியின் திசைகளும், பின்னர் ஜோதியின் திசைகளும் எவ்வாறு அறிப்பட்டன என்பதை திசையறிதல் என்றத் தலைப்பில் விரிவாகக் காண்போமாக.

### திசையறிதல்

பழங்காலத்தில் சங்கு ஸ்தாபனம் என்பது ஒரு திசையறிதல் சடங்காகும். அது மிகப் புனிதமான சடங்கு என சைவ ஆகம நூல்கள் குறிப்பிடுகின்றன. சிற்ப சாத்திர விதிமுறைகளை நன்குணர்ந்த வரும், அனுபவம் மிக்கவரும், நற்குணங்களும் உடையவரான ஸ்தபதி ஒருவரைக் கொண்டே திசைகள் அறியப்பட வேண்டும் என்பது சிற்பச் சாத்திர விதியாகும். கிழக்கே சூரியன் உதிப்பது, மேற்கே அச்சூரியன் மறைவது ஆகிய இரண்டும் பூமியின் சுழற்சியால் அன்றாடம் நிகழும் இரு நிகழ்ச்சிகள். அந்த சூரிய ஒளியைக் கொண்டு முதலில் வடக்கு- தெற்கு, திசைகளும் அடுத்து கிழக்கு- மேற்கு எனும் புவியின் நான்கு திசைகளும் அறியப்படுகின்றன.

மேற்கே அச்சூரியன் மறைவது ஆகிய இரண்டும் பூமியின் சுழற்சியால் அன்றாடம் நிகழும் இரு நிகழ்ச்சிகள். அந்த சூரிய ஒளியைக் கொண்டு முதலில் வடக்கு- தெற்கு, திசைகளும் அடுத்து கிழக்கு- மேற்கு எனும் புவியின் நான்கு திசைகளும் அறியப்படுகின்றன. பின்னர் வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய ஜோதியின் நான்கு திசைகள் அறியப்படுகின்றன. அவ்வாறு எட்டுத் திசைகள் அறியப்படுவதே, மிகப் புனிதமான சடங்காகிய சங்கு ஸ்தாபனம் எனும் திசையறிதலாகும்.

மானசாரம் எனும் சிற்ப சாத்திர நூலில் திசையறிதலை ஒரு சடங்காகக் குறிப்பிடவில்லை. ஆனால், தென்னகத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் பிரபலமான **தந்ரசமுச்சயம்**[45] எனும் கட்டடக் கலை நூல் திசையறிவதற்கான முறைகளைக் கூறுகிறது. மயமதம் எனும் சிற்ப சாஸ்திர நூல் திசையறிவதைப் பற்றி எவ்வாறு விவரிக்கிறது என்பதைச் சுருக்கமாகக் காண்போமாக.

சங்கு என்பது கூம்பு வடிவத்தில், தந்தம் அல்லது சந்தன மரம் போன்ற ஒரு சில தேர்தெடுக்கப்பட்ட மரத்தால் மட்டுமே செய்யப்படவேண்டும். சங்கின் அதிகபட்சமான அளவுகள் முறையே உயரம் **இருபத்திநான்கு** அங்குலிகள் (ஒரு முழம்), கீழ் பகுதியின் விட்டம் ஐந்து அங்குலிகள், மேல் பகுதியின் விட்டம் ஒரு அங்குலியாக இருக்கவேண்டும். முதலில் தேர்ந்தெடுக்கப் பட்ட தரையை நன்றாக சுத்தம் செய்து, தண்ணீர் நிரப்பி, நீர்மட்டம் பார்க்க வேண்டும். பின்னர் அத்தரையின் நடுவே ஒரு புள்ளியை மையமாகக் கொண்டு இருபத்திநான்கு அங்குலி (ஒரு முழம்) ஆரமுள்ள ஒரு வட்டம் வரையவேண்டும். அடுத்து அவ்வட்டத்தைச் சுற்றி நான்கு முழம் பக்க அளவு கொண்ட ஒரு சதுரம் வரைய வேண்டும்.

ஸ்தபதியானவர் அதிகாலையில் சங்கை வட்டத்தின் மையத்தில் (புள்ளியில்) வைப்பார். சூரிய உதயத்தின் போது சூரிய ஒளி சங்கின் மேல் விழ அதனது நிழல் சாயும். அந்நிழல் வட்டத்தைத் தொடும் இடம் முதல் புள்ளியாகக் குறிக்கப்படவேண்டும்.

அதுபோலவே சூரியன் மறைவதற்கு முன்னர் சங்கின் நிழல் வட்டத்தைத் தொடும் இடத்தை இரண்டாவது புள்ளியாகக் குறிக்கப்படவேண்டும். அவ்விரு புள்ளிகளை இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்பட்ட கோடானது சரியான கிழக்கு- மேற்கு திசைகளைக் குறிப்பிடாது. அதற்கு பழங்கால வரைப்படக் கணித முறைப்படி முதலில் வடக்கு -தெற்கு திசைகளும் பின்னர் கிழக்கு-மேற்கு திசைகளும் அறியப்பட வேண்டும்.

குறிப்பு: வெறும் கயிற்றையும் மரஆப்புக்களையும் கொண்டு மேற்கூறிய திசைகளைக் கண்டறிய உதவிய பழங்கால வரைப்படக் கணிதத்தின் மகிமையைச் சொற்களாலும் எழுத்துக்களாலும் விவரிக்க இயலாது. (படங்கள்-ப.94)

இருப்பினும், இதனை அடிப்படையாகக் கொண்டு இனி வரும் பகுதியில், வட்டம், வட்டத்தைச் சதுரமாக்குதல், சதுரம், சதுரத்தில் நான்கு பகுதிகள், நான்கில் ஒரு பகுதி, நான்கில் மூன்று பகுதி, சதுரத்தின் பரப்பளவை இரட்டித்தல், பதினாறு கட்டங்கள் போன்றவற்றைப் புற-அக-இடை சிந்தனையில் அறிவியல் ஆன்மிக தத்துவங்களுடன் ஒப்பிட்டு விளக்கமளிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

சங்கு ஸ்தாபன முறைப்படி திசையறிவதற்காக நடுவே வரையப்பட்ட வட்டம் பூமியாகிய **மண்ணுலகத்தைக்** குறிக்கும். முதலில் வடக்கு-தெற்கு திசைகள் அறியப்படுகின்றன. கிழக்கு-மேற்கு திசைகள் அறியும்போது **பிரபஞ்ச கண்ணின்** தோற்றத்தைக் காணலாம்.

அந்த நான்கு திசைகளைச் சுட்டிக்காட்டும் கோடுகள் வட்டத்தின் நடுவே ஒரு கூட்டல் குறியீட்டை உருவாக்குகிறது. அக்கூட்டல் குறியீட்டால் அவ்வட்டம் நான்கு பாகமாகப் பிரிக்கப்படுவதைக் காணலாம்.

இது காலத்தைக் குறிக்கும் வட்டத்தோடு கூடிய (+) கூட்டல் குறியீடு. அது **க** எனும் பிரம்மத்தையும், உலக உற்பத்தியின் துவக்கமுமாகிய சிவசக்தியின் ஐக்கியத்தைக் குறிப்பதாகும். அடுத்து, வட்டம் சதுரமாக்கப்படுகிறது.

இடத்தைக் குறிக்கும் சதுரமும், **வியோமா** எனும் ஆகாயமாகிய **விண்ணுலகத்தைக்** குறிக்கும் சதுரமும், அதனுள்ளே அடங்கிய கூட்டல் குறியீட்டின் ஒட்டு மொத்த வடிவமும் பிரபஞ்சம் முழுமையுமாக நிறைந்துள்ள சிவசக்தி ஐக்கியத்தைக் [47] குறிப்பிடுவதாகும்.

வரைபடக் கணித முறைப்படி வட்டம் சதுரமாக்கப்படுவதென்பது, நாம் வாழும் மண்ணுலகமானது விண்ணுலகமாக மாறுகிறது என்ற சிறந்ததொரு தத்துவத்தை குறிப்பால் உணர்த்துவதாகும். அதாவது மண்ணே விண்! விண்ணே மண்!!

அதாவது **பூமியே சுவர்க்கம்! சுவர்க்கமே பூமி!!** என்பதே அச்சிறந்த தத்துவம். இந்தத் தத்துவமே இறை வணக்கமாக இந்நூலில் பதிவு செய்யப் பட்டுள்ளது. வட்டம் சதுரமாக்கப்படுகிறது என்பது பரவெளிக்கும் காலத்திற்கும் நடைபெறும் திருமணம்,[48] எனக் குறிப்பிடும் நூல்களும் உண்டு.

### கால் பங்கு, முக்கால் பங்கு

சதுரமாக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு (2 x 2=4) நான்கு சதுர முழங்கள். நான்கு முழம் பக்க அளவுடைய சதுரத்தின் பரப்பளவு (4 x 4=16) பதினாறு சதுர முழங்கள். அதாவது (மண்ணுலகை விண்ணுலகமாக்கப்பட்ட) சதுரமாக்கப்பட்ட பகுதியானது, மொத்தப் பரப்பளவில் (4/16= 1/4) கால் பங்கு மட்டுமே. மீதமுள்ளது (3/4) முக்கால் பங்குப் பற்றி புருஷ ஸூக்தம் விளக்கமளிக்கிறது.

*இங்கு காணப்படுவதெல்லாம் இவருடைய மகாத்மியமே, இவ்வனைத்தைக் காட்டிலும் அப்பரம புருஷனே அதிகமானவர். உண்டாகியவை எல்லாம் இவருடையதில் ஒரு கால்பங்கு இவருடைய முக்கால் பங்கு அழிவற்றதாய் பரமபதத்திலிருக்கிறது.*[49]

***பொருள்:*** *பரமபுருஷன் தமது கால் பங்கில் பூமியிலும், முக்கால் பங்கில் பூமி மண்டலத்திற்கு மேலும் உறைகிறார். முக்கால் பங்கெனப்பட்ட பரமபுருஷன் பிரபஞ்சத்திற்கு மேலே விளங்குகிறார். இவருடைய ஒரு பகுதி இங்கே பிரபஞ்சத்தில் மீண்டும் மீண்டும் தோன்றுகிறது.*

*அதிலிருந்து உணவை உண்டு வாழும் உயிர்களும், உணவை வேண்டாத ஜடப்போருள்களும் ஆகிய எல்லாம் எங்கும் வெளிப்படையாகத் தோன்றலாயின.*[50] *பூலோகத்தில் தோன்றிய சீவராசிகள் அனைத்தும் அன்னமாகிய உணவால் தோன்றியவை. எனவே மனிதன்* ***அன்னமயமானவன்***[51] *என தைத்திரீய உபநிஷதம் (3.10.6) குறிப்பிடுகிறது. உயிரினங்கள் அன்னமயமானவை. இறைவன், ஆனந்தமனைத்தும் நிறைந்தவன் என்பதன் உட்பொருளை பிற்பகுதியில் மேலும் விரிவாகக் காணலாம்.*

*அந்த ஆதி புருஷனிடமிருந்து விசேடமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற பிரம்மாண்டம் உண்டாயிற்று. பிரமாண்டத்தை காத்து அதற்கு அபிமானியாகிய பிரம்மா என்ற புருஷன் உண்டாகி எங்கும் வியாபித்தார். அவர் பூமியைச் சிருஷ்டித்தார். அதன் பின் சீவராசிகளுக்குச் சரீரத்தைச் சிருஷ்டித்தார்.*[52] *அறிய முடியாத பல செயல்களையுடையவனும் சக்தியுடையவனும், அனைத்திற்கும் இறைவனும், ஆனந்தம் அனைத்தும் நிறைந்தவனும், எல்லாம் அறிந்தவனும், எல்லோர்க்கும் அனுகூலனும் அனைத்திற்கும் ஆதாரமும் ஆகியவன்- அந்த ஆதிபுருஷனே!*

*மேலும் ஆதியும் அந்தமும் இல்லாதவனும், வளர்தலும் குறைதலும் இல்லாத வடிவினனும், எல்லா செயல்களும் தன்வயப் பட்டவனும், உலகின் உற்பத்தி, வளர்ச்சி, ஒடுக்கம் முதலிய செயல்களைச் செய்பவனும், தன்னிடமே களிப்பும் திருப்தியும் உடையவனும், ஒலி வடிவானவனும், ஒளி மயமானவனும் அளவிட்டறிய முடியாதவனும் அவனே! எல்லா பிரமாணங்களுக்கும் எட்டாதவனும், மிச்சமின்றி உலகம் அனைத்திற்கும் ஒரே காரணனும், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பெருமை யுடையவனும் ஆகிய இந்த* ***த்ரிபாத்*** *புருஷனைப் பற்றி, இப்படியிருக்கிறாய், அப்படியிருக்கிறாய் என்று உன்னை நீயே தான் அறிவாய். அவனை உள்ளபடி அறிந்தவர் யார்? கூறியவர் யார்? ஐயனோ? அவனை அவனே அறிந்தானோ அறியவில்லையோ? என்று வர்ணிக்க வகையின்றி (வர்ணனை இல்லாமல்) சுருதிகள் பேசுகின்றன.*[53]

## வியாபித்தலும் ஒடுங்குதலும்

பழங்கால க்ஷேத்திர கணித முறைப்படி விரிவடைந்த நான்கு கட்டங்கள் கொண்ட சதுரம் வியோமம்.[54] எனும் ஆகாயம். அது விண்ணுலகமாக மாற்றப்படுவதை அறிந்தோம். அந்நான்கு கட்டங்களிலிருந்து, வியாபித்தலின் (ஆக்கல் ) சின்னமாகிய, வலது புறம் நீட்டப்பட்ட கரங்களைக் கொண்ட சுவத்திக சின்னம் உருவாவதையும் காண்கிறோம்.

அதே போன்று ஒடுங்குதலின் (மறைத்தல்) சின்னமாகிய, இடது புறம் நீட்டப்பட்ட கரங்களைக் கொண்ட சுவத்திக சின்னம் உருவாவதையும் காண்கிறோம். அதாவது பிரபஞ்சத்தில் எப்போதும் தொடந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் வியாபித்தல், ஒடுங்குதல் ஆகிய இரு வகையான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் இரண்டு சுவத்திக சின்னங்களின் வடிவங்களைக் காண்கிறோம்.

அதனையடுத்து வரைப்படக் கணித முறைப்படி, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய ஜோதியின் திசைகள் அறியப்படுகின்றன.

### மகா புருஷரின் தோற்றங்கள்

பிரபஞ்சத்தில் வியாபித்திருக்கும் மகா புருஷரின் தோற்றங்கள் கீழ்க் கண்டவாறு அறியப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வடகிழக்கு | நீர் | ஈசானன் |
| தென் கிழக்கு | நெருப்பு | அக்னி |
| தென்மேற்கு | பூமி | நிருதி |
| வடமேற்கு | காற்று | வாயு |
| மையம் | ஆகாயம் | அரூபம் |

இனி காண்பவை பொதுவாக நூல்களில் நேரிடையாகக் கூறப்படாததாயினும், சிற்ப சாத்திர விதிப்படி திருமுற்றங்களின் **கட்டமைப்பில் பதவிந்யாசம்** எனக் குறிப்பிடப்படுகிறது.

சிற்ப சாத்திர நூலான மயமதத்தில் குறிப்பிட்ட **க** எனும் பிரம்மத்திற்கான நான்கு கட்டங்கள் கொண்ட அமைப்பு **பிரம்ம ஸ்தானத்தைக்** குறிப்பிடுகிறது என்பதை அறிந்தோம். இனி பிரபஞ்சத்தில் நிகழும் வியாபித்தல் என்பதை வரைப்படக் கணித ரீதியில் இரட்டித்தல் என்பதற்கு எவ்வாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவோமாக.

முதன் முதலில் பிரம்ம ஸ்தானத்தின் பரப்பளவு இரட்டிக்கப்படுகிறது. அவ்வாறு இரட்டிப்படுவதென்பது வியாபித்த பிரம்மம் விகாரமாகிய பிரபஞ்சத்திலும் அதிகரிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

அவ்வாறு இரட்டிக்கப்பட்ட முதலாவது சதுரமானது 45 பாகைகள் திரும்பியவாறு அமையும். இப்பகுதி தேவர்கள் வாழும் இடமாகும்.

அச்சதுரத்தின் நான்கு முனைகள் புவியின் திசைகளை நோக்கிவாறு அமையும். புவியின் திசைகளை நோக்கும் தெய்வங்களையும், அவர்களது வாகனங்களையும் காண்போமாக.

| | | |
|---|---|---|
| மேற்கு பின்புறம் | கருடன் | விஷ்ணு |
| வடக்கு வலது புறம் | சிங்கம் | காளி, பிரம்மா |
| தெற்கு இடது புறம் | காளை | தெட்சணாமூர்த்தி |
| கிழக்கு முன்புறம் | யானை | இந்திரன் |
| மையம்(கற்பகிரகம்) | ஆகாயம் | மூலவர் |

மேற்கண்ட அமைப்பை, சிவாலயங்களில் கற்பகிரகத்தின் அமைப்புடன் ஒப்பிட்டுக் காணலாம். திருமுற்றங்களில் இறைவனாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் பரமபுருஷனே, அந்த ஒளியின் நடுவில் பரமாத்மா நிலை பெற்றிருக்கிறார்.

**அவரே பிரம்மா! அவரே தெட்சணாமூர்த்தி! அவரே விஷ்ணு! அவரே இந்திரன்! அவரே அழிவற்றவரும், தன்னையாள்பவரும், எவருமில்லாதவருமான பரமபுருஷர்**-என இறைவனின் சன்னதிக்கு அழைத்துச் சென்று நம்மை ஆச்சரியப்படச் செய்கிறது நாராயண ஸுக்தம்.[55] **ஆச்சரியப்படுவது, இறைவனின் அற்புதமான செயல்களை அறியத்துவங்கும் துவக்க நிலையாகும்.**

**பதினாறு பகுதிகள்**

அடுத்து, சதுரத்தின் பரப்பளவு மேலும் இரட்டிக்கப் படுகிறது. அவ்வாறு இரட்டிக்கப்பட்ட சதுரம் பதினாறு (16) பாகங்கள் கொண்டாதாக வடிவமாவதைக் காணலாம். விகாரமாகிய பிரபஞ்சத்திலும் வியாபித்த மகா புருஷர் தம்மைத் தாமாகவே பதினாறு பாகங்களுடையவராகப் பிரித்துணர்த்துகிறார் என்பது அதனது பொருள். அந்த மகா புருஷன் பதினாறு பகுதிகள் உடையவர் என்பதற்குப் பிரசன உபநிடதம், எவ்வாறு விளக்கமளிக்கிறது என்பதைக் காண்போம்.

பரத்வாஜரின் மகனான ஸுகேசன் பிப்பலாத முனிவரிடம், **தெய்வ முனிவரே! கோசல நாட்டு இளவரசனான ஹிரண்யநாபன் என்னிடம், பரத்வாஜரின் மகனே ! பதினாறு பகுதிகள் உடைய நபரை உமக்குத் தெரியுமா?** என்ற கேள்வியைக் கேட்டார். அதற்கு நான் அவரிடம் **எனக்குத் தெரியாது, தெரிந்திருந்தால் உங்களிடம் எப்படிச் சொல்லாமல் இருப்பேன்? எனவே பொய் சொல்வதற்கு எனக்குத் துணிவில்லை,** என்று கூறினேன். அதைக் கேட்டதும் அவர் அமைதியாகத் தேரில் ஏறிப் போய் விட்டார்.

**அந்த குறிப்பிட்ட நபர் எங்கே இருக்கிறார் என்ற கேள்வியை இப்போது நான் உங்களிடம் கேட்கிறேன், என்றான்.** அதற்கு ஸுகேசனிடம் பிப்பலாத முனிவர், **இனியவனே! மகா புருஷராகிய அந்த நபர் ஆன்மா. ஆன்மா இங்கே உடம்பிலுள்ளது. அதனிடமிருந்தே பதினாறு பகுதிகள் தோன்றின. பதினாறு பகுதிகள் என்பவை படைப்பின் பதினாறு அம்சங்கள்** எனக் கூறினார்.[56]

பதினாறு பகுதிகள் உடையதாகக் கூறப்பட்ட அந்த ஆன்மாவைப் பற்றி பிரச்ன உபநிஷதம் மேலும் விரிவாகக் கூறுகிறது. ஆன்மா பிராணனைப் படைத்தது. பிராணனிலிருந்து புத்தி, ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி, புலன்கள், மனம், உணவு, ஆகியவை தோன்றின. உண்ணும் உணவிலிருந்து ஆற்றல், தவம், மந்திரங்கள், கிரியைகள், உலகங்கள் எல்லாம் தோன்றின. உலகங்களின் பெயர்களும் படைக்கப்பட்டன.[57]

அதாவது பிராணன், புத்தி, ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி, புலன்கள், மனம், உணவு, ஆற்றல், தவம், மந்திரம், கிரியை, உலகம், பெயர் ஆகிய பதினாறே ஆன்மாவின் பதினாறு பகுதிகளாகும்.



மேற்கண்ட பிரச்ன உபநிடதம் கூறுவதற்கு ஒரு சான்றாக திருச்சி மாவட்டம், திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ் சாலையின் மேல்புறத்தில் அமைந்துள்ள வடச்சேரி எனும் கிராமத்திலுள்ள தட்டான் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள மனித உருவம், பதினாறு கட்டங்கள் கொண்ட வரைப்படம், பறவையின் உருவம் ஆகிய மூன்று கோட்டுருவங்களைச் சுட்டிக் காட்டலாம்.

பரமபுருஷனின், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என நான்கு விதமான செயல்களால் சீவராசிகள் அனைத்தும் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு என்ற மாயச் சுழற்சியில் சிக்குண்டு கிடப்பதை உணர்த்துவதற்குச் சான்றாக ஒரு பழங்கால குறியீட்டைக் காண்போம்(பக்கம்-41).

பழங்காலத்தைச் சார்ந்த கல்தூண் ஒன்றில் பதினாறு கட்டங்கள் கொண்ட கோட்டுருவத்தில் சுவத்திக சின்னத்தின் சிறப்புச் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

அதில் (நான்கு சதுரங்கள் ஒன்று கூடிய) ஆங்கில எழுத்தான **T** போன்று (ஞானத்தின் சின்னமாகிய) நான்கு **தோ** - வின் சின்னங்கள் உள்ளன. அவை எவ்வாறு சுழன்று மாறிமாறி இடம் பெறுகிறது என்பது முற்பகுதியில் அறியப்பட்டுள்ளது.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கும் ஒரு **மாயச்சுழற்சி** என்பதை நான்கு **தோ** - வின் வடிவங்களின் வாயிலாக அறிவதோடு, பரம புருஷனின் ஐந்தாவது செயலாகிய அருளல் என்ற செயலையும் இச்சின்னத்தின் முழு வடிவம் குறிப்பால் உணர்த்தப்படுவதையும் காணலாம்.

இக்குறியீடு திருச்சிக்கு அருகிலுள்ள திருநெடுங்குளம் சிவாலயத்திலுள்ள மண்டபத் தூண் ஒன்றில் கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுவத்திக சின்னத்தை **மாயச்சக்கரம்** என முற்பகுதியில் குறிப்பிட்டதன் உட்பொருளையும் அறியமுடிகிறது.

## உயர்ந்த தத்துவம்

பதினாறு கட்டங்கள் கொண்ட அமைப்பில் புவியின் நான்கு திசைகளில் அம்புக் குறிபோன்ற வடிவம் உள்நோக்கி இருப்பதும் **(ஒடுக்கம்)** அதனைச்சுற்றி ஒரு வட்டமும் **(ஒளி வடிவம் )** கொண்ட குறியீடு ஒன்றும் மற்றுமொரு உயர்ந்த தத்துவத்தை உணர்த்துகிறது.

அதுவானது, இது வரை இருந்ததும், இப்போது இருப்பதும், இனி இருக்கப் போவதும் எல்லாம் பரமபுருஷனே! அவரிடமிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன, அவரிடமே நிலைபெறுகின்றன. அவரிடமே மீண்டும் லயிக்கின்றன. அவரே அனைத்திற்கும் ஆத்மா.

அவருடைய பெருமையின் கால் பகுதியே, இவ்வுலகம் அனைத்தும். அதில் முக்கால் பகுதி காணப்படாமல் மறைந்துள்ளது என்ற உயர்ந்த தத்துவங்களை உள்ளடக்கிய வடிவமாக இக்குறியீடு நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலத்திலுள்ள பெருமாள் கோயில் மகாமண்டபத்தின் வடபுற வாயில் கற்படி ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**புருஷ ஸூக்தம்**

உருக்வேதத்தின் ஓர் அங்கமாகக் கூறப்படும் புருஷ ஸூக்தத்தில் கூறப்பட்டுள்ளதில் ஒரு சிலவற்றை மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கோள்களாகக் கண்டோம். அதற்கு காரணம் பழங்கால க்ஷேத்திர கணிதமுறைப்படி திசையறிதலில் ஒன்றன் பின் ஒன்றாக உருவாகும் வடிவங்களுக்கு ஆன்மிக தத்துவங்களை ஒப்பிட்டு விளக்குவதற்காகவே அவ்வாறு காட்டப்பட்டது.

அடுத்து, புருஷ ஸூக்தத்தில் உள்ளதொரு சுலோகத்தை ஆராய்ந்தறிவது மிகவும் அவசியமாகும். புருஷ ஸூக்தம்; சுலோகம் **1.12** யில், எப்போது விராட் புருஷரைப் பிராண வடிவான தேவர்கள் சங்கல்பத்தால் தோற்றுவித்தார்களோ, அப்போது எந்த வடிவாக ஆக்கினார்கள்? இப்புருஷனுடைய முகம் எதுவாக ஆயிற்று? கைகளாக எவர்கள் சொல்லப்படுகிறார்கள்? தொடைகளாகவும், பாதங்களாகவும் எவர்கள் கூறப்படுகின்றனர்? - எனக் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

அதற்கு புருஷ ஸூக்தம்; சுலோகம் **1.13** யில், இவருடைய முகம் பிராம்மனாக ஆயிற்று. கைகள் க்ஷத்திரியராகச் செய்யப்பட்டன. இவருடைய தொடைகள் வைசியராக ஆயிற்று. பாதங்கள் சூத்திரராக உண்டாயிற்று. எனக் கூறப்பட்டுள்ளதே? இது, உயர்ந்த மற்றும் தாழ்ந்த ஜாதி எனும் வர்ண பேதத்தையல்லவா குறிப்பிடுகிறது என எண்ணத் தோன்றும்.

உண்மையில், அதே புருஷ ஸூக்தம் சுலோகத்தில் ஜாதி அல்லது வகுப்பு அல்லது வர்ணம் என்று குறிப்பிடும் வடமொழிச் சொல் ஏதுமில்லை என்பதையும் இது ஒரு பொய்யான இடைச் செருகல் என்பதையும் முதலில் அறிந்து கொள்வது அவசியம்.

அடுத்து, ப்ராஹ்மண, ராஜன்ய, வைச்ய, சூத்ர என்ற நால்வரும் முறையே **ஆசிரியர், அரசர், வணிகர் , விவசாயி** என நான்கு விதமான செயல்களை (கர்மாக்களை) செய்வோராவர். அத்துடன் இந்த நான்கு விதமான செயல்களைச் செய்வோர் மகா புருஷரின் அங்கங்களே ஆவார்கள். மகாபுருஷரின் அங்கங்களில் ஒன்று சிறப்புடையது மற்றவை சிறப்பற்றது என்றோ, அல்லது ஒன்று உயர்ந்தது மற்றது தாழ்ந்தது என்ற சிந்தனைக்கும், கருத்துக்கும், பேச்சுக்கும் இடமே இல்லை.

ருக்வேதத்தின் அங்கமான புருஷ ஸூக்தம், **மஹா புருஷரின் கொப்பூழிலிருந்து வான்வெளி தோன்றியது, தலையிலிருந்து ஸ்வர்க்கலோகம் நன்றாக அமைந்தது. பாதங்களிலிருந்து பூமி**, காதிலிருந்து திசைகள் அவ்வாறே எல்லா உலகங்களையும் ஸங்கல்ப மத்திரத்தால் தோற்றுவித்தார்[58] எனக் கூறுகிறது.

பூமியானது மகா புருஷரின் பாதங்களிலிருந்து தோன்றியதென அதே புருஷ ஸூக்தம் கூறுகிறது. ஆசிரியர், அரசர், வணிகர், விவசாயி (மண்மக்கள் அல்லது நிலமக்கள் புதல்வர்) ஆகிய யாவரும் பூமியில் வாழ்பவர்கள் தானே? மகாபுருஷரின் பாதமாகிய பூமியில், தத்தம் கர்மாக்களை செய்வதற்காவே மானிடப் பிறவி எடுத்தவர்களிடம் வர்ண பேதத்திற்கும், உயர்தவன்- தாழ்ந்தவன் (இரட்டைகள்) என்ற வேறுபாட்டிற்கும் முற்றிலுமாக இடமே இல்லை என்பதை அறிந்து, பிரித்தாளும் தந்திரத்தை கடைபிடித்து, நம் ஒற்றுமையை குலைத்து, நம்மை அடிமைப் படுத்தியவர்கள் விரித்த மாயை வலையில் இருந்து விடுபட்டு, தொன்மையான உபநிடதங்களிலுள்ள இடைச் செருகலை நீக்கி, உண்மையான பொருள் அறிந்து மனத் தெளிவடைவோமாக.



மேற்கூறிய **பாதங்களிலிருந்து பூமி** தோன்றியது என்பதற்குச் சான்றாக ஜான் மேரீஸ் என்பவரால் யூக்குவேடார் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட கோட்டுருவம்பொறிக்கப்பட்ட பலகைக்கல்[59] ஒன்றை சுட்டிக் காட்டலாம்.

அதில் யூக்குவேடார் நாட்டு மனித கோட்டுருவத்தின்(மகா புருஷரின்) தலைக்கு மேலே தேவலோகமும் (சந்திர மண்டலமும்), காலடியிலே பூமியும் (பூலோகத்தையும்) வடிவமைத்துக் காட்டப்பட்டுள்ளது நம்மை மேலும் வியப்படையச் செய்கிறது. எனவே இது புருஷ ஸூக்தத்திற்கான சான்றுகளுக்கெல்லாம் தலை சிறந்த சான்றாகவும் விளங்கி வியப்படையவும் செய்கிறது. **வியப்படைவது, இறைவனின் அற்புதமான செயல்களை அறியத்துவங்கும் இரண்டாம் நிலையாகும்.**

வியர்வையில் தோன்றியவை, முட்டையில் தோன்றியவை, கருவில் தோன்றியவை என தோற்றத்தில் வேறுபட்டு ஊர்வன, நடப்பன, நீந்துவன, பறப்பன என வாழ்க்கை முறையில் மாறுபட்டாலும், பஞ்சபூதங்களின் அடிப்படையில் அறிவால் பலவானாலும், அவை யாவும் இறைவனிடமிருந்து வெளிப்பட்டவையே. அவை ஒவ்வொன்றிலும் குடிகொண்டிருக்கும் சோதிச்சுடராகிய உயிரே இறைவன் எனும் பரமாத்மா என்பதை நம்மாழ்வார் கூறுகிறார். அதுவானது,

அவரவர் தமதம தறிவறி வகைவகை

அவரவர் இறையவ ரெனவடி யடைவர்கள்...

எல்லா உயிர்களில் தன்னையும், தன்னிடம் எல்லா உயிர்களையும் நன்கு கண்டுகொண்டு ஒருவன் **பரப்பிரம்மத்தை அடைகிறான்;** வேறு எக்காரணத்திலும் அன்று - என கைவல்யோ உபநிடதம் (1.10) கூறுகிறது.

மேற்கண்டவற்றின் வாயிலாக; **யாரெல்லாம் பரப்பிரம்மத்தை அடைகிறார்களோ அவர்களே பரபிரம்மமானவர்கள் அதாவது பிரபிரம்ம நிலை அடைந்தவர்கள். அவ்வாரே யாரெல்லாம் சத்தியத்திற்கு உட்பட்டு நல்லாட்சி புரிகிறார்களோ அவர்களே சத்திரியர்கள், யாரெல்லாம் இசைவு எனும் நீதி, நேர்மையை கடைபிடித்து தன வைசியம் (வணிகம்), பூ வைசியம் (உழவு), கோ வைசியம் (இடையர்) தொழில் செய்கிறார்களோ அவர்களே வைசியர்கள், யாரெல்லாம் சூத்திரம் எனும் நுண்ணிய வேலைகளை நிறைவாக செய்கிறார்களோ அவர்களே சூத்திரர்கள்** என்பதே உண்மை.

அதனைத் தொடர்ந்து புருஷ ஸுூக்தத்தின் மகிமையை எடுத்துக்கூறும் சில நூல்களின் சொற் சுடர்களைக் காண்போம். இதம் புருஷ ஸுூக்தம் ஹி ஸர்வ வேஷேுு பட்யதே அத ச்ருதிப்ய: ஸர்வாப்யோ பலவத் ஸமுதீரிதம்.

இதன் பொருளாவது, இந்த புருஷ ஸுூக்தம் எல்லா வேதங்களிலும் படிக்கப்படுவதால் எல்லா சுருதிகளின் சாரமாகக் கொள்ளப்படுகின்றது - என வேத வியாஸர் மஹாபாரதத்தில் மோட்ச தர்மத்தில் கூறுகிறார். சூரியனைப் போன்ற காந்தி பொருந்தியவரும் இருளுக்கு அப்பாலுள்ளவருமான அந்தப் பரமபுருஷனை நான் அறிவேன்.

அவரை அறிபவன் இங்கேயே இப்பிறவிலேயே முக்தனாகிறான் அதைத்தவிர மோட்சத்திற்கு வேறு வழியில்லை.... எவன் இவ்வாறு அறிகிறானோ அவனுக்குத் தேவர்களும் வசமாக இருப்பர் - என்று மந்த்ர த்ரஷ்டாவாகிய ரிஷி கூறுகிறார்.

பரம புருஷனின் மகிமை அளவிலடங்காத தென்றும் பூமியிலுள்ள தூசுகளை எண்ணினாலும் அவனுடைய பெருமைகளைக் கணக்கிட முடியாதென்றும் விஷ்ணு ஸுூக்தம் முடிவுகட்டுகிறது.

இத்தகைய புருஷ ஸுூக்தத்தின் மகிமையை முன்பே கூறாமல் இப்பகுதியில் குறிப்பிடுவதற்கு முக்கிய காரணமுண்டு. அக்காரணமானது புருஷ ஸுூக்தத்தில் கூறப்படும் **பத்து விரல் கணக்கீடாகும்.**

### பத்து விரல் கணக்கு

*ஸஹஸ்ர- சீர்ஷா புருஷ ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா* ***அத்யதிஷ்டத்தசாங்குலம் .***[60]

*இதன் பொருளாவது; ஆயிரக் கணக்கான தலைகள், ஆயிரக் கணக்கான கண்கள், ஆயிரக் கணக்கான பாதங்கள் உடையவராகிய பரமபுருஷர் பூமியிலும் அதற்கப்பாலும் வியாபித்திருப்பவர். பத்து விரல்களைக் கொண்டு எண்ணும் (கணக்கிடும்) கணித நூல் நியதிக்கு அடங்காமல், அதனையும் கடந்து நிற்பவர்.*

*அத்யதிஷ்டத் தசாங்குலம் என்பதற்கு, பத்து விரல்களால் எண்ணிக் கணக்கிடும் கணித நூல் நியதிக்குப் பரம் பொருள் அடங்காது எனப் பொருளாகும். ஆயிரம் தலைகள் என்றால் இரண்டாயிரம் கண்களும், இரண்டாயிரம் கால்கள் எனக் குறிப்பிடாமல் ஆயிரம் தலைகள், ஆயிரம் கண்கள், ஆயிரம் கால்கள் எனக் குறிப்பிட்டிருப்பது தவறு எனக் கருதலாகாது.*

*கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்தும் ஞான இந்திரிங்கள். கால், கை, வாய், குதம், குறி ஆகிய ஐந்தும் கர்ம இந்திரியங்கள்.*

*அதில் இருகண்கள், இரு கால்கள், இரு கைகள் எனக் குறிப்பிடுவதில்லை. எனவே கால்கள் என்றால் இரு கால்களையும் கண்கள் என்றால் இரு கண்களையுமே குறிப்பிடுகின்றன. தலையற்ற உடல் முண்டம் எனப் பொருள்படுவதால், தலை என்பது முழுமையான உடலைக் குறிப்பிடுகிறது.*

*மேலும், அந்த உடலானது ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி என்ற பஞ்ச பூதங்களின் கூட்டுக் கலவையாகும். எனவே,* ***தலை*** *என்பது ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி ஆகிய பஞ்ச பூதங்களையும்,* ***கண்கள்*** *என்பது கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்தும் ஞான இந்திரிங்களையும்,* ***கால்கள்*** *என்பது கால், கை, வாய், குதம், குறி ஆகிய ஐந்தும் கர்ம இந்திரியங்களையும் குறிப்பால் உணர்த்துவதாகும்.*

*கணக்கற்ற, அதாவது ஆயிரமாயிரம் தலைகளும் கண்களும் கால்களும் உள்ளவனாகப் பரமபுருஷன் புருஷ ஸூக்தத்தில் காட்சியளிக்கிறார். எல்லோருடைய தலைகளும் கண்களும் கால்களும் அவருடையதே என்பதை அறிந்து, புரிந்து, நமக்கு நாமே தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமாகும்.*

*ஒன்றாகி, இரண்டாகி, மூன்றாகி, நான்காகி, ஐந்தாகி, ஆறாகி, ஏழாகி, எட்டாகி, ஒன்பதாகி மற்றும் பத்தாகி என பலவாகி நின்றாலும் அவர் எதையும் பற்றாதவர் எதிலும் பற்று இல்லாதவர். இறைவன் பத்து விரலால் கணக்கிடும் அறிவுக்கு அப்பாற் பட்டவர் என்பதை ஆராய்தறிவோமாக.*

*ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா ஹ்யதி - திஷ்டத் தசாங்குலம், விகாராவர்த்தி சாத்ராஸ்தி ச்ருதி - ஸூ த்ரக்ருதோர்வச .*[61]

*இதன் பொருளானது, அந்த பரமாத்மா பூமியில் (சகல பிரபஞ்சத்தையும்) எங்கும் வியாபித்து* ***பத்துவிரல் கணக்கை*** *அதிகரித்து நிற்கிறார். விகாரமாகிய பிரபஞ்சத்தினும் பிரம்மம் அதிகரிக்கின்றது என்று சுருதியின் சூத்திரக்காரராகிய வியாச முனிவரின் வாக்கியம் உள்ளது.*

*பிரம்மம் - ஒன்றாகத் தோன்றி பலவாக உருவாகி வியாபிக்கிறார். அவரது பெருமைகள்* ***பத்து விரல்கள்*** *கொண்டு எண்ணிக் கணக்கிட்டு கூற முடியாதவராய் இருக்கிறார் என்பதைக் குறிப்பிடவே சுவத்திக கிணற்றின் வடதிசை படிக்கட்டுக்களில்* ***ஒன்று முதல் பத்து எண்கள்*** *பொறிக்கப் பட்டுள்ளதன் ரகசியமாகும்.*

*மேலும் அறிய, பழங்கால வரை படக் கணிதத்தின் உதவியை நாடிச் செல்லும் படிகளில் ஏறி முயற்சிப்போமாக. பத்து விரல் கொண்டு ஒன்று முதல் பத்து வரை எவ்வாறு கணக்கிடுவது? அதற்கு விடை காண பழங்கால வரைப்படக் கணித முறைப்படி திசையறிவதற்காக வரையப்பட்ட வட்டம், சதுரம் ஆகிய இரண்டு அளவுகளுக்கு மீண்டும் செல்வோமாக.*

*நடுவே ஒரு புள்ளி. அது அளவற்றதும் அளவிட முடியாததுமாகும். அடுத்தது ஒரு வட்டம் அதன் விட்டத்தின்அளவு (48 அங்குலி x 0.75) 36 அங்குலம். அந்த வட்டம் சதுரமாக்கப்பட்டது. அச் சதுரத்தின் பரப்பளவு எவ்வாறு இரட்டிக்கப்படுவதை அதாவது வியாபிக்கப்படுவதைக் காண்போம்.*

*சுவத்திக வடிவ கிணற்றின் பக்க அளவு சராசரி 1152 அங்குலம் (96அடி) என்பதை முன்பே அறிந்தோம். மேலே கண்ட அட்டவணையில், 36 அங்குலம் பக்க அளவுடைய சதுரத்தின் பரப்பளவு இரட்டிக்கப்படும் போது 10 வது (பத்தாவது விரல் கணக்கில்) எண்ணிக்கையில் வரும் சதுரத்தின் பக்க அளவும் 1152 அங்குலம் என்பதை அட்டவணைப்படுத்திக் காண்போமாக.*

| எண் | அளவு | விட்டம் | பரப்பளவு (ச.அ) |
|---|---|---|---|
| 00. | 36 | 50.91168825 | 1296 |
| 01. | 50.91168 | 72 | 2592 |
| 02. | 72 | 101. 8233765 | 5184 |
| 03. | 101.8233 | 144 | 10368 |
| 04. | 144 | 203.646757 | 20736 |
| 05. | 203.6467 | 288 | 41472 |
| 06. | 288 | 407.293506 | 82944 |
| 07. | 407.29350 | 576 | 165888 |
| 08. | 576 | 814.5870119 | 331776 |
| 09. | 814.5870 | 1152 | 663552 |
| 10. | **1152** | 1629.174024 | **1327104** |

1152 அங்குலம் பக்க அளவுள்ள சதுரத்தை (32 x 32), மயமதம் குறிப்பிடும் 1024 கட்டங்கள் கொண்ட **இந்திரகாந்த** என்ற வரை படமாக்கினால், ஒரு கட்டத்தின் பக்க அளவு (1152 ÷ 32) 36 அங்குலம் எனவே இரட்டிக்க தேர்ந்தெடுத்த முதல் சதுரத்தின் பக்க அளவான 36 அங்குலம் என்பது சரியானதே யாகும்.

இக்கிணற்றின் சதுர வடிவின் பக்க அளவு 407.293506 அங்குலம். இதனை (8 x 8) 64 கட்டங்கள் கொண்ட மாண்டுக்க வரை படமாக்கினால் ஒரு கட்டத்தின் பக்க அளவு (407.293506÷8) 50.911688 (51) அங்குலம். நான்கு திசைகளில் உள்ள படிகளின் வாயிலின் சராசரி அகலம் (சிமெண்ட் பூச்சு நீங்கலாக) 52 அங்குலம்.

இரண்டிற்கும் உள்ள ஒரு அங்குல வித்தியாசம் என்பது அளவில் மிகச்சிறியதாகும். எனவே மேலே கடைபிடிக்கப்பட்ட ஒன்று முதல் பத்து வரை சதுரத்தின் பரப்பளவு இரட்டிக்கப்படுகிறது அதாவது வியாபிக்கப்படுகிறது என்ற முறையும் சரியானதே என்ற முடிவுக்கு வரலாம்.

ஒன்று முதல் பத்து வரையிலான எண்களின் இலக்கங்களை ருக்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தசயோஜனாவுடன் சேர்ந்து பத்து பத்தாகக் கூறப்பட்டுள்ள அவனி புவகா (பத்து ஊழியர்கள்), கேக்ஷ புவகா (பத்து சுற்றளவு), யோக்ட்ஷ புவகா (பத்து நுகத்தடிகள்), யோஜினி புவகா (பத்து அங்கீகாரம் பெற்றவர்கள்), அபிஷ்க புவகா (பத்து எல்லைப் பாதுகாவலர்கள்) என்பவையுடன் ஒப்பிட்டிருக்கலாம்.

மேலும் தசகரங்களான அபாவனை, காமம், சிற்றின்பக்கலை, சூது, நடனம், பகற்றுயில், மதுவூண், மாயம், விளையாட்டு, வேட்டம் ஆகியவற்றோடு ஒப்புமைப்படுத்தியிருக்கலாம்.

எனினும் மேற்கூறியவையும் ஒப்பிடாமல் வரைப்படக் கணித முறைப்படி இரட்டித்தலுடன் ஒப்பிடுவதே சரியானதென எண்ணத் தோன்றும். மேலும் திருமாலின் தச அவதாரத்தைக் குறிப்படுகிறது என்பதையாவது ஒப்பிட்டுக் கூறலாமே என்ற சிந்தனைக்கும் இடமுண்டு.

மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் **வடதிசையில் எழுந்தருளியுள்ள** மகாபுருஷரான நாராயணனின் வடிவமானவரும், **தச அவதாரமெடுத்தவருமான மகா விஷ்ணுவின்** (செந்தாமரைக் கண்ணாழ்வார் அல்லது புண்டரீகாட்சப் பெருமாள்) **திருத் தலத்தைச்** சுட்டிக்காட்டி கணக்கற்ற தலைகளும், கண்களும், கால்களும் உள்ளவனாகிய பரமபுருஷர் புருஷ ஸூக்தத்தில் காட்சியளிக்கிறார்.

எல்லோருடைய தலைகளும் கண்களும் கால்களும் அவருடையதே. அவர் பூமியையும் ஆகாயத்தையும் வியாபித்து எங்கும் நிறைந்துள்ளார். பத்து விரல்களால் எண்ணிக் கணக்கிடும் கணித நூல் நியதியில் அவன் பெருமை அடங்காது - என புருஷ ஸூக்தத்தை மேற்கோள் காட்டி **ஒன்று முதல் பத்து வரையிலான எண்களாகவும் பத்து விரல் கணக்காகவும் உணர்த்தப்பட்டுள்ளன என்பதை அறிவோமாக.**

# 7

## கற்பத்திகளும் புடைப்புச் சிற்பங்களும்

திருவெள்ளறை சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் கிழக்கு, தெற்கு, மேற்கு. வடக்கு ஆகிய நான்கு புவியின் திசைகளில் உள்ள படிக்கட்டுப் பகுதியில் இருபது கற்பத்திகள் உள்ளதை முற்பகுதியில் அறிந்தோம்.

அந்நான்கு திசைகளில் உள்ள படிக்கட்டுகள் முற்றுபெறும் இடத்திற்கு மேலே அளவில் பெரிதாகவும் ஒன்றுக்கு மேல் ஒன்றாகவும் மூன்று கற்பத்திகள் எனப் பன்னிரண்டு கற்பத்திகள் பொருத்தப் பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் அழகிய புடைப்புச் சிற்பங்களுடன் (ப.75)காட்சி அளிக்கின்றன.

அவற்றை சிற்பக் கலாநிதி ஸ்தபதி வே. இராமன் அவர்களின் உதவியுடன் மேல் (மேலிடம்), நடு (நடுவிடம்), கீழ் (கீழிடம்) என வரிசைப்படுத்தி ஆராய்ந்தறிவோமாக.

### கிழக்குத் திசை கற்பத்திகள்

**மேல்:** மையத்தில் நான்கு கரங்களுடன் யோக நரசிம்மரின் திருவுருவமும், வலது புறத்தில் ஓர் தேவியின் உருவமும், இடது புறத்தில் நான்கு கரங்களுடன் பிரம்ம தேவரின் வடிவமும் காணப்படுகின்றன. இரு புறங்களில் சூரியர் சந்திரர் வடிவங்களும், தென்திசை நோக்கியபடி ஒரு சிம்மமும், வடதிசை நோக்கியபடி ஒரு சிம்மமும் காட்சியளிக்கின்றன.

**நடு:** மையத்தில் அமர்ந்த நிலையில் அரசன், அரசியின் உருவங்களும், அதன் வலது புறத்தில் விலங்கின் (குதிரையும்) உருவமும் ஒரு பெண்ணின் உருவமும், இடது புறத்தில் யானையின் உருவமும் உள்ளன.(குறிப்பு: யானை, குதிரை, குரங்கு ஆகியவை மனித மனத்தையும், மனக்கட்டுப்பாட்டையும் குறிப்பிடுவதாகும்)



**கீழ்: ஆன்மா**வைக் குறிக்கும் இரண்டு அன்னப்பறவைகள் அடைப்புக் கருக்கணிகளுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

## தெற்குத் திசை கற்பத்திகள்

**மேல்:** மையத்தில் அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் சப்த மாதர்கள், இடது புறத்தில் வீரபத்திரர், வலது புறத்தில் விநாயகர் என ஒன்பது திருவுருவவங்கள் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றன.

**நடு:** மையத்தில் நடுவே நின்ற கோலத்தில் விஷ்ணு துர்க்கையும், இடது புறத்தில் வணங்கும் பெண்ணின் உருவமும், மானும், வலது புறத்தில் வணங்கும் ஆணின் உருவமும், சிம்மமும் காணப்படுகின்றன. மான், சிம்மம் ஆகிய இரண்டுக்கும் மேலே சூரிய, சந்திரர் கரங்களில் உள்ள மலர்கள் காணப்படுகின்றன.

**கீழ்:** மையத்தில் நான்கு கரங்களுடன் விநாயகப்பெருமானின் திருவுருவமும், இடது புறத்தில் வணங்கும் பெண்ணின் (அரசியின்) உருவமும், மானும், வலது புறத்தில் வணங்கும் ஆணின் (அரசனின்) உருவமும் காட்சியளிக்கின்றன. இடது, வலது புறங்கள் கொடிக் கருக்கணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

## மேற்குத் திசை கற்பத்திகள்

**மேல்:** மையத்தில் வீரன் காளையை அடக்குவதும், இடது புறத்தில் குதிரையை அடக்குவதும், வலது புறத்தில் ஒரு பறவையின் வாயைப் பிளக்கும் காட்சியும் இடது, வலது புறங்களில் சிம்மங்களின் உருவங்களும் காட்சியளிக்கின்றன.

**நடு:** மையத்தில் நான்கு கரங்களுடன் சங்குசக்கரதாரியான திருமாலும், வலது புறம் ஸ்ரீதேவியும் இடதுபுறத்தில் பூதேவியும் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இடது, வலது புறங்களில் (அஞ்சலி) வணங்கும் கரங்களுடன் மனித உருவங்களும் சூரியரும் சந்திரரும் பறந்து வருவது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளன.

**கீழ்:** இடது, வலது ஆகிய இரண்டு புறங்களில் காலமகரங்களின் வாயிலிருந்து அமிர்த மழையாக சூரிய ன், சந்திரன், மானுடர் முதல் அனைத்து சீவராசிகள் பிரளயத்தின் போது இறைவனிடமிருந்து வெளிப்படுவது (தாமங்களுடன்) சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அங்ஙனம் வெளிப்பட்டவை அனைத்தும் ஒடுங்கும் காலம் எனும் **இலயகாலத்தில்** சீவராசிகள் அனைத்தும் காரண மாத்திரையாய் நிற்கும் இறைவன் நிலை அடைகின்றன என்ற **இலய தத்துவத்தை** உணர்த்தி **இலய ஞானத்தை பெறச் செய்யும்** வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### வடக்குத் திசை கற்பத்திகள்

**மேல்:** மையத்தில் நான்கு கரங்களுடன் மான், மழு (கோடாரி) தரித்த ஈசன் உமையம்மையுடன் அமர்ந்த நிலையில் காட்சித்தரும் திருஉருவமும், வலதுபுறத்தில் மண்டியிட்டு வணங்கும் பிரம்ம தேவரும், இருபுறங்களில் பறந்து வருவம் சூரிய, சந்திர உருவங்களும், அவற்றை அடுத்து இரண்டு புறத்திலுள்ள காளைகள் முறையே மேல் திசை, கீழ்த்திசை நோக்கியவாறும் காட்சியளிக்கின்றன.

**நடு:** மையத்தில் நான்கு கரங்களுடன் அபய முத்திரையுடன் யோகதெட்சிணாமூர்த்தி அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இருபுறங்களில் தேவர்கள் நால்வரது உருவங்களும் சூரியரும் சந்திரரும் பறந்து வருவது போன்ற காட்சிகள் வடிவமைத்து காட்டடப்பட்டுள்ளன.

**கீழ்:** குரங்கின் கண்கள், கோரைப்பற்கள், யானையின் துதிக்கை, பன்றியின் காது, மீனின் உடல், சிம்மத்தின் கால்கள், பறவையின் இறகுகள், இலை, தழைகளான வால் போன்ற அமைப்புடைய கால மகரங்களின் வாயிலிருந்து அமிர்த மழையாகப் பொழியும் கட்டுமாலை, சுடர்கள், முத்துத் தாமங்கள் வெளிப்படுவதை உணர்த்தும் இராஜயோகம் புடைப்புச் சிற்பம் கீர்த்திமுகத்துடன் காட்சியளிக்கிறது.

### கற்பத்திகளும் அதன் தத்துவமும்

சுவத்திக வடிவ கிணற்றின் சதுர வடிவின் பக்க அளவு **407.293506** அங்குலம். அதன் பரப்பளவு **1,65,888** சதுர அங்குலம். இந்த சதுரத்தின் பரப்பளவை **மூன்று முறை** இரட்டித்தால் கிணற்றின் பக்க அளவு **1,152** அங்குலமாகவும் அதன் பரப்பளவு **13,27,104** சதுர அங்குலமாகவும் விரிவடைகிறது. இவ்வாறு **மூன்று முறை இரட்டிப்பதை**, ஒன்றுக்கு மேல் ஒன்றாக **மூன்று கற்பத்திகளாக** உணர்தப்பட்டுள்ளதாகவும் கருதலாம்.

பெரும்பாலும் திருக்கோபுரத்தின் நிலை கால்படிகள், கர்பகிரஹத்தின் நிலை கால் படிகள், மகா மண்டபங்களில் பரவப்பட்ட கற்பலகைகள் மீது மையத்தில் ஒரு புள்ளியும், அதனை யடுத்து **ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று செவ்வகங்களும்**, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, ஆகிய **நான்கு புவியின் திசைகளை நோக்கி நீட்டடப்பட்டுள்ள கோடுகள்** கொண்ட **திருக் குறியீடுகளைக்** காணலாம் (பக்கம்-79).

மையத்திலுள்ள செவ்வகத்தின் உட்பகுதியில் அந்த திசைக் கோடுகள் நீக்கப்பட்டிருப்பதையும் காணலாம். அம்மூன்று செவ்வகங்களும், குறிப்பாக அதன் மையத்திலுள்ள திசைக் கோடுகள் நீக்கப்பட்டிருப்பதன் தத்துவம் எனும் உண்மை யாது?

மையத்திலுள்ள பிந்து-பிரம்மம் எனும் பரம். முதல் செவ்வகத்திற்கு உட்பட்ட பகுதி பரலோகம். இது பரத்துவம் எனும் பரமனின் முதலாம் வெளிப்பாடு. இரண்டாவது செவ்வகத்திற்கு உட்பட்ட பகுதி தேவலோகம். இது வியூகம் எனும் பரமன் தம்மை பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய முப்பெரும் தேவர்களாக வெளிப்படுவதைக் குறிக்கும். மூன்றாவது செவ்வகத்திற்கு உட்பட்ட பகுதி பூலோகம். இது விபவம் எனும் பரமன் தம்மை அறிவால் பலவான ஜீவராசிகளாக வெளிப்படுவதைக் குறிக்கும். அதற்கு அப்பாலுள்ள வெளிப்பகுதி பூதகணங்கள் வாழும் வெளிலோகம். இது அந்தர்யாமித்வம் எனும் பரமன் தம்மை பூதகணங்களாக வெளிப்படுவதைக் குறிக்கும்.

இங்ஙனம் பரமன் தம்மை பரத்துவமாகவும், வியூகமாகவும், விபவமாகவும், அந்தர்யாமித்வமாகவும் வெளிப்படுத்தி, அவை அனைத்தும் தம்மை வழிபட்டு திரும்பவும் தம்மிடமே வந்தடையும் பொருட்டு அர்ச்சை எனும் அர்ச்சனா மூர்த்தியாக இத்திருமுற்றம்/ திருத்தலம் எனும் திருக்கோயிலில் காட்சியளிக்கிறார்.

மேலும் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை ஆகிய ஐந்து தத்துவங்களாக தம்மை வெளிப்படுத்தும் பரமனே கர்பகிரகத்திலுள்ள **கல் அல்லது உலோகத்திலான வழிபாட்டிற்குரிய மூர்த்தி எனக் கருதாமல் கல்லிலும், உலோகத்திலும் பரமனே இருக்கிறார்** என்பதை **தன்னுணர்ந்து பரமனை தரிசிக்க வேண்டும்** என்ற ஆலயவழிபாடடின் உண்மையை உணர்த்துவதாகும்.

**இவ்வாறு பரமன் தம்மைத் தாமாகவே காலம், இடம், காரணகாரியம் எனும் பிரபஞ்சப் பொருள்களுக்கு உட்பட்டவாராக வெளிப்படுத்தினாலும், அவர் பிரபஞ்சப் பொருள்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் என்பதையும் உணர்த்துவதாகும். அவ்வாறு உணர்த்துவதற்காகவே பரத் தத்துவத்திலுள்ள புவியின் திசைக் கோடுகள் நீக்கப்பட்டுள்ளன என்பது அறியத்தக்கது.**

இக்குறியீடு சாண்டில்ய முனிவரிமிருந்து தத்தாத்திரேயர் அறிந்த சரணாகதி தத்துவத்தை உணர்த்தும் பாஞ்சராத்திரம்[62] எனும் பரமனின் வெளிபாட்டைக் குறிப்பதாகும். இப்பிரபஞ்சத்தில் வெளிப்பட்டவை அனைத்தும் இரணிய கர்பத்திலிருந்து (பிந்துஎனும் புள்ளியிலிருந்து) தோன்றியவைகளே.

அவ்வாறு தோன்றியவை அனைத்தும் அக்கர்பத்திலிலேயே (பிந்து எனும் புள்ளியிலிலேயே) ஒடுங்கும் என்பதே வியாபித்தல் அல்லது இரட்டித்தல் எனும் வரை படக் கணிதத்தின் வாயிலாக வெளிப்படும் பதினாறு கட்டங்கள் கொண்ட மகாபிதா வரைப் படத்திலிருந்து வெளிப்படும் இத்திருக்குறியீட்டின் உட்பொருளாகும்.

**ஐந்து கோசங்களும் - மூன்று உடல்களும் - ஆன்மாநிலையும்**


ஒவ்வொரு திசைகளிலும் உள்ள ஐந்து கற்பத்திகளை அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் ஆகிய ஐந்து (பஞ்ச) கோசங்களுடன் ஒப்பிடலாம். மேலும் அவற்றை ஸ்தூல உடல், சூட்சம உடல், காரண உடல் ஆகிய மூன்று சரீரங்களையும் ஆன்மாவையும் கீழ்கண்டவாறு காணலாம்.

அன்னம் பிராணம் மனம் விஞ்ஞானம் ஆனந்தம் ஆன்மா

ஸ்தூலம் சூட்சமம் காரணம் ஆன்மா

அன்னம் பிராணன் ஆகிய இரண்டும் ஸ்தூலத்திலும். மனம், விஞ்ஞானம் ஆகிய இரண்டும் சூட்சமத்திலும் ஆனந்தம் காரணத்திலும் அடங்கி இறுதியில் ஆன்மா ஆன்மாவிலேயே ஒடுங்குகிறது என்ற தத்துவத்தை இந்த அட்டவணை மூலம் அறியலாம்.


இறுதியில் ஆனந்தத்தில் ஆன்மா இலயத்திருப்பதை குறிப்பிடும் பொருட்டு ஒரே ஒரு சுற்றுடைய கல்வட்டங்களாக பெருங்கற்களை அடுக்கி அதன் நடுவே மரித்தோரை முதுமக்கள் தாழிகளிலோ அல்லது கல்லறைகளில் வைத்துப் புதைப்பது பழங்காலத்து மரபு.


பிரம்ம தரிசனக் குறியீடு

இவற்றைப் பெருங்கற்கால ஈமச் சின்னங்களில் கல்வட்டங்கள் என்பர். இறைவனடி சேர்ந்தார், பரலோக பதவியடைந்தார் என மறைந்தவரைக் குறிப்பிடுவது ஆனந்த மனைத்தும் நிறைந்த **பரமானந்த நிலை** அடைந்ததைக் குறிப்பிடுவதாகும்.

மேலும் திருமுற்றங்களின் மூன்று, ஐந்து, ஏழு ஆகிய திருச்சுற்றுக்களைக் கடந்துச் சென்று நிறைவாக கர்ப்பக்கிரகத்தை சென்றடைவதும் ஆனந்தம் அனைத்தும் நிறைந்த பரமானந்த நிலையில் ஆன்மா ஒடுங்கு வேண்டும் என்பதே இக்குறியீட்டின் உட்பொருளாகும்.

அறிவியல் வாயிலாக ஆன்மிகத் தத்துவத்தை உணர்த்தும் பிரம்மதரிசன குறியீடு ஒன்றை குறிப்பாக அரியலூர் மாவட்டம், கங்கை கொண்ட சோழ புரம், சிவாலயத்தின் பிரம்மதரிசன நுழைவாயில் நிலைக்கால் படியில் காணலாம்.



# ௪

## கல்வெட்டுச் சாசனங்கள்

*திருவெள்ளறை சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங் கிணற்றின் மதில் சுவர்களில் மூன்று கல்வெட்டுச் சாசனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த மூன்று கல்வெட்டுச் சாசனங்களில் குறிப்பாக இரண்டு கல்வெட்டுக்களில் மட்டும் வளைந்து உயரும் தீப ஒளியின் வடிவிலான புள்ளி வைத்த எழுத்துக்கள் காணப்படுகின்றன. இயற்கையின் சீற்றத்தால் சில எழுத்துக்கள் பொரிந்து அறிய இயலாதபடி உள்ளன.*

### முதலாம் கல்வெட்டு[63]

*ஸ்வஸ்தி ஸ்ரீ எனத் துவங்குவது முதலாம் கல்வெட்டு சாசனம். இச்சாசனம் சுவத்திக வடிவ கிணற்றின் மேற்கு திசை மதில் சுவரின் வெளிப்புறத்தில் தென் திசை நோக்கியவாறு மேற்கிலிருந்து கிழக்காக இரண்டு வரிகளில் இறுதியில் இரண்டு தோ குறியீடுகளுடன் பொறிக்கப்பட்டுள்ளது.*

### கல்வெட்டு சாசனம்

*முதலாம் வரி: ஸ்வஸ்திஸ்ரீ பரத்வாஜ கோத்திர (குல) த்தின் வழித் தோன்றிய பல்லவ திலக தந்திவர்மருக்கு யாண்டு நான்காவ தெடுத்து கொண்டு (ஐ)ன்தாவது முற்றுவித்தான் ஆலம்பாக்கத்து விசயநல்லூழான்*

*இரண்டாம்வரி: தம்பி கம்பன் அரையன் திருவெள்ளறைத் தென்னூர்ப் பெருங்கிணறு இதன் பியர் மார்ப்பிடுகு பெருங்கிணறென்பது (தோ குறியீடு) இது இரட்சிப்பார் இவ்வூர் மூவாஇரத்தேழு நூற்று வரும்.(தோ குறியீடு)*

***ஸ்வஸ்திஸ்ரீ:*** *அன்னையின் அருளால் எட்டுத் திசைகளிலும் மங்கலமுண்டாகட்டும்.*

**பரத்வாஜ கோத்திர குலத்தின் வழித்தோன்றிய பல்லவ திலகத் தந்திவர்மன்:** பரத்வாசர் எனும் முனிவரின் கோத்திரத்தில் பிறந்தவனும், பல்லவர்களுக்கு திலகமாகத் திகழ்ந்தவனுமான தந்திவர்மன்.

**யாண்டு:** பழங்காலத்தில் கல்வெட்டின் காலத்தைக் குறிப்பிடும் போது ஒரு மன்னன் அரசு பதவியேற்ற காலத்திலிருந்து கணக்கிட்டு வருடம் அல்லது ஆண்டு எனக்குறிப்பிடாமல் **யாண்டு** எனக் குறிப்பிடுவது பழங்காலத்துக் கல்லெழுத்து மரபாகும்.

**நான்காவதெடுத்து கொண்டு ஐன்தாவது முற்றுவித்தான்:** (தந்திவர்மனது) நான்காவது ஆட்சியாண்டில் (கி.பி. 800) துவங்கி ஐந்தாவது ஆட்சியாண்டில் (கி.பி.801) முற்றுப் பெறச் செய்துள்ளான். இரண்டாம் நந்திவர்மனுடைய மகனாகிய தந்திவர்மன் கி.பி. 796 - 846 [64] என 51 ஆண்டுகள் அரசாட்சி புரிந்தவன். (குறிப்பு: ஐந்தாவது என்பதில், **ந்**-என்பதற்கு பதிலாக, **ன்**- என்ற எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.)

**ஆலம்பாக்கத்து விசயநல்லூழான் தம்பி கம்பன்அரையன்:** அரையன் என்பதற்கு அரசன் எனப் பொருள்படுவதால் ஆலம்பாக்கத்தைச் சோர்ந்த விசயநல்லூழான் என்பவன் தந்திவர்ம பல்லவன் காலத்தில் சிற்றரசனாகவோ அல்லது மிக முக்கியமான அரசு பதவி வகித்தவனாகவோ இருந்திருக்கலாம். கம்பன் அரையன் என்பவன் அவனது இளைய சகோதரனாகும்.

**திருவெள்ளறைத் தென்னூர் பெருங்கிணறு:** திருவெள்ளறைத் தென்னூர் பெருங்கிணறு என்ற இக்கிணறானது,

**இதன் பெயர் மார்ப்பிடுகு பெருங்கிணறு:** இதன் பெயர் மார்ப்பிடுகு பெருங்கிணறு என்பதாகும்.

**இது இரட்சிப்பார் இவ்வூர் மூவாஇரத்தேழு நூற்று வரும்:** இக்கிணறு மூவாயிரத்து ஏழுநூற்றுபவரால் காக்கப்படுவதாகும்.

**மூவாஇரத்தேழு நூற்று வரும்** என்பது - நானா(பல), தேசி(சிறப்புகளுடைய) திசை (திரி/மூன்று/மூ) ஆயிரத்து எழுநூற்றுபவர் எனும் ஒரு தலைக் கட்டைச்சார்ந்த வாணிகர்களின் வம்சா வழியினரைக் குறிப்பிடுவதாகவும் கருதலாம்.

**குறியீடுகள்:** கல்வெட்டில் காணப்படும் இரு குறியீடுகள் **தோ** எனும் ஞானத்தைக் குறிப்பிடுவதாகும்.

## கல்வெட்டின் பொருள்

*அன்னையின் அருளால் எட்டு திசைகளிலும் மங்கல முண்டாகட்டும். பரத்வாஜ முனிவரின் கோத்திரத்தின் வம்சாவழியில் தோன்றிவனும், பல்லவ குலத்தின் திலகம் போன்றவனுமான தந்திவர்மன் பல்லவனுடைய நான்காவது ஆட்சியாண்டில் துவங்கி ஐந்தாவது ஆட்சியாண்டில் ஆலம்பாக்கத்து விசய நல்லூழானுடைய தம்பி கம்பன் அரையன் கட்டி முடித்தான். திருவெள்ளறை தென்னூர் பெருங்கிணறு என்ற இதனது பெயர் மார்ப்பிடுகு பெருங்கிணறு என்பதாகும். இந்தக் கிணற்றை இரட்சிப்பவர் இவ்வூரைச் சேர்ந்த மூவாயிரத்து எழுநூற்றுபவர் என்பதாகும். இக்கல்வெட்டில் காணப்படும் தோ குறியீடு ஞானத்தைக் குறிப்பதாகும்.*

## இரண்டாம் கல்வெட்டுச் சாசனம்[65]

*ஸ்ரீ எனத்துவங்கும் பாடல் வடிவிலான இக்கல்வெட்டுச் சாசனம் சுவத்திக வடிவ கிணற்றின் தெற்கு திசை மதில்சுவரில், வடக்கு-தெற்காக, மேற்குத் திசை நோக்கியவாறு இரண்டு வரிகளில் பொறிக்கப் பட்டுள்ளது. எழுத்தமைப்பின் வாயிலாக இக்கல்வெட்டும் முதலாம் கல்வெட்டும் ஒரே காலகட்டத்தைச் சார்ந்தவையாகும்.*

### கல்வெட்டுச் சாசனம்

***முதலாம் வரி:*** *ஸ்ரீ கண்டார் காணா உலகத்திற் காதல் செய்து நில்லாதேய் பண்டெய் பரமன் படைத்த நாள் பார்த்து நின்று நைய்யாதெய்*

***இரண்டாம்வரி:*** *தண்டாய் முப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லா முன்னுண்டேல்லுண்டு மிக்கது உலகமறிய வைம்மின்னெய்.*

***ஸ்ரீ கண்டார்:*** *ஸ்ரீ என்பதற்கு வட மொழியில் விஷம் என்ற பொருளுமுண்டு. விஷத்தை உண்ட காரணத்தால் ஈசனுக்கு ஸ்ரீ கண்டரர் என்ற பெயருமுண்டு. ஆயினும் இங்கே உள்ள ஸ்ரீ கண்டார் என்ற சொல் ஸ்ரீ கண்டரரைக் குறிப்பிடுவாதாக தெரியவில்லை. ஸ்ரீ என்பது சாரா எனும் சரஸ்வதியையும் பொதுவாக, ஆதி பராசக்தியையும் குறிக்கும். ஸ்ரீ என்ற சொல் பிரக்கிருதியான பூமியையும் குறிக்கும். எனவே ஸ்ரீ கண்டார் என்ற சொற்றொடர் பூமித் தாயைக் கண்டவர் அல்லது பூமியில் பிறந்து சுக போக வாழ்க்கை வாழ்பவர்கள் எனப் பொருள் கொள்ளலாம்.*

*(ஸ்ரீ என்பது* **திரு** *என்பதைக் குறிக்கும். திரு- என்பதற்குத் திருமகள், செல்வம், நல்வினை, அழகு, கண்டாரால் விரும்பப்படும் தன்மை என வெற்றி - தமிழ் அகராதி பொருள் கூறுவது குறிப்பிடத்தக்கது)*

**காணா உலத்திற் காதல்செய்து நில்லாதேய்:** *புறக்கண்களால் காண இயலாத சதா சுகபோக வாழ்க்கை வாழக்கூடிய சொர்க்கலோகம் ஏதேனும் உண்டோ என ஆசையோடு வானத்தை நோக்கி நிற்காதீர்கள்.*

**பண்டெய் பரமன் படைத்த நாள் பார்த்து நின்று நைய்யாதெய்:** *பூமியில் தமது வாழ்க்கையில் இன்பம்-துன்பம் எனும் இரட்டையுடன் போராடி வாழ்ந்து கொண்டிருப்போரே! பன்னெடுங்காலமாக சீவராசிகளைப் படைத்து வரும் பரமம் என்பவர் ஏன் என்னைப் படைத்தார் என மனம் வருத்தம் அடையாதீர்கள்.*

**தண்டாய் மூப்பு வந்துன்னைத் தளரச்செய்து நில்லா:** *முதுகுத் தண்டின் மாற்றங்களால் முதுமை வந்து உடல்தளர்ந்து எதையுமே செய்ய இயலாத நிலையில் நிற்பதற்கு,*

**முன்னுண்டேலுண்டு** *என்பதை (முன் + உண்டு ) + (ஏல் + உண்டு) முன்னுண்டு + ஏலுண்டு எனப் பிரித்தறிய முற்பட்டால் அதனது முழுப்பொருளை அறியலாம்.*

**முன்** *என்பது முன்புள்ள நில்லா என்ற சொல்லுடன் இணையாமல் பின் வரும்* **உண்டு** *என்றச் சொல்லுடன் இணைக்கப்பட்டுள்ளது ஏதோ ஒன்றை உறுதிப்படுத்துகிறது. ஒவ்வொரு மொழிக்கும் இலக்கணம் முக்கியமாகும். அத்தகைய மொழி இலக்கணத்தில் சந்தி என்பது இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துக்களின் சேர்க்கையின் ஓர் அடிப்படைப் பகுதியாகும்.* **முன்னுண்டு:** *முன் என்பது முற்பகுதி, உண்டு என்பது பிற்பகுதி, இரண்டையும் இணைப்பது நம்பிக்கை, அதனால் உண்டாவது உயர்ந்த சிந்தனை.* **ஏலுண்டு: ஏல்:** *என்பதன் பொருள் இரண்டு கைகளையும் உயர்த்தி வானத்தை நோக்கி, கண்ணீர் மல்க, சூரியனைவிட அதிக பிரகாசம் பொருந்திய பேரொளியை,* **பரம்பொருளே!** *என யாசிப்பதைக் குறிப்பதாகும். ஏல் என்பது முற்பகுதி, உண்டு பிற்பகுதி. இரண்டையும் இணைப்பது எல்லையற்ற அருள். அதனால் பெறப்படுவது மெய்யறிவு.* **முன்னுண்டேல்லுண்டு:** *முன்னுண்டு முற்பகுதி, ஏலுண்டு பிற்பகுதி, இரண்டையும் இணைப்பது, பரமன் ஒருவனே என்பதே பரம்மஞானம். அதனால் அறியப்படுவது* **பேருண்மை.**

**மிக்கது:** *இச்சொல் மிகவும் ஆழ்ந்தறிய வேண்டியச் சொல்லாகும். இச்சொல்லுக்கு,* **மிகுதியானது, சிறந்தது**, *ஒன்றின் மேற்பட்டது, மீறிய செய்கை, எஞ்சியது, வேறானது, நியாயமற்றது என மெய்யப்பன் தமிழ் அகாராதி பொருள் கூறுகிறது.* **இறைவனிடம் சரணாகதி அடைந்து சிறந்த ஞான முத்தியும், கர்ம முத்தியும், மிகுதியான வீடுபேறுபெறுவதே** *மானிட வாழ்க்கையில் மிகச் சிறந்த* **(மிக்கது)** *செயல் என்பதைக் குறிப்பதாகக் கருதலாம்.*

**உலகமறிய வைம்மினெய்:** *(அக்கருத்தை ) உலகம் அறியும் படியாக சொல்லி வைப்பீராக.*

### கல்வெட்டின் பொருள்

*அன்னையின் அருளால் பூமியில் பிறந்து புற உலக சுக போக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களே!*

*இதைவிட மேலாகவும் நிரந்தரமான சுகபோக வாழ்க்கை வாழக்கூடிய சொர்க்க பூமி ஏதேனும் உண்டோ என ஆசையோடு வானத்தை நோக்காதீர்கள். பூமியில் பிறப்பு-இறப்பு, இன்பம்-துன்பம் எனும் இரட்டையுடன் போராடி வாழ்ந்து கொண்டிருப்பவர்களே! பன்னெடுங்காலமாக சீவராசிகளை படைத்து வரும் பரமம், ஏன் என்னை படைத்தார் என மனம் வருத்தம் அடையாதீர்கள்.*

*முதுமையால் முதுகுத் தண்டில் ஏற்படும் மாற்றங்களால் உடல் தளர்ந்து உங்களால் ஏதும் செய்ய இயலாத நிலை ஏற்படுவதற்கு முன்பாகவே உண்டு ஏல் எனும் பரம்பொருள் ஒன்று உண்டு என பரிபூர்ணமான நம்பிக்கையுடன் இரண்டு கைகளையும் உயர்த்தி வானத்தை நோக்கி, கண்ணீர் மல்க, சூரியனை விட அதிக பிரகாசம் பெருந்திய பேரொளியும் பேருண்மையும் உடைய அப்பரம்மனிடம் திரும்பவும் சென்று வீடுபேறு எனும் முக்தி அடைவதே மிகச் சிறந்தச் செயல் என்பதை உலகம் அறியும் படியாக சொல்லி வைப்பீராக.*

*(முதலாம், இரண்டாம் கல்வெட்டுக்களில் காணப்படும் புள்ளிக்குப் பதிலாக வளைந்து உயரும் தீப ஒளியின் வடிவத்தைப் பற்றி பிற்பகுதியில் காண்போமாக.)*

### மூன்றாம் கல்வெட்டு சாசனம்[66]

*ஸ்வஸ்திஸ்ரீ எனத் துவங்கும் இக்கல்வெட்டுச் சாசனம் சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் மதில் சுவரின் கிழக்கு திசையில், தெற்கு-வடக்காக, கிழக்கு திசை நோக்கியவாறு ஆறு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் வரியில் பெயரைக் குறிக்கும் கல்லெழுத்துக்கள் பொரிந்தும் காணப்படுகின்றன.*

### கல்வெட்டுச் சாசனம்

**முதலாம் வரி:** *ஸ்வஸ்திஸ்ரீ : சர்வ(சோ)ம சக்கரவர்த்திகள் போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு 25 ஆவது*

**இரண்டாம் வரி:** *திருவெள்றை மஹா கிராமத்து தெற்தல வாசலில் வாணிகன் செய்த பெருங்கிணறு னாலு வா*

***மூன்றாம் வரி:*** *சலு (ம்) மதில்களும் குலைந்து வெள்ளமும் புக்குதிகையில் இது குடந்தை வாணிகன் சோனை*

***நான்காம் வரி:*** *ஊரான் உய்யநெறி காட்டினானென்ற வாணிக(ந்) நகரத்தார் பக்கலிலும் வாங்கி என்னுடைய*

***ஐந்தாம் வரி:*** *அதலுமுட்டு துதிவை ம(திலுமெ)டுத்து நாலுவாசலு கல்லா கட்டினநன் இத்தன்மதானை இது மூவாயிரத்து தெழுநூற்றுவரான்.*

*இத்தன்மதானை இது மூவாயிரத்து தெழுநூற்றுவரான்-என்ற வரி மட்டும் தனியாக பொறிக்கப்பட்டுள்ளது.*

***ஸ்வஸ்திஸ்ரீ:*** *அன்னையின் அருளால் எட்டுத் திசைகளிலும் மங்கலமுண்டாகட்டும்:*

***சர்வசோம சக்கரவர்த்திகள் போசள வீரராமநாத தேவர்:*** *சர்வசோம சக்கரவர்த்திகள் என்ற மெய்க் கீர்த்தி கொண்ட பொசள மன்னர்கள் வம்சா வழி ஸ்ரீ வீர ராமநாத தேவர் என்ற இம்மன்னனின் ஆட்சிக் காலம் கி.பி. 1254 முதல் கி.பி. 1295 வரையிலாகும்.*[67]

*(தேவர் என்ற சொல் தேவர்களுக்கு ஒப்பானவர் என்பதைக் குறிக்கும்.)*

***யாண்டு:*** *யாண்டு என்பதன் பொருள் முன்பே அறியப்பட்டதாகும்.*

***இருபத்தி ஐந்தாவது:*** *இருபத்தி ஐந்து என்பதை இலக்கங்களுக்கு பதிலாக தமிழ் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டுக்கு* ***உ*** *என்ற எழுத்தும், ஐந்துக்கு* ***ரு*** *எழுத்தும்,* ***வது*** *என்பதும் ஒன்றென இணைத்து அழகான வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது நோக்கத்தக்கது. இருபத்தி ஐந்தாவது என்பது கி.பி. 1279-தாகும்.*

***திருவெள்(ள)றை மஹா கிராமத்து:*** *திருவெள்ளறை என்ற பெயரில்* ***ள*** *என்ற எழுத்து இல்லாமல்,* ***ஹ*** *மற்றும்* ***கி*** *என்ற இரண்டு எழுத்துக்கள் வடமொழி எழுத்துகளைக் கொண்டதாக உள்ளன.*

***தெற்தல வாசலில்:*** *தெற்குத் திசையிலுள்ள கோயில் வாசலில்*

***வாணிகன் செய்த பெருங்கிணறு : வாணிகம் செய்த*** *என்றிருந்தால் வியாபாரம் செய்த இடத்தில் கட்டப்பட்ட பெருங்கிணறு எனக் கருதலாம். ஆனால்* ***வாணிகன் செய்த*** *என்றிருப்பதால் இது ஒரு வியாபாரி செய்த பெருங்கிணறு எனக் கருதத் தோன்றுகிறது.*

***னாலு வாசலு (ம்) மதில்களும் குலைந்து வெள்ளமும் புக்குதிகையில் இது:*** *வெள்ளம் புகுந்ததால் இதனது நான்கு வாசலும் மதில் சுவர்களும் குலைந்து விட்டன. இக்கிணறு,*

**குடந்தை வாணிகன் சோனை ஊரான் உய்யநெறி காட்டினானென்ற வாணிக(ந்):** கும்பகோணம், சோனை என்ற ஊரைச்சார்ந்த **உய்யநெறி காட்டினான்** என்றப் பெயருடைய வியாபாரி.

**நகரத்தார் பக்கலிலும் வாங்கி என்னுடைய அதலுமுட்டுதுதிவை:** நகரத்தார் எனும் வாணிகப் பெருகுடி மக்களிடமிருந்து நன்கொடையாகப் பணம் வாங்கி அதில் தன்னுடைய பணத்தையும் போட்டு (குறிப்பு: நாட்டுக் கோட்டை செட்டியார்களை நகரத்தார் என்றழைப்பர்).

**துதி வை: (நுனி**, துருத்தி, தோத்திரம், புகழ்) நுனி -முன்னின்று,

**ம(திலுமெ)டுத்து நாலுவாசலு கல்லா கட்டினநன்:** மதில்சுவர் எடுத்து நான்கு வாசல்களையும் கல்லால் கட்டின(ா)ன்.

**இத் தன்மதானை:** இந்த தர்மசெயல் புரிந்தோர்

**இது மூவாயுரத்து தெழுநூற்றுவரான்:** மூவாயிரத்து எழுநூற்று பவரான் என்பவரை குறிப்பிடுவதாக கருதலாம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் எனும் பெருங்குடி வாணிகர்களுக்கு முற்காலத்தில் **நானா தேசி திசை ஆயிரத்து ஐநூற்றுபவர்** எனும் பட்டப் பெயரும் உள்ளது. அதிலுள்ள முதல் மூன்று சொற்களான **நானா** என்பதற்கு பல எனவும், **தேசி** என்பதற்கு அழகு (சிறப்பு, சற்குணம்) எனவும் **திசை** என்பதற்கு திரி (மூன்று/மூ) எனவும் பொருள்படுவதால் அம்மக்களுக்கு **பல சிறப்புக்களுடைய மூவாயிரத்து ஐநூற்றுபவர்** எனும் பட்டப் பெயர் இருந்துள்ளது தெரியவருவதாகக் கருதலாம்.

### கல்வெட்டின் பொருள்

சர்வசோம சக்கரவர்த்திகள் என்ற மெய்க் கீர்த்தி கொண்ட போசள மன்னர்கள் வம்ச வழிவந்த வீர ராமநாத தேவர் என்ற இம்மன்னனின் இருபத்தி ஐந்தாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1279), திருவெள்ளறை எனும் பெரிய கிராமத்து தென் திசைக் கோயில் வாசலில் வாணிகன் ஒருவனால் கட்டப்பட்ட பெருங் கிணற்றில் மழைவெள்ளம் புகுந்து அதன் நான்கு வாயில்களும் மதில் சுவர்களும் குலைந்து விட்டன.

அக்கிணற்றை கும்பகோணம், சோனை என்ற ஊரைச்சார்ந்த **உய்யநெறி காட்டினான்** என்றப் பெயருடைய வாணிகன், நகரத்தார் எனும் வாணிகப் பெருகுடி மக்களிடமிருந்து நன்கொடையாகப் பணம் வாங்கி அதில் தன்னுடைய பணத்தையும் போட்டு தானே முன்னின்று, இக்கிணற்றினுடைய மதில்சுவர்களை எடுத்தும் நான்கு வாசல்களையும் கல்லால் கட்டினான். இந்தத் தர்மச் செயல் புரிந்தோர் மூவாயிரத்து எழுநூற்றுபவரான் என்பது ஒரு வாணிகரை குறிப்பிடுவதாகவும் கருதலாம்.

### தீப வடிவில் புள்ளி வைத்த எழுத்துக்கள்

பொதுவாக, கல்வெட்டெழுத்துக்களில் புள்ளி வைத்த எழுத்துக்களக் காண்பது மிகவும் அரிது. அதற்கு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ள கல்லின் அமைப்பால் புள்ளிகளை அடையாளம் காண்பது கடினம் என்பதே ஒரு முக்கியக் காரணமாகும்.



எனினும், சுவத்திக கிணற்றிலுள்ள சமகாலத்தைச் சார்ந்த முதல் இரண்டு கல்வெட்டுக்களில் புள்ளிக்குப் பதிலாக நெளிந்து மேல் நோக்கிச் செல்லும் தீச்சுடரின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த தீச்சுடரின் வடிவம் ஏதோ எழுத்துக்களை அழகுபடுத்தும் வடிவமாகக் கருதலாகாது. ஏனெனில் இது சிறந்த தொரு தத்துவத்தை உணர்த்தும் வடிவமாகும். அத்தத்துவத்தை ஆராய்ந்தறிவோமாக.

கீழ்நோக்கிய தாமரை மொட்டின் வடிவமுடைய, இதயக்குகையின் ஆகாயத்தின் நடுவில் (க்க-எனும்) பிராணன் நிலை கொள்கிறது, அந்த அக்னியின் நடுவில் அதன் **சுடர் மேல் நோக்கி** பிரகாசிக்கிறது.

இந்தச்சுடரே ஜீவான்மா[68] என்பதை யோகநிலை கை கூடியவர்களால் மட்டுமே உணரமுடியும். மனம் அமைதியடையா விட்டால் யோகம் கைகூடாது.

புற உலகப் பற்றாகிய காற்று மனமாகிய தீபத்தை எப்போதும் அலைக் கழிக்கிறது. இந்த தீபம் சிறிதும் சஞ்சலப்படாமல் இருக்குமே யானால் சரியான யோக நிலை கை கூடிவிட்டது என்று பொருள்.

மனிதன், முதலில் வெளிப் போர்வையாகிய ஸ்தூல உடலாகவும்; இரண்டாவதாக மனம், புத்தி, நான் -உணர்வு இவற்றைக் கொண்ட சூட்சும உடலாகவும் படைக்கப்பட்டவன்.

இவ்வுடலில் தான் மனிதனின் உண்மையான (க எனும்) ஆன்மா இருக்கிறது. ஸ்தூல உடம்பின் குணங்களும் சக்திகளும் மனதிலிருந்தே பெறப்பட்டவை.

மனம், அதாவது சூட்சும உடல், சக்திகளையும் ஒளியையும் அதன் பின்னால் இருக்கும் ஆன்மாவிடமிருந்து பெறுகிறது.[69] ஆகவே **மனதுக்கும் ஒளியுண்டு** என்பது அறியத்தக்கது.

உடல் ஒரு கிண்ணம், மனமும் புத்தியும் அதில் உள்ள தண்ணீர். இந்தத் தண்ணீரில் சச்சிதானந்த சூரியனின் உருவம் விழுகிறது.



இந்தப் பிரதி பிம்பச் சூரியனைத் தியானம் செய்வதாலும், இறையருளாலும் உண்மையான அச்சூரியனின் தரிசனம் கிடைக்கிறது என்றார் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்[70].

தீபச்சுடர் நெளிந்து மேல் நோக்கும் வடிவத்துடன் காணப் படுவதால் உலகப்பற்றாகிய காற்று எனும் பற்றால் மனமாகிய தீபம் எப்போதும் அலைக்கழிக்கப்படுகிறது என்பதை சுட்டிக் காட்டுகிறது.

உலகப்பற்றாகிய காற்று அற்ற நிலையில் மனமாகிய தீபம் எப்போதும் அலைக்கழிக்கப்படுவதில்லை என்பதாகும். அதற்கு சான்றாக, திருச்சி-தஞ்சை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதுக்குடியில் எழுந்தருளியுள்ள ஈசனது ஆலயத்தில் எமது மூத்தோன், முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களால் (பாடல்) கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் புள்ளிக்குப் பதிலாகச் சஞ்சலமின்றி சரியான யோக நிலை கைக்கூடியதைச் சித்தரித்துக் காட்டும் வகையில் நின்று நிதானமாக எறியும் தீபச் சுடரின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

ௐ

## *யார் அந்த மார்ப்பிடுகு?*

*பழந்தமிழகத்தைப் பொருத்தமட்டில் மார்ப்பிடுகு என்ற புனைபெயரைப் பெற்றவர்கள் இருவராவர்.*

*குன்னாண்டார் கோயில் தந்திவர்மன் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மார்ப்பிடுகு பேரதியரையன் என்பவர் முதலாமவர்.*

*திருவெள்ளறை சிவன் கோயில் மூன்றாம் நந்திவர்மனின் ஆறாவது ஆட்சியாண்டு காலத்தைச் சார்ந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மார்ப்பிடுகு இளங்கோவேளான் சாத்தன் என்பவர் இரண்டாமவர்.*

*மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 847-869)*[71] *எனும் பல்லவ மன்னன் தந்திவர்மன் (கி.பி. 796-847) எனும் பல்லவ மன்னனுக்குப் பின்னர் அரியாசனம் ஏறியவர். மேலும் தந்திவர்மன் காலத்தில் ஆலம்பாக்கத்தில்* ***மார்ப்பிடுகு ஏரி*** [72] *ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.*

*மார்ப்பிடுகு என்ற புனை பெயர் குறிப்பாக தந்திவர்ம பல்லவனுக்கும்*[73] *இருந்துள்ளது. மார்ப்பிடுகு பெருங்கிணறானது, ஆலம்பாக்கம் விசய நல்லூழான் தம்பி கம்பன் அரையனால் தந்திவர்மனின் நான்காவது ஆட்சியாண்டில் கட்டத் துவங்கி ஐந்தாவது ஆட்சியாண்டில் (கி.பி. 800-801) முற்றுப் பெற்றுள்ளது.*

*மார்ப்பிடுகு பேரதியரையன் என்பவன் தந்திவர்மனின் சம காலத்தைச் சார்ந்தவன்.*

*எனவே, மார்ப்பிடுகு எனும் புனை பெயருடைய தந்திவர்மனது பெயராலோ அல்லது அவரது ஆட்சிக்கலாத்தில் தமிழகத்தின் பெரும்பகுதியைக் கட்டிக்காத்த மார்ப்பிடுகு பேரதியரையனின் புனை பெயராலோ சுவத்திக வடிவத்தில் இக்கிணறு கட்டப்பட்டுள்ளதாகக் கருதலாம்.*

எனினும், **பேரதியரையன்** என்பதைப் பேர்+அதி+ அரையன் எனப்பிரித்துப் பொருள் அறியப்படவேண்டும். **பேர்** என்பது அதிகம் எனப்பொருள். **அதி** என்பது சிறப்புமிக்க இடைச் சொல்லாகும். **அரையன்** என்பதற்கு அரசன், பழைய பட்டம் என்பது பொருள்.

எனவே பொருள், சொல் ஆகிய இரண்டின் அடிப்படையில், பேரதியரையன் என்பதற்கு **அதிகச் சிறப்புடைய அரசன்** எனப் பொருள் கொள்ளலாம்.

மேலும் பெரும்பிடுகு, மார்ப்பிடுகு, பேரதி/கோவதி/தமிழதி அரையன் என்ற சொற்கள் பெரும்பாலும் முத்தரையர் வம்சா வழி வந்தவர்களின் பெயர்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. அதற்குச் சான்றாக கீழ்க்கண்ட இரண்டு கல்வெட்டுக்களைச் சுட்டிக்காட்டலாம்.

### செந்தலைத் தூண் கல்வெட்டு

....டுத்த பெரும்பிடுகு முத்தரையனாயின குவாவன் மாறனவன் **மகனிங் கோவதியரையனாயின** மாறன் பரமேஸ்வரனவன் மகன் பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாறனவனெடுப்பித்த படஒரி கோயிலவனெறிந்த வூர்களுமவன் பேர்களுமவனைப் பாடினோர் பேர்களுமித் தூண்கள் மேலெழுதினவை.[74]

### நார்த்தாமலை விஜயாலய சோழீச்சுரம் கோயில் கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சாத்தன் பூதியான **இளங்கோவதியரையர்** எடுப்பித்த கற்றளி மழை இடித்தழிய **மல்லன் விதுமன் ஆயின தென்னவன் தமிழதியரையன்** புதுக்கு.

நானா தேசி திசை ஆயிரத்து ஐநூற்றுபவரால் முதலில் கட்டப்பட்டதா? தந்திவர்மன் எனும் பல்லவ மன்னனின் மார்ப்பிடுகு புனைப் பெயரால் அல்லது அவனது சமகாலத்தைச் சார்ந்த மார்ப்பிடுகு பேரதியரையனின் புனைப் பெயரால் இந்த மார்ப்பிடுகு பெருங்கிணறு கட்டப்பட்டதா? என்பதை ஆய்வுலகம் ஆராய்ந்தறிந்து நம் தமிழ்கூறும் நல்லுலகுக்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளது.

ஶ

## *நிறைவுரை*

*வெண்மையான பாறைகள்/குன்றுகள் நிறைந்துள்ள காரணத்தால் திருவெள்ளறை எனக் காரணப்பெயர் பெற்ற தொரு பழமையான மகா கிராமத்தின் சிறப்பையும், அதில் செந்தாமரைக் கண்ணாழ்வார் எனும் புண்டரீகாட்சப் பெருமாள், தாயார் பங்கயச் செல்வியார் ஆகிய இருவரும் எழுந்தருளியுள்ளதொரு வைணவத் திருத்தலத்தைப் பற்றியும் அறிந்தோம்.*

*இத்திருத்தலத்தின் தெற்கு வாசலுக்கு அருகில், முதன் முதலில் வாணிகப் பெருங்குடியிரைக் குறிக்கும் வகையில்* ***பெருங்கிணறு*** *என்ற பெயரில் வாணிகன் ஒருவரைால் ஒரு கிணறு கட்டப் பட்டிருக்கலாம், அக்கிணறானது பல்லவ மன்னன் தந்திவர்மனின் (பொ.ஆ.800-801) ஆட்சிக் காலத்தில் ஆலம்பாக்கத்து விசய நல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்பவரால் தென்னூர் பெருங்கிணறு எனும் இக்கிணறு* ***மார்ப்பிடுகு பெருங்கிணறு*** *என்ற பெயரில், வரைப்படக் கணிதம், அறிவியல், ஆன்மிக அடிப் படையிலும், சிற்ப சாத்திர முறைப்படியும், சுவத்திக வடிவத்திலும் கட்டப்பட்டுள்ளதை அறிந்தோம்.*

*மண்ணுலகில் வாழ்ந்து அனுபவித்த சுகங்களைவிட விண்ணுலக சுகங்களே சிறந்தவை என ஆசைப்படாமல் மண்ணுலகமே விண்ணுலகம், மண்ணுலக சுகமே விண்ணுலக சுகம் என்றுணரவும் வேண்டும். வாழ்க்கையில் துன்பம் வரும் காலங்களில் பரமன் ஏன் என்னைப் படைத்தார் என மன வருத்தமடைய கூடாது. வயது முதிர்ந்த காலத்தில் தோல் சுருங்கி, உடல் தளர்ந்து, மூப்படைந்து பூலோக வாழ்க்கை நிறைவடைவற்கு முன்பாகவே,* ***அறச் செயல்களைப் புரிந்து, ஏல்*** *எனும் இறைவனைநோக்கி, இருகரங்ளை ஏந்தி, கண்ணீர்மல்க, இறைவனிடம் சரணாகதி அடைந்து சிறந்த* ***ஞான முத்தியும், கர்ம முத்தியும், மிகுதியான வீடுபேறு பெறுவதே*** *மானிட வாழ்க்கையில் மிகச் சிறந்த* ***(மிக்கது)*** *செயலாகும் என்பதே மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் ஆன்மிக தத்துவம்.*

இதனை (**உலகமறிய வைம்மின்னெய்)** உலகம் அறியும்படி சொல்லி வைப்பது ஒவ்வொரு தனி மனிதனின் கடமை என நம்முன்னோர்கள் ஒரு **கல்வெட்டுப் பாடல்** வாயிலாக அறிவித்துள்ள ஆன்மிகத் தத்துவத்தின் உட்பொருளைப் புரிந்து கொண்டோம்.

தெளிவாக அறியஇயலாததொரு காலகட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் அந்த மார்ப்பிடுகு பெருங்கிணற்றின் மதில் சுவரும் நான்கு வாசல்களும் குலைந்துள்ளன.

அதனை பொ.ஆ. 1279-யில் கும்பகோணம் சோனையூரைச் சேர்ந்த உய்யநெறி காட்டினான் என்ற வாணிகன், நகரத்தாரிடம் நன்கொடையாகப் பணம் பெற்று அதில் தன்னுடைய பணத்தையும் போட்டுத் தானே முன்னின்று குலைந்து போன மதில் சுவர்களையும் நான்கு வாசல்களையும் சீரமைத்து கல்லால் கட்டியச் செய்தி ஆகியவற்றை கல்வெட்டுச் சாசனங்கள் வாயிலாக ஆராய்ந்தறிந்தோம்.

சிற்பக் கலையின் அடைப்படையில் புவியின் திசைகள் நான்கு, சோதியின் திசைகள் நான்கு எனவும் அந்த எட்டுத் திசைக்குரிய திசைக்காவலர்களையும், களிறுகள் எனும் யானைகளை களிற்றுப் படிகளாகவும், பதினாறு கட்டங்கள் கொண்ட மகாபிதா எனும் வரை பட கணிதத்தின் வாயிலாகவும், முற்றிலும் கருங்கற்களால் பிரமாண்டமாக சுவத்திக வடிவத்தில் கட்டமைக்கப் பட்ட கிணற்றின் பல்வேறு பெயர்களின் காரண காரியங்களை ஆராய்ந்தறிந்தோம்.

கற்பத்திகளைப் பற்றியும் அதில் வடிவமைக்கப்பட்டுள்ள அழகிய படைப்புச் சிற்பங்களைப் பற்றியும் விரிவாக ஆராய்ந்தறிந்தோம்.

முதலில் இக்கிணற்றைக் கட்டிய **நானா தேசி திசை ஆயிரத்து ஐநூற்றுபவர்(ரான்)** எனும் வாணிகரும் அதனை சுவத்திக வடிவத்தில் கட்டிய கம்பன் அரையனும் ஒரு புண்ணியமான காரியத்தை அதாவது அறச்செயலைச் செய்தவர்கள் ஆவார்.


எனினும் மூன்றாம் வணிகரோ அவ்விருவர்கள் செய்த அறச்செயலையும் மார்ப்பிடுகு பெருங்கிணற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள சிற்பக்கலையும், அறிவியல் ஆன்மிக தத்துவங்களையும் பாதுகாத்தவராவார்.

வடதிசை படிக்கட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க ஒன்று முதல் பத்து எண்களையும், மதில் சுவர்களில் காணப்படும் குறியீடுகளின் உட்பொருளையும் ஆராய்ந்தறிந்த நமக்கு **ஒரு முக்கிய கடமை** உண்டு.

அதுவானது; மேற்கண்ட அறிவியல் ஆன்மிக ரீதிகளின் சிறப்புக்களுடைய திருவெள்ளறை சுவத்திக வடிவ மார்ப்பிடுகு பெருங்கிணற்றை பராமரித்து பாதுகாத்து வரும் **தமிழகத் தொல்லியல் துறைக்கு நமது மனார்ந்த நன்றியை தெரிவிப்பது தமிழக மக்களின் முக்கிய கடமையாகும்.**

**இயன்மொழி வாழ்த்து எனும் இன்னார் இன்னது கொடுத்தார்; அவர் போல் நீயும் கொடுப்பாயாக-** எனக் கூறும் **புறத்திணையின் பகுதியான புறத்துறை**-யை எடுத்துக் காட்டி, **எந்த ஒரு நாடு தன் பண்பாட்டையும் வரலாற்றையும் மறந்துவிடுகிறதோ அது தன்னையே மறந்து விடும்-** என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழக தமிழாய்வு மையங்களும், பல்கலை கழகங்களும், இந்த வரலாற்றுச் சின்னத்தை மேலும் விரிவாக ஆய்வு செய்து இதனை ஒரு உலக பாரம்பரிய சின்னமாகவும், சிறந்த சுற்றுலாத் தலமாகவும் அறிவிக்க முன்வர வேண்டுமென, குவிந்த கரங்களுடன் சிரம் தாழ்த்தி வணங்கி பணிவன்புடன் திருவெள்ளறை மார்ப்பிடுகு பெருங்கிணறு காட்டும் அறிவியலும் ஆன்மிகமும் எனும் இந்நூலை நிறைவு செய்கிறோம்.

**திசையறிதல்**



## துணை நூல்களும் குறிப்புக்களும்


01. வெ.வேதாசலம், திருவெள்ளறை, ப.3

02 வெ.வேதாசலம், திருவெள்ளறை, ப.3

03. S.I.I. Vol. XIX No. 291

04 S.I.I Vol. XIII No. 35

05. S.I.I Vol. XII No. 187

06. வெ.வேதாசலம், திருவெள்ளறை, ப. 132

07. மதுக்கன்னா,யந்திரா, ப. 10

08. The office of the ol records of India, Birdwoo, Sir George, London p. XI and Encyclopeedia of Religion and Ethics Vol.IV. p.328

09. எஸ்.கே.இராமசந்திரராவ் : நவகிரஹகோசா, தெ.1, பக். 72-73

10. The Oxford Dictionary 1984 and Little French Dictionary

11. மேதினி கோசா சூ.1.166 ( ஸ்வஸ்திகோ மங்கல திரவிய)

12. அண்ணா(உரையாசிரியர்): புருஷ ஸூக்தம் சாந்தி பாடம்

13. P.N.V. Kurup and K. Ragunathan, Human Physiology in Ayurveda The Science of Medicine and Physiological Concepts in Ancient and Medieval India. , p. 67.

14. அண்ணா(உரையாசிரியர்)உபநிஷத்ஸாரம், சந்தோக்கியோபநிடதம்: சூ.4.10.5

15. Translated by Bruno Dagens, Mayamata- Chapter 7, Diagrams, Verses 7.50-57, p.21.

16. Translated by Swami Swahananda , Chandogya Upanisad verses 4.10.5, p. 299

17. S.I.I. Vol. XiX. 364

18. குமாரசாமி தம்பிரான் சுவாமிகள், சமஸ்கிருத மொழி பேச்சு மொழி மட்டுமே எனவும் இம் மொழியை எழுதாக்கிளவி என திருவானைக் காவலில் சமஸ்கிருத பயிற்சி முகாம். நன்றி: தினமலர், திருச்சி சிட்டி நியூஸ், 11.5.2010 ப. 11.

19. Sri. Mansukhlal. N.Sata, Symbols of a Religious Culture, by in the Hindu, Sunday, June 12,1988

20. கையேடு, இந்திய தொல்லியல் துறை, மைசூர்.

21. Bertrand,1897:183

22. E.B.H., Study of Indo-Aryan Civilaizationy

23. கோ. தங்கவேலு, இந்திய கலை வரலாறு- முதல் புத்தகம்,

24. ஸ்ரீ ஸ்வஸ்திக, குஜராத்தி புத்தக தொகுப்பு.

25. ஜேம்ஸ் சர்ச்வார்டு, தி லாஸ்ட் காண்டினன்ட் ஆப் மூ, ப. 23

26. அண்ணா (உரையாசிரியர்) சாந்தோக்ய உபநிஷதம் (8.1.1-3)

27. புலவர் இரா. இளங்குமரனார் , தமிழ் நெறிக் கரணங்கள், 15 மண்ணில் விண், ப. 118

28. ருக்வேதம் சுலோகம் 1. 155.6,
Caturbhi Sakam Navatim Ca Namabhih

29. Agrawala V.S., Matsya-Purana

30. Translated by Bruno Dagens,Mayamata- Chapter 7,Diagrams, Fig. 5, P.20

31. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர், தைத்திரீய உபநிடதம், வாழ்க்கை கல்வி (சீக்ஷா வல்லி), ப. 14.

32. சுவாமி விவேகானந்தர், ஞான தீபம் 6.115

33. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர்,தைத்திரீய உபநிஷதம், வாழ்க்கை கல்வி (சீக்ஷா வல்லி), 1.3.2

34. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர்,தைத்திரீய உபநிஷதம், வாழ்க்கை கல்வி (சீக்ஷா வல்லி), 1.3.4

35. Madhu Kanna, Yantra, Page 145.

36. Translated by Bruno Dagens, Mayamata- Chapter 7, Diagrams, Fig. 5 P.20

37. நடன.காசிநாதன்,கல்லெழுத்துக்கலை, பக். 68-70

38. ஸ்ரீமத் பாகவதம் (3.11.41).

39. Stephen Knapp,The Secret Teaching of Vedas- Chapter.7. page 141-142

40. சிற்ப செந்நூல், சிற்பத்துறை அளவைகள், ப.1

41. அதர்வன வேதம்(காண்டம்-1, சூ.11, மந்திரம் 1-5எ)

42. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர்,புருஷ ஸூக்தம் 1.17

43. ரங்கநாத முனி, புருஷ ஸூக்த பாஷ்யம்

44. எஸ்.கே. இராமச்சந்திர ராவ்,நவகிரஹகோசா,தெ.1, பக். 72-73

45. Adrian Snodgrass, The Symbolism of the Stupa, page 15.46. Translated by Bruno Dagens , Mayamata, Ch. 6, Page 11-12

47. கோவை,ஸ்ரீ லலிதாம்பிகை பீடம் ஸ்ரீ ஜெகநாத சுவாமிகளின் சொற்பொழிவின் தொகுப்பு.

48. Adrian Snodgrass, The Symbolism of the Stupa by page- 102

49. அண்ணா(உரையாசிரியர், புருஷ ஸூக்தம் 1.3

50. அண்ணா(உரையாசிரியர்), புருஷ ஸூக்தம் 1.4

51. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர், தைத்திரீய உபநிஷதம் 3.10.6

52. அண்ணா(உரையாசிரியர், புருஷ ஸூக்தம் 1.5

53. ரங்நாதமுனி, புருஷ ஸூக்த பாஷ்யம்

54. மெய்யப்பன் தமிழ் அகராதி

55. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர், நாராயண ஸூக்தம் -12

56. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர், பிரச்ன உபநிஷதம், 6.1-2

57. விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர், பிரச்ன உபநிஷதம், 6.4

58. அண்ணா(உரையாசிரியர்,புருஷ ஸூக்தத்தில் 1.15

59. எரிக்வான் டானிக்கன். யூக்வேடார் பலகைக்கல்,

60. அண்ணா(உரையாசிரியர்), புருஷ ஸூக்தம் 1.1

61. உரைஆசிரியர் அண்ணா, பஞ்ச சதசீ: 2.57. புருஷஸூக்தம்,ப.5.

62. மதுக்கன்னா, யந்திரா, பக்கம் 144

63. ARE 541 of 1905/6

64. தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு பல்லவர் பாண்டியர் வரலாறு (கி.பி. 500 - 900 வரை)முதல் பகுதி, ப.187.)

65. மயிலை. சீனி. வேங்கடசாமி, தமிழ்சாஸனச் செய்யுள் மஞ்சரி

66. *மயிலை. சீனி. வேங்கடசாமி ,சமணமும் தமிழும், பக்கம் 16.*

67. K.A. Nilakanta Sastri, A History of South India, page 225

68. *விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர்,*

*நாராயன ஸூக்தம்- 6, 9, 10, தியான வழிகாட்டி,*

69. *சுவாமி விவேகானந்தர், ஞான யோகம், பிரபஞ்சம்; சிற்றண்டம், ப.275.*

70. *ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் : தினமலர் 11.06.2010*

71. *தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு பல்லவர் பாண்டியர் வரலாறு (கி.பி. 500 - 900 வரை) முதல் பகுதி, ப. 172*

72. S.I.I. vol.XIII, no. 314, S.I.I. vol. Xiii.no.222, ARE 712 0f 190.

73. Ep. India vol. Dentivarman Inscriptions in Tiruvallarai.

74. Ep. India vol. XIII



அறிவியல் ஆன்மிக விஞ்ஞானி
**தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்,** டி.எம்.இ., பி.ஓ.இ.
நிறுவனத் தலைவர்,
தொ(ல்)லியல் ஆய்வு மையம்,
43.பி.புது ரெட்டித் தெரு, பீமநகர்,
திருச்சிராப்பள்ளி-620 001.
கைப்பேசி எண்: 90806 50420



திருமதி. **அனிதா குமார்** எம்.எஸ்.,
அறங்காவலர்,
சந்திரா போஸ் அறக்கட்டளை,
3/4-4/5 மாரியம்மன் கோயில் தெரு,
பீமநகர், திருச்சிராப்பள்ளி-620 001.



தமிழ்ச் செம்மல், கலைச் செல்வம்,
**மா.பாண்டுரங்கன்,** டி.எம்.இ.,
நாடகநடிகர், கதைவசனகர்த்தர், இயக்குநர், நாவலாசிரியர்
14/309 சண்முகாநகர்,
கோனூர் அஞ்சல், மேட்டூர் அணை-636 404.
சேலம் மாவட்டம்.



**பெ.இராமலிங்கம்,**எம்.ஏ., எம்.எஸ்., எம்.க்பில்., எம்.எட்.
இயக்குநர்
தென்னிந்திய வரலாற்று ஆய்வு மையம்
அரவக்குறிச்சி-639 201
கரூர் மாவட்டம்
கைப்பேசி எண்: 94431 79510



**வ.ஜெய்கிருஷ்ணன்,** எம்.ஏ.சமூகவியல்.
வனத்துறை(ஓய்வு)
60/1. சித்தி விநாயகர் தெரு,
தியாகராசர் நகர்,
சென்னை-17
கைப்பேசி எண்: 8072607597